


படைப்பு

ஊற்று: 1 | நதி: 7 | நவம்பர் 2018 | திங்களிதழ்


# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

## "இன்றைக்குப் புதுக்கவிதை ஒரு விடுதலையைத் தந்திருக்கிறது"

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களுடன் ஒரு நேர்காணல்



முத்துசாமி எனும் முழுமையான கலைஞர்
– பிருந்தா சாரதி




ழ என்ற பாதையில் நடப்பவன் – நூல் விமர்சனம்
– கார்த்திக் திலகன்



சங்கப்பாடல்களில் ஆண் பெண் நோக்கு – ஓர் ஒப்பீடு
– சக்தி ஜோதி

படைப்பு **தகவு**
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 1 | நதி: 7 | நவம்பர் 2018

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாக மேலாளர்:
**சகா (சலீம் கான்)**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**
**தனபால் பவானி**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**கொ.வடிவேல்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
**padaippugal@padaippu.com**

இணையதள முகவரி:
**www.padaippu.com**

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள்
அவரவர் கருத்துக்களே.
கதை மற்றும் கவிதைகளின்
கருத்துக்கள் கற்பனையே,
படைப்பு தகவு மின்னிதழின்
கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** - பக். 04
- **“இன்றைக்குப் புதுக்கவிதை ஒரு விடுதலையைத் தந்திருக்கிறது”**
  - கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களுடன் ஒரு நேர்காணல் - பக். 05
- **முத்துசாமி எனும் முழுமையான கலைஞர்**
  - பிருந்தா சாரதி - பக். 16
- **சிலேட்டுக்குச்சி**
  - கட்டாரி - பக். 22
- **இலக்கியத்தின் தோரண வாயில்**
  - தா. ஜோ. ஜூலியஸ் - பக். 25
- **கவிதையின் வடிவம் செங்குத்து - நூல் விமர்சனம்**
  - கார்த்திக் திலகன் - பக். 28
- **பல படைப்பாளிகளை உருவாக்கிய படைப்பாளி**
  - பொன். குமார் - பக். 31
- **நல்லாசிரியர் சுகன்**
  - பொ.முத்துவேல் - பக். 33
- **பாஷோவின் பழைய குளம்**
  - முகம்மது பாட்சா - பக். 35
- **சங்கப்பாடல்களில் ஆண் பெண் நோக்கு - ஓர் ஒப்பீடு**
  - சக்தி ஜோதி - பக். 39
- **சிறுவர் இலக்கியம் - ஒரு பார்வை**
  - கல்வெட்டு சொர்ணபாரதி - பக். 46
- **உயர்த்தியது தமிழ்**
  - முனைவர் ஹாஜாகனி - பக். 48
- **இளநீரும் இலக்கியமும்- பொள்ளாச்சியில் ஒரு இலக்கியக் கொண்டாட்டம்**
  - கோ.லீலா - பக். 55

- **ஈரிருநாள் இலங்கை**
  – தமிழ்பாரதன் – பக். 56
- **உள்ளதைச் சொல்! உண்மையைச் சொல்!**
  – பழநியப்பன் கிருஷ்ணமூர்த்தி – பக். 63


## சிறுகதைகள்


- **குளம்**
  – நா.விச்வநாதன் – பக். 18
- **தாஜ் மஹால்**
  – பிரேமபிரபா – பக். 51
- **பொன்னகரம்**
  – புதுமைப்பித்தன் – பக். 60


## கவிதைகள்


- **விக்கிரமாதித்யன்** – பக். 15
- **நின்ற வாகனமும் நிற்காத விரைவும்**
  – துரை. நந்தகுமார் – பக். 24
- **படைப்புலகம்** – பக். 44
- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 2**
  – ஜின்னா அஸ்மி – பக். 54
- **வாழ்ந்து கெட்ட வீடு**
  – ஹரணி – பக். 62






# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' ஏழாம் மின்னிதழ் உங்கள் கண்முன் ஒளிவீசிப் பரந்துவிரிந்திருக்கிறது.

வானம்பாடி இயக்கக் கவிஞர்களில் முதன்மையானவர் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம். அன்றுதொட்டு இன்றுவரை கவிதைச்சூழலில், கல்விச்சூழலில் அவ்வக்காலத்திற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக்கொண்டு தொடர்ந்து இயங்கிவருபவர். அவருடனான உரையாடல் கவிதை பற்றியதாக மட்டும் அமையாமல் அக்கவிதை எழும் சமூகம் குறித்த பல்வேறு பரிமாணங்களை நமக்கு உணரவைப்பதாய் உள்ளது. வானம்பாடி இயக்கம், ஆசிரியர் சங்கம், தமிழ் மொழிபெயர்ப்பு, சிற்பி அறக்கட்டளை போன்றன தமிழ்ச்சூழலில் தோற்றம் பெற்ற வரலாற்றைக் கூறும் ஆவணங்களாய் இவரது கருத்துக்கள் அமைந்துள்ளன. பாரதியார் மீதான அவரது தீவிரப்பற்று பாரதியின் சமூகக் கண்ணோட்டம் சார்ந்ததாயிருக்கிறது. சாகித்ய அகாதமி நிறுவனத்தில் நீண்ட காலம் செயலாற்றிவந்துள்ள இவர், அந்நிறுவன அமைப்பு குறித்த தெளிவான புரிதலை ஏற்படுத்துகிறார். இன்னமும் எழுதத் துடித்துக்கொண்டிருக்கிற அந்த வானம்பாடிக் கவிஞரின் நேர்காணல் இவ்இதழில் சிறப்புற இடம்பெற்றுள்ளது.

ந.முத்துசாமி தமிழ்க் கலையுலகின் ஆகச்சிறந்த ஆளுமைகளில் ஒருவர். நாடகம், கூத்து குறித்த தீவிர இயங்குதளத்தில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். தமிழின் ஆதிக்கலை அழிந்துவிடாமல் கைகொடுத்துநின்றவர். அவரது வாழ்வினைக் கலைவரலாறு பேசிநிற்கும்.. இங்கு அவரது மறைவினைப் பிருந்தாசாரதி பேசியிருக்கிறார். அக்கலைஞரின் இறப்பு தந்த வலிகூட, பிற கலைஞர்களால் கலையாக மடைமாற்றம் செய்யப்பட்டிருந்தது.. அவர்தம் கலையுணர்விற்கான நல்அஞ்சலியாக இருந்தது.

முதல் இதழிலிருந்து வெளிவரும் தொடர்களான பாஷோவின் பழைய குளம், ஈரிருநாள் இலங்கை ஆகியன இவ்இதழில் நிறைவுபெறுகின்றன. ஹைக்கூ குறித்த பெரும்புரிதலைத் தந்துள்ள தொடர் 'பாஷோவின் பழைய குளம்'. ஹைக்கூ என்ற இலக்கிய வகைமை ஜப்பானில் தோன்றிய சூழல், அஃதொத்த பிற வடிவங்கள், ஜப்பானிய ஹைக்கூ ஆளுமைகள், தமிழில் ஹைக்கூவின் வளர்நிலை என ஹைக்கூவிற்கான அனைத்து நோக்குகளையும் அத்தொடர் குறிப்பிட்டுவந்துள்ளது. ஹைக்கூ பற்றிய தமிழின் இன்றியமையாக் கட்டுரைகளில் இதுவும் இணைந்துநிற்கும். 'ஈரிருநாள் இலங்கை', ஒரு மாணவர் இலங்கை சென்று வென்ற அனுபவங்களைக் கூறும் ஒரு தொடராய் அமைந்திருந்தது. போட்டியைச் சந்திக்கும் ஓர் இளமனதின் எளிய உணர்வுநிலைகளை அக்கட்டுரைத்தொடர் இனிமையாய்ச் சித்தரித்திருந்தது.

ஒரு நல்ல அங்கீகாரம் படைப்பிற்கான சிறப்புநிலையைச் சற்றே உயர்த்திவிடும். இலக்கிய உலகில் உலகளாவிய அங்கீகாரங்களுள் தலைசிறந்தது 'நோபல் விருது'. பலரின் இலட்சியமாகக் கூறப்படும் இந்த விருது மற்றும் விருதுபெற்ற இலக்கிய ஆளுமைகள் குறித்து ஆராயும் தொடர் 'இலக்கியத்தின் தோரணவாயில்' இவ்இதழில் தொடங்குகிறது. சிறுவர் இலக்கியம் தமிழில் வளர்ந்துள்ளவிதம் குறித்த கட்டுரை இவ்இதழில் இடம்பெற்றுள்ளது.

இவ்இதழின் மாத்தனிச்சிறப்பு.. 'ஆதி'க்கவிஞர் விக்கிரமாதித்யனின் கவிதை. இன்னும் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள்.. உங்களுக்காக.

இதழை வாசியுங்கள்.. விமர்சனம் செய்யுங்கள்.. விவாதப்படுத்துங்கள்.

நன்றி.

– **ஆசிரியர்**

• கவிஜி
உதவி : காதலாரா



# “இன்றைக்குப் புதுக்கவிதை ஒரு விடுதலையைத் தந்திருக்கிறது”

## கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களுடன் ஒரு நேர்காணல்

கோவையின் அடையாளங்களில் ஒருவர். மிகச்சிறந்த கவிஞர், எழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர் மற்றும் இதழாசிரியர். மொழி பெயர்ப்புக்காகவும் படைப்பிலக்கியத்துக்காகவும் இருமுறை சாகித்ய அகாதமி விருது பெற்றவர். கிட்டத்தட்ட இருபது கவிதை நூல்கள், மூன்று புதினங்கள், எட்டு வாழ்க்கை வரலாறு, மூன்று உரைநடை நூல்கள், இன்னும் பல என்று வாழ்நாளெல்லாம் எழுதி... இப்போதும் எழுதிக்கொண்டிருப்பவர். ஆகச்சிறந்த இலக்கியவாதி. ஒரு காலை வேளையில் வானம்பாடி இயக்கம், மொழிபெயர்ப்பின் நுட்பங்கள், செய்துவந்த பணிகள், சிறுவயது நினைவுகள், ஆசிரியர் சங்கம், பள்ளிப்படிப்பு மற்றும் சிற்பி அறக்கட்டளை குறித்து என்று பேசியதிலிருந்து.....

**வானம்பாடி இயக்க முன்னோடி நீங்கள்.. அது பற்றி, உங்கள் அனுபவம் குறித்துச் சொல்லுங்கள்...!**

வானம்பாடி தொடங்கிய காலம்.. திராவிட இயக்க ஆட்சி தொடங்கிய காலம். ஆனால், அந்த ஆட்சி ஏமாற்றமாக இருந்தது. தமிழ்மொழி, பண்பாடு, மக்களின் பொருளாதாரம் குறித்த பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதில் வேகமும் விவேகமும் இல்லாமல் தெரிந்தது. அதனால் தமிழர்களைத் தமிழர்களே ஆளும் நிலையில் பெரிய நன்மைகள் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துப்போனது. பொய்த்துப்போன சூழ்நிலையில் எங்களின் இலக்கியப் பார்வையும் மாறியது. எங்கள் என்று நான் சொல்கிறபோது

கோவையில் இருந்த கவிதைப் படைப்பாளிகள், அவர்களோடு இணைந்து நானும் செயல்பட ஆரம்பித்தது குறித்துத்தான். கோவையை மையமாகக் கொண்டுதான் இதனுடைய தொடக்கம், பின்னால் பல பேர் வந்து சேர்ந்தார்கள். பெரும்பாலும் நாங்கள் தமிழாசிரியர்கள்தான். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பணியாற்றக்கூடிய தமிழாசிரியர்கள். அப்போ ஒரு புகலிடம் வேணுமே.. அரசியல் தோற்றுப் போனாலும் அதற்கு ஒரு மாற்று அரசியல் வேண்டுமேன்னு அலைபாயுற அந்த நேரத்துல, ஏற்கெனவே தொழிலாளர் இயக்கங்கள் மையமாக இருந்த கோவையில எளிய மக்களிடம் கூட மார்க்சியம் பற்றிய ஒரு பார்வை இருந்த நேரம்... ஆகவே மார்க்சியம் நமக்கு ஒரு தீர்வாக இருக்கும்ன்னு நம்புனோம். ஒரு சிலர் மார்க்சியத்தில தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருந்தார்கள். அப்போ அந்தத் திசையை நோக்கித் திரும்பினோம்.

அந்தச் சமயத்துல "எழுத்து" "கசடதபற" இதழ்களில் புதுக்கவிதை அறிமுகமாகி வளர்ந்திட்டு இருக்குது. அவர்கள் மரபுக் கவிதைகளை மறுக்கும்போது வெறும் யாப்புக் கவிதைகளை மட்டும் மறுப்பவர்களாக இல்லை. அதற்குப் பதிலாகச் சமூக உள்ளடக்கங்களையும் அவர்கள் பெரியதாக எடுத்துக்கொள்ளவில்லை. அதை ஆதரிப்பவர்களாகவும் காணப்படவில்லை. மன உளைச்சலைத்தான் கவிதைகளாக மாற்றவேண்டும் என்ற பார்வை அவர்களிடம் இருந்தது. அவரவர்கள் மன உளைச்சலைச் சொல்லிக் கவிதைகளை உருவாக்குவது, அவர்களே பேசிக்கொள்வது, அவ்வளவு சிறப்பாக இருக்காது என்பதை நாங்கள் உணர்ந்தோம். ஆகவே மக்கள் பிரச்சினைகளை, சமூகச் சிக்கல்களைக் கவிதைகளாகவும் கதைகளாகவும் படைப்பதுதான் சரியாக இருக்கும் என்று பல விவாதங்களுக்குப் பிறகு நாங்கள் முடிவு செய்தோம். அதற்காக மார்க்சியத்தின் நிழலில் ஒதுங்கினோம். தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ள தமிழாசிரியர்கள் எல்லாம் புலவர்களாகவும், பண்டிதர்களாகவும், பழமை நோக்கு உள்ளவர்களாகவும் வளர்ந்து கொண்டிருந்த நேரம், கோவை தமிழாசிரியர்கள் மட்டும் வேற பார்வை உள்ளவர்களாக இருந்தார்கள். இது குறிப்பிடத்தகுந்த அம்சம்.

கோவையில் "வானம்பாடி" தோன்றுவதற்கு முன்னால் நிறைய இலக்கிய அமைப்புகளும் இருந்தன. பச்சையாக அரசியல் பேசக்கூடிய அமைப்புகளும் இருந்தன. புது இலக்கியங்களை அறிமுகம் செய்யவேண்டும் என்ற பார்வையுடைய "பூம்பொழில்" இலக்கிய வட்டம் மாதிரியான அமைப்புகளும் இருந்தன. சிந்தனையாளர் மன்றம்.. இப்படிப் பல அமைப்புகள் இருந்தன. கடும்விவாதங்கள் நடைபெற்ற காலகட்டம் அது. அந்தச் சமயத்தில் பூம்பொழில் இலக்கிய வட்டத்தைச் சேர்ந்த "முல்லை ஆதவ"னும் வேறு சில இலக்கிய நண்பர்களும் சேர்ந்துதான், 'நாம ஒரு பத்திரிக்கை துவங்கலாம்'ன்னு முடிவு பண்ணாங்க. அந்தப் பத்திரிக்கை இந்த வடிவம்ன்னு அவுங்க கருதல. அது பற்றி விரிவாகப் பேசிக்கொள்ளலாம்னு மற்றொரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். அந்த நிகழ்ச்சியில இருந்துதான் நான் அதுல கலந்துக்கறேன். அப்போதான் வானம்பாடி இதழைக் கொண்டு வருவதுங்கிற கருத்து தோன்றியது. எப்படிப்பட்ட படைப்புகள் கொண்டுவரவேண்டும் என்பது பற்றி நிறைய பேசினோம்.

அதில் அசல் மார்க்சியத்தைக் கற்றவர்களின் கை ஓங்கியிருந்தது. அதன்பிறகு இந்த இதழே ஒரு இயக்கமாக இந்த இயக்கமே ஒரு இதழாக, அந்த அடிப்படையில்தான் செயல்பட ஆரம்பித்தது. இதில் எல்லோருமே மார்க்சியவாதிகள் அல்ல. காந்தியக் கண்ணோட்டம் இருந்தவர்கள் இருந்தார்கள். வேறு கண்ணோட்டம் இருந்தவர்களும் இருந்தார்கள். ஆனால் அனைவருக்குமே அன்று நிலவிய தமிழ்நாட்டு அரசியலில் பிடித்தம் இல்லாமல் இருந்தது. போதுமானதாக அரசியல் இல்லை. எதிர்பார்த்த உயரத்திற்கு அது செல்லவில்லை என்ற பார்வை அனைவருக்கும் இருந்தது. அரசியல் கண்ணோட்டம் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல.. அரசியல் கண்ணோட்டம் இல்லாதவருக்கும் இந்தப் பார்வை இருந்தது. அப்போது என்ன செய்யலாம் என்று முடிவு செய்தபோது இதன் வெளிப்பாடாக இதழைக் கொண்டு வரலாம் என முடிவு செய்தோம். அதற்கு "வானம்பாடி" எனப் பெயர் வைக்கலாம் என்று "கவிஞர் இளமுருகு" சொன்னார்.

"வானம்பாடி என்பது கொஞ்சம் ரொமான்டிக்காக இருக்கு.. நாம நினைக்கிற ரியாலிட்டிக்கு அது பொருந்தாத மாதிரி இருக்கு.

நாம மண்ணைப் பற்றிப் பாடுகிறோம். அதனால மானுடம் பாடும் வானம்பாடி அப்படின்னு வைக்கலாம்"னு நான் சொன்னேன். வானம்பாடி இதழில் "வானம்பாடி" பெருசா இருக்கும். "மானுடம் பாடும்" விலையிலாக் கவிமடல் அப்படின்னு சின்னதா இருக்கும். அதுக்கு விலையும் நிர்ணயம் செய்யப்படவில்லை. யார் என்ன நினைக்கிறார்களோ அதைக் கொடுக்கலாம். இப்படி எழுந்ததில் புதிய பரிசோதனை செய்யும் எண்ணமும் வந்தது. மலையாளக் கவிதைகள் எனக்குக் கொஞ்சம் தெரியும். இன்னும் மலையாளம் தெரிந்த நண்பர்களும் இருந்தார்கள். அவர்களும் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். இப்படித்தான் வானம்பாடியின் தோற்றம் உருவானது என்று சொல்லலாம்.

சில இதழ்களைப் பொள்ளாச்சிக்குக் கொண்டுவந்து, நான் நடத்தினேன். கடைசி சில இதழ்களுக்கு நான் எடிட்டராக இருந்தேன். அந்தச் சமயத்தில் நான் செய்த மாற்றம் நேர்முகங்களை வெளியிடுவது. அப்புறம் மொழிபெயர்ப்புகளைக் கொண்டுவருவது. இரண்டு நோக்கத்தையும் அதுல செயல் படுத்தினோம். எனக்கு மலையாளம் தெரிஞ்சதனால நிறைய மலையாளக் கவிதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டோம். அந்த நேரத்துல சுகுமாரன் சில மொழிபெயர்ப்பு செய்து கொடுத்திருக்கிறார். தருமு சிவராம் பேட்டி கூட போட்டோம். முதல்ல வானம்பாடியைக் கடுமையா விமர்சனம் பண்ணவரு அவரு. பேட்டி குறித்து நிறைய விமர்சனங்கள் வந்தன. தி.க.சி. உள்படப் பலர் கடிதம் எழுதியிருந்தார்கள். அதை நாங்க அடுத்த இதழ்ல போட்டோம். ஒரு காலகட்டத்தில் வானம்பாடி நின்றுபோனது.

**1989இல் இருந்து 1997 வரை பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்திருக்கிறீர்கள். அந்தக் காலகட்டத்தைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்களேன்...!**

ஏறக்குறைய 89லிருந்து 97வரை பாரதியார் பல்கலைக்கழகத்தில் இருந்தேன். இந்தக் கல்லூரி வாழ்க்கைக்கும் பல்கலைக்கழக வாழ்க்கைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உள்ளது. கல்லூரியில் மாணவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அதிக மாணவர்களோடு ஆயிரக்கணக்கான மாணவர்களோடு ஒரு ஏழாயிரம் எட்டாயிரம் மாணவர்களின் வாழ்க்கையோடு தொடர்பு இருக்கும். பல்கலைக் கழகத்தில் முதுகலை மாணவர்கள் மட்டும்தான் மொத்தமாக இருபது, இருபத்தைந்து பேர்தான் இருப்பாங்க. அவங்க டிகிரி வாங்கணும், அதுக்காக நம்மகிட்ட பேசுவாங்க. இங்கு அப்படி இல்லை. ஆசிரியரை ஆசிரியர் என்ற பண்பாட்டிற்கு நேசிப்பார்கள். உலகில் நிறைய இடங்களில் இருக்கக்கூடிய மாணவர்கள் இப்போதும் என்னிடம் பேசுகிறார்கள். இந்த வாய்ப்பு கல்லூரியில் கிடைத்த அளவு பல்கலைக்கழகத்தில் கிடைக்கவில்லை. அது ஒரு வேறுபாடு. இரண்டாவது, கல்லூரி அதிக ரசனையோடு இலக்கியத்தைச் சொல்லிக் கொடுக்கக்கூடிய களம். பல்கலைக்கழகத்தில் நேரத்தை எப்படிச் செலவிடுவது என்று நாமதான் முடிவு பண்ணணும். பல்கலைக்கழகத்தில் வெளிஉலகம் போக வாய்ப்புகள் கிடைத்தன. ஆய்வு மேற்கொள்வதற்கு, ஆய்வு மாணவர்களை உருவாக்குவதற்குப் பல்கலைக்கழகம் சிறந்த தளமாக இருந்தது.



**சிற்பி அறக்கட்டளையின் செயல்பாடுகள் குறித்து...?**

சிற்பி அறக்கட்டளை விருதுகள் அறிவிக்கப் பட்டு முதல் விருது அப்துல் ரகுமானுக்குக் கொடுத்தோம். என் மணிவிழாவிலே கொடுத் தோம். 'அ'கரத்தில் தொடங்குவதற்காக அப்துல் ரகுமானுக்குக் கொடுக்குறோம்னு சொன்னோம். கவிதைத் துறையில் பணியாற்றும் கவிஞர்களுக்குச் சரியான அங்கீகாரம் இல்லை என்கிற ஒரு குறைபாடு இருந்தது. அதற்காகத்தான் இந்த விருது கொடுக்க ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு 23வது ஆண்டு. 25வது ஆண்டிலிருந்து என்னுடைய குடும்பத்திடம் ஒப்படைக்கலாம் என்று இருக்கிறேன்.

**ஆசிரியர் சங்கம்.......?**

பொள்ளாச்சிக் கல்லூரியில் பணியாற்றிய நேரம் அது. அந்தச் சமயத்தில் ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்று ஒன்று தொடங்கினோம். ஏ யூ டி ன்னு அதுக்குப் பேரு. அதுக்குக் காரணம் சில ஆசிரியர்களை வேலையில் இருந்து நீக்கினார்கள். அப்போது முழுக்கத் தனியார் நிர்வாகத்தின்கீழ்தான் கல்லூரிகள் இருந்தன. அரசாங்கச் சம்பளம் கிடையாது. தனியார் நிர்வாகமே சம்பளம் கொடுத்த காலம். அப்போது அவர்கள் நினைத்தால் யாரை வேண்டுமானாலும் போகச் சொல்லலாம். பெரிய காரணம் கிடையாது. காரணமே இல்லாமல் நிறைய பேரை வெளியே போகச் சொன்னார்கள். அப்போது ஆசிரியர் களுக்கு என்ன பாதுகாப்பு என்ற கேள்வி எழுந்தது. அப்போது இதற்கென்று தனியான அமைப்புகள் இல்லை. தமிழ்நாட்டில் ஏ யூ டி என்ற அமைப்பு சென்னையில் இருந்தது. அசோசியேஷன் ஆப் யுனிவர்சிட்டி டீச்சர்ஸ். அது சென்னையிலுள்ள கல்லூரி ஆசிரியர் களுக்குப் பாராட்டு, ஆசிரியர்கள் ஓய்வு பெற்றால் அவர்களுக்கு நிதி அளிப்பு, பரிசளிப்பு கொடுத்து அவர்களை வழியனுப்பும் செயலைச் செய்தது. இந்தப் பணியை மட்டும்தான் அது செய்தது. அது ஒன்றும் தொழிற்சங்க உருவாக்கத்துடன் தொடர்புடையது அல்ல.

இங்கிருந்து சென்னைக்குப் பணிக்குச் சென்ற ஒருவர் இதைப் பற்றிச் சொன்னார். நாங்கள் அடிக்கடி இதைப் பற்றிப் பேசிக்கொள்வோம். ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருப்பது பற்றிய விவாதம் தொடர்ந்துகொண்டே இருந்தது. அப்போது அவர், "இங்கு ஒரு அமைப்பு இருக்கு..... அதோடு நாம் தொடர்பு கொள்ளலாம்" என்று சொன்னார்.

அவர்களோடு தொடர்புகொண்டு, "உங்கள் கிளை என்று எங்களைச் சொல்லிக்கொள்ள அனுமதியுங்கள். நிர்வாக அச்சுறுத்தலுக்காகத் தான் இதைச் செய்கிறோம். அதற்கு மட்டும் அனுமதி கொடுங்கள்" என்றோம். "நீங்க என்ன வேணாலும் பண்ணிக்கோங்க. இதுக்கு ரூல்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ் ஏதுமில்லை. தலைவர் செயலாளர் யாரும் கிடையாது. எந்த விதிகளும் கிடையாது. நாங்களாப் பேசி ஒவ்வொரு வருடமும் ஒரு காலேஜ் செயலாளர் அப்படின்னு



இருக்கோம்" என்றனர். இதில் முதல்வர்களும் உறுப்பினராக இருந்தார்கள். இதே சமயத்தில் வேறு சில தனியார் கல்லூரிகளுக்கும் இதே சிக்கல் இருந்தது. சிக்கல் இருந்த கல்லூரிகளில் சில கிளைகளை ஆரம்பித்தார்கள். நாங்கதான் முதன்முதலில் இதை ஆரம்பித்தோம். இதில் சேர மற்ற கல்லூரி ஆசிரியர்கள் பயந்தார்கள். நமக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று அஞ்சினார்கள். இதற்கு இடையில் எங்களைத் தனியார் சம்பளத்திலிருந்து அரசாங்கச் சம்பளத்திற்கு மாற்றினார்கள். அரசாங்கமே நேரடியாகச் சம்பளம் கொடுக்கும் நடைமுறை வந்தது. அப்போது கொஞ்சம் சுதந்திரம் வந்தது. அப்போது இன்னும் சிலர் சேர ஆரம்பித்தார்கள். சங்கம் வலுவடைய ஆரம்பித்தது. அது ஆரம்ப காலம். பின்னால் அது பெருஇயக்கமாக மாறியது. இன்று ஜாக்டோ ஜியோ உருவாவதற்கு மூலம் அது.

**நீங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரும் கூட... அது பற்றிப் பேசுங்களேன்...!**

நமது தமிழ்மொழியின் தொடக்ககால, நமக்குக் கிடைக்கக்கூடிய, ஆதி நூல் தொல்காப்பியம்தான். தொல்காப்பியத்திலேயே பல பகுதி இருக்கு. அதுல முதல்நூல்.. வழிநூல் என்று கூறி அதன் இலக்கணத்தையெல்லாம் தொல்காப்பியர் சொல்றார். அப்படிச் சொல்லும்போது ஒரு மூலநூலில் இருந்து நம்ம வழிநூல்களைப் பண்ணலாம். வேறு மொழிகளில் இருந்ததுனா அதை மொழிபெயர்த்து நாம பயன்படுத்திக் கொள்ளலாம்னு சொல்றார். மொழிபெயர்ப்புங்கிற சொல்லே அவர்தான் முதல்ல கையாள்றாரு. 'மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்', மொழிபெயர்த்து அதனுடைய பொருள் விளங்கும்படியாகச் செய்தல்ன்னு சொல்றாரு. மொழிபெயர்ப்பு என்ற சொல்லே மிகப் பழமையானது. தொல்காப்பியத்தின் காலம் எந்தளவு பழையதோ அந்தளவு பழமையான சொல் அது. பொதுவாக இந்தியாவைப் பொறுத்தவரை சமஸ்கிருதத்தில் இருந்து மொழிபெயர்ப்பதுதான் மொழிபெயர்ப்பாக இருந்தது. வேறு மொழிகளில் இருந்து மொழிபெயர்ப்பதற்கான வாய்ப்பு சமீப காலத்தில்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, 20ஆம் நூற்றாண்டுக்கு முன்னமே மொழிபெயர்ப்புகள் வந்துவிட்டாலும் கூட மொழிபெயர்ப்புக்கான தேவைகள் 20ஆம் நூற்றாண்டுலதான் அதிகமாச்சு. நாவல் சிறுகதைகள் பற்றிய அறிமுகமே அப்பதான் வருது. பிறநாட்டு மொழிகளை மொழி பெயர்த்தலுக்கான வழிவகைகளை முதல் மொழிபெயர்ப்பாளர்கள் கையாண்டார்கள். உதாரணமா, சுத்தானந்த பாரதி. அவர் பிரெஞ்சு மொழியை நேராகத் தெரிஞ்சவரு. பிரெஞ்சு மொழியிலிருந்து 'விக்டர் ஹியூகோ'வினுடைய 'ஏழை படும் பாடு' போன்ற நூல்களை எல்லாம் மொழிபெயர்த்தார். அப்படிச் சொல்வதை விட மூலநூலினுடைய சுருக்கத்தைத் தந்தார். அது இன்னும் கடினமானது. ஏன்னா, சாரத்தை அப்படியே சுருக்கத்துல கொண்டுவரணும். முக்கிய பகுதிகள் விடுபடாம இருக்கணும். அதேபோல ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்ப்புகள் செய்யும் முயற்சி தமிழில் இருந்தது. அதே சமயத்துல ஹிந்தியில இருந்தும் வங்காளத்துல இருந்தும் வர ஆரம்பிச்சுது. மராத்தியில இருந்து 'காண்டேகர் கா ஸ்ரீ ஸ்ரீ பண்ணாரு. வங்காளத்துல இருந்து த.நா.குமாரசாமி, த.நா.சேனாதிபதி போன்றவர்கள் பண்ணாங்க. சரஸ்வதி ராம்நாத் போன்றவர்கள் ஹிந்தியில இருந்தும் பண்ணாங்க. தெலுங்கு கன்னடத்திலருந்தும் பண்ணாங்க.

இப்போ நமக்கு விழிப்புணர்வு வந்திருக்கிறது... பிற மொழி இலக்கியங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று. அரசியல்ரீதியாகப் பார்க்கும் போதும் நமக்கு மொழிபெயர்ப்புகள் வந்திருக்கு. உதாரணமா இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வளரும்போது அதனுடைய வளர்ச்சிக்கு சோவியத் யூனியனுடைய உதவி பெருமளவு இருந்தது. அவுங்க என்ன செய்தாங்கன்னா... சோவியத் இலக்கிய மொழிபெயர்ப்புக்கு வேண்டிய உதவிகளைச் செஞ்சாங்க. அதன் மூலமாகத்தான் டால்ஸ்டாய், தாஸ்தாவெஸ்கி, செக்காவ் போன்றோரின் நூல்கள் நிறையவே வந்தன. அப்படி வந்த நூல்கள் அரசியல்ரீதியான வழியில் வந்தவை. ஆனால் இலக்கியப் படைப்புகளாக நமக்கு வந்து சேர்ந்தன. இப்படி மொழிபெயர்ப்புகள் பல திசைகளில் இருந்து வர ஆரம்பித்தன. தெலுங்கு கன்னடம் மலையாளம் போன்ற அண்டை மொழிகளின் ஊடாட்டம் என்னன்னு நமக்குத் தெரியாதுங்கற சூழல்ல மொழிபெயர்ப்புகள் அதற்கான வாசல்களைத் திறந்துவைத்தன. மலையாளமொழி வளர்ந்ததே

மொழிபெயர்ப்புகளால்தான். மலையாளமொழி சில சமயத்துல நம்மைத் தாண்டிப் பயணம் செய்வதற்குக் காரணம் அங்கே ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருந்தவர்கள் நிறைய மொழிபெயர்த்தார்கள். முதலில் துப்பறியும் கதைகளாகத்தான் வந்தது. போகப்போக, வாசகர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க ஆழமான புத்தகங்களை எல்லாம் மொழி பெயர்க்க ஆரம்பித்தார்கள்.

அப்போ மொழிபெயர்ப்பு ரெண்டு விதத்துல நமக்கு உதவுது. ஒன்னு...மற்றவர்கள் எப்படி யெல்லாம் படைப்புகள் செய்கிறார்கள் என்று நாம தெரிஞ்சுக்கறோம். இன்னொன்னு....அதன் மூலமாக நாம கதை கட்டுரை நாடகம் எழுதுவதுல புதிய உத்திகளைக் கற்றுக்கொள் கிறோம். நம்மகிட்டயும் நாடகம் இருந்திருக்கு. ஆனா புதிய உத்திகளை வெளிநாட்டில் இருந்துதான் தெரிஞ்சுக்கறோம். உத்திகளைத் தெரிந்துகொள்வதற்கும், சர்வதேச இலக்கியப் போக்குகளை நாம் கண்டறியவும் மொழி பெயர்ப்பு நமக்கு உதவியாக இருக்குது. மொழிபெயர்ப்பு சிறப்பா இருக்கணும்னா ஒருவனுக்கு மூல மொழியிலயும் பயிற்சி இருக்கணும். இலக்கு மொழி எதுவோ அதுலயும் பயிற்சி இருக்கணும். எந்த மொழியில உங்களுக்கு அதிகப் பயிற்சி இருக்குதோ அந்த மொழியை நோக்கித்தான் மொழிபெயர்ப்பு இருக்கணும். பிற மொழிகளை நம் மொழிக்கு மொழிபெயர்ப்பது போல நம் நூல்களைப் பிற மொழியிலும் மொழிபெயர்க்க வேண்டும். அதனாலதான் பாரதியார், "இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்...மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை..." அப்படினு சொல்லிட்டு, "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.. திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்"னாரு. அவரே அந்த முயற்சிகளைச் செய்திருக்கிறார். நிறைய பண்ணவில்லை. அவரும் கொஞ்சம் மொழி பெயர்ப்பு பண்ணியிருக்கிறார்.

மொழிபெயர்ப்புகள் தெளிவோடு இருக்க வேண்டும். இல்லையெனில் தோற்றுவிடுவீர்கள். மொழிபெயர்ப்பில் கூடுதல் கவனம் வேண்டும். உதாரணத்துக்கு, இரண்டாம் உலக யுத்தத்தின் போது அது முடிவில்லாமல் நீண்டுகொண்டே இருந்தது. அதனுடைய கடைசிக் காலத்துல ஜப்பான் சண்டை போட்டுக்கிட்டே இருக்கான். அவனோட பொருளாதார நிலை தடுமாறின போது சண்டையை நிறுத்திடலான்னு நினைக்கறான். ஆனா ப்ரஸ்டீஜ்னால சரணடையாம இருக்கான். அப்போ அமெரிக்கா சரணடைகிறீர்களா இல்லையா என்று கடிதம் அனுப்புகிறது. சரணடைவது என்று முடிவு பண்ணிச் சரணடைகிறோம்னு பதில் அனுப்பறான் ஜப்பான்காரன். ஆனா மொழி பெயர்த்தவர்கள் சரணடைய மாட்டோம்னு மொழிபெயர்த்துட்டாங்க. அதுக்கப்புறம்தான் அணுகுண்டு போடும்படியான சூழ்நிலை வந்தது. மொழிபெயர்ப்பு சரியா இருந்திருந்தா இவ்ளோ பெரிய கொடூரம் நடந்திருக்காது.

**சாகித்ய அகாதமியில் பொதுக்குழு / தமிழ் ஆலோசனைக்குழு உறுப்பினர் ஆக இருந்திருக்கிறீர்கள். அதன் அனுபவம் குறித்து...?**

சாகித்ய அகாதமியில முன்பு ஐந்தாண்டுகள் இருந்தேன். பிற்காலத்துல இன்னும் ஐந்து ஆண்டுகள் இருந்தேன். இப்போதும் இருக்கிறேன். இதுல முறை எப்படின்னு கேட்டா, ஒவ்வொரு மொழிக்கும் உறுப்பினர்கள் பொதுக்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்தப் பொதுக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையில் மூன்று பேரைப் பரிந்துரைக்கலாம். எல்லாப் பல்கலைக் கழகமும் பரிந்துரைக்காது. சிலர் பெருசாகக் கருதமாட்டார்கள். அதுல பத்திருபது பேர் வருவாங்க. அதிலிருந்து ஒருத்தரை அந்தப் பொதுக்குழு தேர்ந்தெடுக்கும். பதவி விலகுகிற பொதுக்குழு ஒரு டிசம்பரில் பதவி விலகும். அதே சமயம் அடுத்த ஐந்தாண்டுகளுக்கான பொதுக்குழுவைத் தேர்ந்தெடுக்கும்.

ஒன்று பல்கலைக்கழகம், இன்னொன்று இலக்கிய அமைப்புகள். இலக்கிய அமைப்புகள்ன்னு சொன்னா.. திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் போன்று அதுல ஒரு பட்டியல் இருக்கு. அவங்க பரிந்துரைக்கக்கூடியதுல இருந்து ஒருத்தரை எடுப்பாங்க. ஒவ்வொருத்தரும் மூணு மூணு பேரைப் பரிந்துரைக்கணும்.

இப்போ ரெண்டாச்சுங்களா..... அடுத்து மூணாவது, பெரும்பாலான இந்திய மாநிலங்களில் மாநில சாகித்ய அகாதமி இருக்கும். கேரள

சாகித்ய அகாதமி, கர்நாடக சாகித்ய அகாதமி அப்படினு இருக்கும். அவங்க பரிந்துரைக்கலாம். அவங்க மூணு பேரைப் பரிந்துரைக்கலாம். தமிழ்நாட்டில் அப்படி இல்லை. தமிழ்நாட்டுச் சாகித்ய அகாதமின்னு ஒரு அமைப்பு கிடையாது. அப்படி இல்லாத இடங்களில் அந்த மாநில அரசு பரிந்துரைக்கும். தமிழ்நாடு அரசிலிருந்து மூணு பேரைப் பரிந்துரைக்கலாம். அப்ப ஒரு மொழிக்கு மூன்று உறுப்பினர்கள் ஆகுதா...... நாலாவது வகை என்னென்னா.... வெளியேறும் பொதுக்குழு இந்தியாவின் சிறந்த எழுத்தாளர்கள் அப்படின்னு 8 பேரை அவங்க தேர்ந்தெடுத்து மெம்பராப் பண்ணலாம். எல்லா மொழிக்கும் அந்த வாய்ப்பு கிடைக்காது. எட்டு பேருதானே மொத்தம். 23 மொழி இருக்கு. 15 மொழிக்கு இருக்காது. இப்படி நாலு வகையாத் தேர்ந்தெடுக்கப்படும். ஆனால் பெரும்பான்மையான மொழிக்கு மூன்று உறுப்பினர்கள் தான் இருப்பாங்க. இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் முதல் கூட்டத்துல ஒருங்கிணைப்பாளரைத் தேர்ந்தெடுப்பார்கள். பொதுக்குழு அனைத்தும் சேர்ந்துதான் இதை நிர்ணயம் செய்யும். யார் சொன்னாலும் பொதுக்குழு அங்கீகரித்தால்தான் தேர்வு செய்ய முடியும். இல்லன்னா.. பொதுக்குழுவிலே யாரேனும் வேற யாரையாவது சொன்னா அவருக்கு ஓட்டு விழுந்ததுன்னா அவரைத் தேர்வு செய்வாங்க.

ஒருங்கிணைப்பாளர் அப்படின்னா...... சாகித்ய அகாதமி நிகழ்வுகள், நூல் வெளியீடு, கருத்தரங்கம் ஆகிய பலவற்றையும் ஒருங்கிணைத்து நடத்தக்கூடியவர்கள். அந்த ஒருங்கிணைப்பாளர் சாகித்ய அகாதமி செயற்குழு உறுப்பினராக இருப்பார். அதுதான் அனைத்து முடிவுகளையும் எடுக்கக்கூடியது.

மூன்று பேர் அல்லது நான்கு பேர் அடங்கிய பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அதிலும் குறிப்பாக ஒருங்கிணைப்பாளர் ஒரு ஆலோசனைக்குழுவையும் உருவாக்கிக் கொள்ளலாம். ஆலோசனைக்குழு பத்து உறுப்பினர்களைக் கொண்டது.

இது, பெரும்பாலும் ஒருங்கிணைப்பாளர் செய்யக்கூடியது. ஆனால் மற்ற உறுப்பினர்கள் கருத்தையும் கேட்டுத்தான் செயல்படுவார்கள். ஆலோசனைக்குழுதான் கருத்தரங்கம் நடத்துவது, நூல் வெளியிடுவது இதையெல்லாம் ஆண்டுக்கு ஒருமுறை கூடி முடிவு செய்யும்.

இப்ப, நூல்கள் பரிசுக்கு எப்படித் தேர்வு செய்யப்படும்னா முதன்மையான விருது 'சாகித்ய அகாதமி'; அது சிறந்த நூல்களுக்குக் கொடுக்கக் கூடியது. இளம் எழுத்தாளருக்கும் விருது இருக்கு. 35 வயதிற்கு உட்பட்ட எழுத்தாளர்கள் தங்கள் நூல்களைச் சாகித்ய அகாதமிக்கு நேரடியாக அனுப்பலாம். அப்புறம் குழந்தை எழுத்தாளருக்கும் விருது இருக்கு. இதெல்லாம் புதுசா ஒரு ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னாடி தொடங்கியது. முதல்ல எல்லாம் ஒரே விருதுதான் இருந்தது.

இந்த விருதுக்கு அப்பால், பாஷா சம்மன் விருது இருக்கு. ஒரு மொழிக்குப் பெருந்தொண்டு செய்த அறிஞர்கள் சிலபேருக்கு மட்டும் கொடுப்பாங்க. அதுக்கான ஒரு குழு போட்டிருப்பாங்க. அந்தக் குழு முடிவு எடுக்கும். அப்புறம் பெல்லோஷிப் அப்படின்னு ஒன்னு இருக்கு. பெல்லோஷிப் விருதுக்கு முதுமையில் தான் தேர்ந்தெடுப்பார்கள். அது ஒரு வேக்கன்சி வந்தாதான் இன்னொருவர் எடுப்பாங்க. அதுக்கு ஒரு கமிட்டி இருக்கும். இதுதான் முடிவு செய்யும் நடைமுறை. ஒரு புத்தகம் தேர்ந்தெடுக்க என்ன பண்ணுவாங்கன்னா ஒவ்வொரு மொழியிலும் இரண்டு வல்லுநர்களைத் தேர்ந்தெடுத்து, அந்த வல்லுநர்கள்தான் பரிசுக்கு உரியவர்கள் பட்டியலைத் தயார் செய்வார்கள். ஒருத்தர் செஞ்சாச் சரியா இருக்காதுன்னு ரெண்டு பேர்கிட்ட தருவாங்க.

ஒருத்தர் ஏதாவது விடுபட்டிருந்தால் இன்னொருத்தர் நிரப்புவார் இல்லையா. இந்தப் பட்டியலை ஒரு வட்டத்துக்குச் சுற்றறிக்கை அனுப்புவாங்க. அது யார் என்று நமக்குத் தெரியாது. அதைச் சாகித்ய அகாதமி தேர்ந்தெடுக்கக்கூடிய வல்லுநர் குழுவுக்கு அனுப்புவாங்க. இந்த நூல்களில் நீங்கள் எதைப் பரிந்துரைக்கிறீர்கள்ன்னு கேட்பாங்க. அதே மாதிரி இந்த நூல்கள் பட்டியல், ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கும் தனித்தனியே வரும். அவர்களை, இந்த நூல்களில் சிறந்த இரண்டு நூல்களைப் பரிந்துரைங்க அப்படின்னு சொல்லுவாங்க. அந்த லிஸ்ட்ல இருந்தும் நீங்க சொல்லலாம். லிஸ்ட்ல ஒன்னும் நீங்க ஒன்னும் சொல்லலாம். அந்த லிஸ்ட் எனக்குப் புடிக்கல.. நான் இரண்டு பரிந்துரைக்கிறேன் அப்படின்னும் சொல்லலாம்.

இந்தப் பட்டியல் எல்லாமே சுற்றுக்கு விடப்பட்டுக் கடைசிப் பட்டியல் அகாதமிக்கு

வரும். அதுல ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இரண்டுக்கு மேற்பட்டவர்கள் பரிந்துரைத்த நூல்கள் என்று கடைசியாக ஒரு பட்டியலைத் தயார் செய்வார்கள். அந்தப் பட்டியல் ஜூரிகளாக இருக்கக்கூடிய மூணு பேருக்கு வரும். அவங்கதான் கடைசியா முடிவு பண்ணுவாங்க. இதுதான் நடைமுறை.

முந்தின வருடம் போட்ட புத்தகம், நிறைய பார்வைக்கு வராமல் இருக்கும். அதனால முதல் ஆண்ட விட்டுருவாங்க. அதுக்கு முன்னாடி இருக்கக்கூடிய ஐந்து வருடங்களில் போட்ட புத்தகங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வார்கள்.

**பின்னாளைய வாழ்வு எப்படி இருக்கவேண்டும் எனச் சிறுவயதில் ஏதும் தீர்க்கம் கொண்டது உண்டா...?**

பள்ளிக்கூடத்துல எனக்குப் படிப்பின் மீது ஒரு வெறுப்பு இருந்தது. கிராமத்திலிருந்து பொள்ளாச்சி கொண்டுவந்து படிக்கவச்சாங்க. படிக்கப் பிடிக்காம ஓடிப்போயிட்டேன். அப்புறம் பல இடங்களில் தேடிக் கண்டுபிடிச்சாங்க. இந்த ஊர்ல பையன் படிக்கமாட்டான் அப்படின்னுட்டு வீட்ல பெரிய திகைப்பு. அந்த நேரத்துல எங்க ஊர்ல இருந்த மளிகைக் கடைக்காரர் எனக்குத் தெரிஞ்ச ஆசிரியர் ஒருத்தர் கேரளத்தில் இருக்காரு. அவர்கிட்ட இருந்து படிக்கிறது சரியா இருக்கும் அப்படின்னாரு. அவர்தான் கொண்டு போய்விட்டார். அந்த மளிகைக் கடைக்காரர் பேர் கண்ணுசாமி. அப்படி விட்ட அந்த ஆசிரியர் வீட்டில் இருந்துதான் நான் பத்தாம் வகுப்பு வரை படித்தேன். கேரளத்தில் கொஞ்சம்கொஞ்சமாக அந்த ஆசிரியரின் நிர்பந்தமும் கட்டுப்பாடும் என்னைப் படிக்கவைத்தன. அவர் பெயர் சாமியப்பப் பிள்ளை.

அப்புறம் பள்ளிக்கூடம் போய்ப் படிக்கிற சூழ்நிலை வந்தபிறகு என்னோட பெற்றோர் வரவேமாட்டாங்க. அவங்க நினைவே எனக்கு இருக்காது. நான் படிக்கப் போனது இரண்டாம் உலக யுத்தம் நடந்துகொண்டிருந்த காலம். அந்தக் காலத்துல கடும்பஞ்சம். நாடு முழுவதுமே பெரும்பஞ்சம். வீட்ல இருந்தாலாவது சாப்பிடுறதுக்கு வழி இருக்கும். கேரளாவுல ரேஷன் அரிசிதான். ஒரு ஆளுக்கு இவ்வளவு தான்னு கொடுப்பாங்க. எல்லாமே அவுன்ஸ் கணக்கில்தான் அளந்து தரப்பட்டது.

அரிசியில் பூரா.. குப்பையும் மண்ணும் இருக்கும். நான்தான் என்னோட ஆசிரியர் வீட்டுக்கு ரேஷன் வாங்கப் போவேன். நாட்ல கோதுமை அப்பதான் அறிமுகமாச்சு. அத எப்படிச் சமைக்கணும்னு தெரியாது. என்ன செய்யணும்னு மக்களுக்குத் தெரியாத காலம். பூரி சப்பாத்தி எல்லாம் வராத காலம். நம்ம நாட்டிலேயே பழக்கத்தில் இல்லாத உணவு. கோதுமையை வாங்கிச் சும்மா வச்சிருப்பாங்க. ரொம்பக் கொடுமையான பஞ்சகாலம். துணிகூட ரேஷன்தான். இவ்வளவு கெஜம் அப்படின்னு சொல்லித்தான் கொடுப்பாங்க. அதுக்கு நீங்க தாசில்தார் ஆபீஸ் போய்ப் பர்மிஷன் வாங்கணும். அப்பதான் துணிக்கடையில் துணி கிழிச்சுத் தருவான். பஞ்சம் கொடுமையா இருந்த காலத்திலதான் நான் படிக்கப் போனேன். அதனால உணவு சரியா இல்ல. இந்தச் சூழ்நிலையில கட்டாயம் படிச்சே ஆகணும்னு படிச்சேன். எல்லாப் பாடங்களும் மலையாளத்தில்தான் சொல்லித் தருவாங்க. என்னோட ஆசிரியர் தமிழ் ஆசிரியர். அதனால தமிழ்ப் பாடம் இருந்தது. அப்போ மலையாளம் தெரிந்த அளவு தமிழ் எனக்குத் தெரியாது. அங்க தமிழ் படிக்கிறவங்க ரொம்பக் கிடையாது.

நானும் என்னோட நண்பரும் கல்கண்டுக்குச் சந்தா கட்டினோம். அந்தக் கல்கண்டுதான் என் தமிழை வளர்த்தது. வேறு சிந்தனைகளே வராத காலம், நூலகத்திலேயே என் நேரத்தைச் செலவிட்டேன். படிப்பதிலேயே நேரம் போச்சு. என்னைப் பற்றிச் சிந்திப்பது, என்னுடைய எதிர்காலம் பற்றிச் சிந்திப்பது, இதெல்லாம் பள்ளி வயதில் வாய்ப்பே இல்லை. கல்லூரிக்கு வந்தபிறகுதான் பொதுச் சிந்தனை பற்றி எனக்குத் தெளிவு வந்தது. கல்லூரி வந்தபிறகு வாழ்க்கைப் பார்வையை விசாலப்படுத்தியது....பாரதியாரின் கவிதைகள்தான். பாரதியார் கவிதைகள், பாரதியார் கட்டுரைகள், பாரதியார் கதைகள் என்று வாங்கிவாங்கிப் படித்தபிறகுதான் எனக்கு உலகம் தெரிந்தது. வாழ்க்கை தெரிந்தது. எல்லாம் தெரிந்தது. பாரதியார்தான் என்னுடைய சிந்தனைகளை உருவாக்கியவர். ஒருமைப் படுத்தியவர்.

இன்றுவரை பாரதியார் கவிதைகள்தான் என்னுடைய வழிகாட்டியாக இருக்கின்றன. என் கேள்விகளுக்கு அதில்தான் விடைகளும் இருக்கின்றன என நினைக்கிறேன்.

**எட்டு வரலாற்று நூல்கள் எழுதி இருக்கிறீர்கள். அதில் பாரதியின் வரலாறும் ஒன்று. பாரதி பற்றி உங்கள் பார்வையில் கூறுங்களேன்...!**

பாரதியார் கவிதைகள் படித்த உடனே அவருடைய சமூகக் கண்ணோட்டம்.. எல்லாவற்றிலும் சமூகத்தைப் பார்ப்பது என்று புரிந்துவிடும். வொர்ட்ஸ் வொர்த்தை இயற்கைக் கவிஞர் அப்படின்னு சொல்லுவோம். பாரதியார் அப்படிக் கவிதை எழுதியவர் அல்ல. அவர் இயற்கை பாடியபோதும் மனிதனைப் பாடி யுள்ளார். எல்லா இடத்திலும் சமூகத்தைப் பற்றிக் கூறியுள்ளார்.

'நிலாவும் விண்மீனும் காற்றும்' பாடலில் காற்றைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து மனித வாழ்க்கையில் முடிக்கிறார். மனித வாழ்வில் உள்ள பஞ்சம், வஞ்சம் யாவையும் சொல்லி முடிக்கிறார். இதுதான் பாரதி. பாரதியாருக்கு எல்லாமே மனிதனை அடிப்படையாகக் கொண்டதுதான். மனிதனுடைய வெற்றி மனிதனுடைய சோதனைகள் இதுதான் அவருடைய கவிதையின் சாராம்சம். அதனால் மனிதனை நோக்கிப் பயணம் போ.. என்று சொல்கிறார் பாரதி. அதைத்தான் அவரிடம் இருந்து கற்றுக்கொண்டேன். என்னுடைய கவிதை வடிவம் வேறாக இருக்கலாம். ஆனால் அதனுடைய சாராம்சம் மனிதனை நோக்கித்தான் இருக்கும். மனிதனைப் பாடுபொருளாக நிர்ணயித்தவர் பாரதியார். மற்ற கவிஞர்கள் எல்லாமே வெவ்வேறாக இருக்க, பாரதி மனிதனை மையப்படுத்திச் சிந்தித்தார்.

**புதுக்கவிதை கட்டுப்பாடின்றி அலைவதை எவ்விதம் காணுகிறீர்கள்...?**

(சிரித்துக்கொள்கிறார்) இப்போ புதுக்கவிதை பரவலாக்கம் பெற்றிருக்கிறது. அதற்கு வானம்பாடி ஒரு காரணம். அப்போ புதுக்கவிதை சந்தேகத்துக்குரியதாகக் கருதப்பட்டபோது அதை விரிவாகப் பத்திரிக்கையில் கொண்டுவந்தது மட்டுமில்லாமல் கவிராத்திரின்னு வெச்சு நடத்தினோம். மாலைப்பொழுதில் ஆரம்பித்து ஏறக்குறைய எட்டுமணி வரைக்கும் அது போகும். ஒரு ப்ரொக்ராம் மாதிரி. எல்லாக் கவிஞர்களும் அதில் பங்குகொள்வோம். ஒரு பொருளைப் பற்றிப் பலர் எப்படி எழுதறாங்கன்னு காட்றதுதான் அது. கவிதையை மக்களுக்குக் கொண்டுட்டுப் போனோம். பொது மேடைகள்ல இந்த மாதிரி கவிதைகளை வாசிக்கறதைப் பின்பற்றினோம். தலைப்பு கொடுத்து எழுதாமல் அவரவர் கவிதைகளை அவரவர் சொல்லும் ஒரு பாணியை இது ஏற்படுத்தியது. கவி அரங்கம் கூட கவி சொல்லுதல் ஆனது. இன்றைக்குப் புதுக்கவிதை ஒரு விடுதலையைத் தந்திருக்கிறது. விடுதலை என்னவென்றால் எல்லாரும் யாப்பிலக்கணம் படிச்சிட்டுத்தான் கவிதை எழுதணும்னு அவசியம் இல்ல. அவரவர் மன உணர்வைப் பிரதிபலிக்க எழுதலாம் என்ற சுதந்திரத்தைப் புதுக்கவிதை தந்திருக்கிறது. அதனால நிறைய பேர் எழுதறாங்க. நாங்க எழுதற காலத்துல நூல்களை அச்சிடுவது என்பது மிகக் கடினமான ஒன்று. ஆனால் இன்று நிலைமை வேறு. கணிப்பொறியின் வரவுக்குப் பின் எல்லாமே இலகுவாகி இருக்கிறது.

அதில்லாம முகநூல்ல கவிதை எழுதறாங்க. ஆன்லைன்ல கவிதை எழுதறாங்க. அப்படி ஒரு வாய்ப்பு இப்போ அதிகரிச்சிருக்கு. அதனால இதுவரைக்கும் கவிதை எழுதாதவங்க கூட கவிதை எழுதலாங்கிற சுதந்திரத்தைக் கொடுத்துருக்கு. அதுவே அதனுடைய எதிரியாகவும் மாறிடுச்சு. இலக்கியம் என்பது மனிதனை மேம்படுத்துவதாக இருக்கணுமே தவிர கீழ்மைப்படுத்துவதாக இருக்ககூடாது. எல்லாவற்றிலும் கொச்சைத்தன்மை வந்துவிட்டது போலக் கவிதையிலும் கொச்சைத்தன்மை ஆங்காங்கே இருப்பதைக் காணமுடிகிறது. கதைகளில் கூட ஆபாசமாக எழுதுவது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியறது இல்ல. எழுதுவது என் சுதந்திரம் அப்படிங்கறது ஒரு போக்கு. ஒரு எழுத்து என்பது பொறுப்புணர்ச்சியோடு பிறக்க வேண்டும்ன்னு புதுமைப்பித்தன் சொல்றாரு. ஏன் பொறுப்புணர்ச்சி வேணும்னா நாம ஒரு சமூகமாக இருக்கறோம். குழந்தைகளும் படிக்கறாங்க. பெரியவர்களும் படிக்கறாங்க. பெண்களும் படிக்கறாங்க. எல்லாரும் படிக்கிற போது அவர்களை ஒரு படி மேலே உயர்த்துவது போல இருக்கவேண்டுமே தவிர அவர்களை ஒரு படி கீழே இறக்குவதைப் போல இருக்கக்கூடாது. யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்ற சுதந்திரம் வந்திருக்கக்கூடிய இந்தச் சூழலில் பொறுப்புணர்ச்சியும் வேண்டும்ன்னு நினைக்கறேன்.

**எந்தப் பெண் கவிஞரின் கவிதைகளை உங்களுக்குப் பிடித்ததாகச் சொல்வீர்கள்...?**

'நீ உரசி எறிந்த ஒற்றைச் சொல்லில் பற்றி எரியும் நெருப்புக்குள் நான் வாழ்கிறேன்'னு எழுதின 'உமா மகேஸ்வரி' கவிதைகளைப் பிடிக்கும்.

**பாலசுப்பிரமணியம் எப்போது சிற்பி ஆனார்...?**

என்னுடைய அப்பா விரும்பி எனக்கு வச்ச பேர் "பாலசுப்பிரமணியம்" அப்படின்றது. தாயார் ராமேஸ்வரம் போனதுக்கப்புறம் நான் பிறந்ததனால் "சேது ராமசாமி" என்ற பெயரும் சேர்த்துவைக்கணும்ன்னு விரும்பினாங்க. உறவினர்கள் சில பேர் இந்த இரண்டு பேரையும் கூப்பிட முடியாம "நடராஜ்" அப்படின்னு கூப்பிட்டாங்க.

அந்தக் காலத்துல, ஏட்டுச்சுவடியிலதான் ஜாதகம் இருக்கும். அதுல பார்த்தீங்கன்னா, "நடராஜ பாலசுப்பிரமணியம் சேது ராமசாமி" அப்படின்னு இருக்கும் (சிரிக்கிறார்). நான் கல்லூரி படிக்கிற காலத்துல கண்ணதாசன் கவிதை இதழுக்கு வெண்பாப் போட்டிக்கு எழுதுவேன். சில போட்டிகளுக்கு மூன்று நான்கு கவிதைகள் அனுப்பவேண்டியது இருக்கும். மூணு நாலு எழுதிடுவேன். அப்போது மூன்று நான்கு புனைப்பெயர்களை வைத்துக்கொண்டு எழுதுவேன். பாலன், சிற்பி, செந்தாமரை இந்த மாதிரி பல புனைப்பெயர்கள்.

அப்ப எனக்குக் கவிஞனாக வேண்டும் என்ற ஆசை இல்லை. பின்னாளில் நிறைய எழுதி ஒரு புத்தகம் போடும் நிலைமை வரும்போதுதான் பழைய புனைப்பெயர்களிலிருந்து சிற்பி என்ற பெயரைத் தேர்வு செய்தேன். கவிதை என்பது சிற்பம் செதுக்குவது போலத்தான் என்று பொருத்தம் கருதி இந்தப் பெயரை வைத்துக் கொண்டேன்.

**எழுத்தாளராக இருப்பது நிறைவு தருகிறதா...?**

நிச்சயமாக நிறைவு தரக்கூடியதுதான். என் வாழ்வில் ரெண்டு தொழிலைத் தேர்ந்தெடுத்தது நான் நிறைவாக நினைக்கிறேன். ஒன்று ஆசிரியர் தொழில். அதை விடுத்து வேறு எதிலும் நான் பிரகாசித்திருக்கமுடியாது. நல்ல காரியங்களை நான் செய்திருக்கமுடியாது. எனக்கு இந்தத் தொழில் ஈடுபாடு வந்ததுக்குக் காரணம் என்னுடைய ஆசிரியர்கள்தான். என்னுடைய ஆசிரியர்கள் லட்சியவாதிகளாக இருந்தார்கள்.



படைப்பாளிகளாக இருந்தார்கள். எல்லாவற்றையும்விட நல்ல மனிதர்களாக இருந்தார்கள். அவுங்களைப் பார்த்துத்தான் நான் ஆசிரியர் ஆனேன். எங்கள் வீட்டில் யாருக்கும் நான் ஆசிரியர் ஆனதில் விருப்பம் இல்லை. ஆனால் என் விருப்பம் ஆசிரியர் ஆவதில்தான் இருந்தது. அடுத்த சமுதாயத்தை உருவாக்க அணு அளவு பங்களிப்பையாவது மாணவர்கள் மூலமாகச் செய்ய முடிந்திருக்கிறது. அதே காரணத்துக்காகத்தான் எழுத்துத் தொழிலையும் நான் விரும்பறேன். ஏதாவது சில பச்சை மனங்களில் ஒரு பதியம் போட முடியுமா என்று தான் என் எழுத்துத் தொழிலும் இருந்தது. பெருசா உருவாகிட்டுதுனு சொல்லமுடியாது. ஆனாலும் எங்கயாவது ஒரு விதை விழுந்திருக்கும்...அப்படின்னு ஒரு நம்பிக்கை. அதனால இந்த ரெண்டு தொழில்களும் எனக்கு முக்கியமானது. நிறைவு தரக்கூடியது.

**இன்னொரு பிறப்புண்டானால்...... யாராகப் பிறக்க ஆசை...?**

இதே ஆசிரியனாக....

**இப்போது என்ன எழுதுகிறீர்கள்...?**

இப்போ நான் என் வாழ்க்கைக் குறிப்புகளை எழுதிட்டு இருக்கேன். அது நீண்டு கிடக்கக்கூடிய விஷயமா இருக்கு. அப்புறம் இன்னொரு காவியம் ஒன்று எழுதிட்டு இருக்கேன். அதைப் புதுக்கவிதையிலதான் எழுதிட்டு இருக்கேன். ஆனால் நேரமின்மையால் இடைவெளி விட்டுவிட்டுத்தான் எழுதிக்கொண்டிருக்கிறேன். நேரம் இல்லாத தவிப்பும் காலம் போயிட்டே இருக்குங்கிற தவிப்பும் ரெண்டும் போட்டி போட்டுட்டு இருக்கு.... (சிரிக்கிறார்). ■

• கவி : விக்கிரமாதித்யன்

## மஹாகவி பாரதி



அருவிக்கரை
இல்லை

ஆற்றங்கரை
இல்லவேயில்லை

கடற்கரையும்
கிடையாது

புஞ்சைக்காடு
பெருங்கவிஞன்.

***

அரசியல்வாதியைக்
கோட்டைக்கு
அனுப்பிவைக்கிறார்கள்

நடிகனுக்கு ரசிகர்மன்றம்
நடாத்தி வருகிறார்கள்

பீடாதிபதிக்குப்
பாதபூஜை செய்கிறார்கள்

கவிஞனைக் கண்கொண்டு
பார்த்தாலென்ன பாலு சார்
(இனமே
ஏந்திவைத்துக்கொள்ளவேண்டும்
மொழியே
வாழ்வென வரித்துக்கொண்ட
அப்பிராணியை)

***

கொஞ்சம் கொஞ்சமாக
வற்றிக்கொண்டிருக்கிறது

வற்றுவது தெரியாமலே
வற்றி வருகிறது

புழங்குவார் இல்லாத
படித்துறைகள்

நதிப்படுகை நாணல்
தாழங்காடு

எதுவுமறியாத
மீன்கூட்டம்/கொக்குகள்

ஊற்றுக்குப்
பஞ்சமில்லை. ■



• பிருந்தா சாரதி

# முத்துசாமி எனும் முழுமையான கலைஞர்

கூத்துப்பட்டறை ந.முத்துசாமி அவர்களின் மறைவுச் செய்தியை அக்டோபர் 24 மதியம் முகநூலில் பார்த்தேன். அடுத்த சில நிமிடங்களிலேயே முகநூல் முழுக்க அவருக்கான அஞ்சலிகள் பரவலாக நிரம்பி வழிந்தன. ஓர் இரவு கடந்து மறுநாள் காலை அவருக்கு அஞ்சலி செலுத்தக் கூத்துப்பட்டறை அமைந்திருக்கும் சென்னை நடேச நகருக்குள் சென்றேன். நுழையும் இடத்தில் இருந்தே பல கலைக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் தாரை, தப்பட்டை, நாயனம், பேண்ட் முதலான இசைக்கருவிகளோடு வந்து இறங்கிக்கொண்டிருந்தனர். அவர் இல்லத்தை நெருங்கினேன். இருநூற்றுக்கும் மேலானவர்கள் கையைக் கட்டிக்கொண்டு உறைந்த முகத்தோடு நின்றிருந்தனர். இது இயல்பாக எல்லா மரணங்களுக்கும் நிகழக்கூடியதுதானே என நினைக்கலாம். ஆனால் துக்கம் கேட்க வரும் உறவுகள் நண்பர்கள் போல் அல்ல அங்கு நின்றவர்கள். பெரும்பாலும் இருபது முதல் முப்பது வயது கொண்ட இளைஞர்கள்.

தமிழின் முக்கியமான எழுத்துக் கலைஞர் கோணங்கி முதல் கலை இலக்கிய உலக ஆளுமைகளும் அங்கு கூடியிருந்தனர். உள்ளே கண்ணாடிப் பெட்டிக்குள் தன் பிரமாண்ட உடலை நீட்டிக்கொண்டு நிரந்தரத் துயில் கொண்டிருந்தார் ந.முத்துசாமி.

இறக்கும்போது வயது 82 என்று சொன்னார்கள். வயது முதிர்ச்சி கொண்ட ஒருவருக்கு நூற்றுக்கணக்கான இளைஞர்கள் மௌனமாக உறைந்து கைகட்டி அஞ்சலி செலுத்துவது என் பார்வையில் முக்கியமான ஒன்றாகத் தோன்றியது.

தொண்ணூறுகளில் நடிகரும், இயக்குனருமான நாசர் அவர்களிடம் உதவி இயக்குனராகச் சேர்ந்தபோது முதன்முதலாகக் கூத்துப்பட்டறை என்ற பெயர் காதில் விழுந்தது. அதுவரை கோவில் திருவிழாக்களில் வள்ளித்திருமணம், பவளக்கொடி முதலான மரபான நாடகங்களை மட்டும் ஊரில் பார்த்திருக்கிறேன். ஆனால் 'அவதாரம்' படத்தில் பணியாற்றியபோது நாசர், அப்படத்தில் நடித்த கலைராணி முதலியோர் நவீன நாடகம் என்ற வார்த்தையை உச்சரித்தனர். அதுவே புதுக்கவிதை என்ற சொல் போல் எனக்குப் புதுமையாக இருந்தது.

சினிமா என்பது நாடகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி என்றாலும் நாடகத்துடனான தொடர்பை முற்றிலும் விலக்கிக்கொண்ட ஒன்றாக பாவனை செய்துகொண்டிருப்போரும் அங்கே உண்டு. 'இது என்ன டிராமாவா...' என்று தரக்குறைவாக நாடகத்தைப் பேசும் குரல்களையும் கேட்டிருக்கிறேன். அதனால் இந்த 'நவீன நாடகம்' என்ற சொல்லாட்சி கவர்ச்சிகரமான ஒன்றாக எனக்குத் தோன்றியது. அது தமிழின் தொன்மைக் கலையான கூத்துடன் இணைக்கப்பட்டது என்று அறிந்ததும் அதன் மீதான ஆர்வம் கூடியது. 'அவதாரம்' படப்பிடிப்பும் கூத்துக்கலை சம்பந்தமாகவே இருந்தது. அதுதான் கூத்துப்பட்டறையை நான் அறியவும் காரணமாக இருந்தது.

அந்தக் கூத்துப்பட்டறைக் கலைஞர்களை அழைத்துத் திரைப்படத்தில் பயன்படுத்தினார் நாசர். பசுபதி இப்படித்தான் சினிமாவுக்குள் நுழைந்தார். இப்போது விஜய் சேதுபதி, விதார்த் இன்னும் பலர். முக்கியமான ஒன்று என்ன வென்றால் இப்போது சினிமாவில் ஒரு புதுமுகத்தை அறிமுகப்படுத்துகிறார்கள் என்றால் அவர்கள் முதலில் செய்வது கூத்துப்பட்டறைக்கு அனுப்பி நடிப்புப் பயிற்சி பெறச் சொல்வதுதான். ஆம்... நாடகப் பயிற்சி செய்யும் அங்கிருந்துதான் உடல் மொழியில் சிறந்த நடிகர்களைப்





பெறமுடியும் என்ற எண்ணம் ஆழமாக வேரூன்றி இருக்கிறது.

இதற்கான மூலவர் ந.முத்துசாமி அவர்கள். அவரோடு எனக்கு நேரடிப் பழக்கமில்லை. ஆனால் அவரது மாணவர்களில் ஒருவரான முத்துக்குமார், இயக்குனர் லிங்குசாமி அலுவலக மொட்டை மாடியில் லிங்குசாமியின் அண்ணன் மகன் வினோத்திற்கும், வேறு சிலருக்கும் நடிப்புப் பயிற்சி வழங்கிக்கொண்டிருந்தார். அவர்களுக்குச் சில காட்சிகளை உருவாக்கிக் கொடுக்கப்போய், அப்பயிற்சி விளையாட்டாக இருப்பதைப் பார்த்து, தினமும் அதில் நானும் கலந்துகொண்டேன். நடிப்புக் கலையை அழகழகான முறைகளால் எளிதாக வகுப்பெடுத்தார் முத்துக்குமார். எல்லாம் கூத்துப் பட்டறையில் கற்றுவந்த முறை என்று அறிந்தேன்.


குரல் பயிற்சி, நடைப் பயிற்சி, முகபாவப் பயிற்சி, பார்வைப் பயிற்சி என ஒவ்வொன்றும் சிறப்பான ஒன்றாக இருந்தது. இவற்றின் மூலம் எண்ணற்ற நடிகர்களை உருவாக்கி இருக்கிறது கூத்துப்பட்டறை. அதன் பிதாமகன் ந.முத்துசாமி. அவருக்கு அஞ்சலி செலுத்தவே இவ்வளவு இளைஞர்கள்.

கிராமப்புறங்களில் இருந்து வந்த நாட்டுப்புறக் கலைஞர்கள் குழுக்குழுவாக வந்து இசை அஞ்சலி செலுத்தினர். தாரைத்தப்பட்டை முழங்கி, "தமிழ் நாடகக் கலையின் முன்னோடி; கிராமப்புற இளைஞர்களுக்கு ஒரு மரியாதையையும் அங்கீகாரத்தையும் உருவாக்கிக் கொடுத்தவர்; உலகமெல்லாம் தமிழின் தொன்மையான கூத்து மரபை எடுத்துச் சென்றவர்; நவீன நாடகப் பிதாமகர் ந.முத்துசாமி அவர்களின் பணிகளைப் பாராட்டி, அவரை வாழ்த்தி, அவருடைய இழப்பு ஈடு செய்ய இயலாத ஒன்று என்று கூறி அவருக்கு எங்களுடைய குழுவின் சார்பாக அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" 'டண்..டண்..டண்' என்று மீண்டும் கருவிகளை வாசித்தபோது அதுவரை அடக்கிவைத்திருந்த கண்ணீர் அணை உடைத்துப் பொங்கிவிட்டது.

அருகில் முத்துசாமி அவர்களின் புதல்வர் இருந்தார். இயல்பாகப் பேசுவது போல் 'நல்லா வாழ்ந்துதான் போறார்' என்று சில நொடிகளுக்கு முன் எனக்கு ஆறுதல் கூறியவர் இப்போது முகம் கோணி அழத் தொடங்கிவிட்டார். இதுபோல் எத்தனை ஊர்களிலிருந்து எத்தனைக் குழுக்கள்.

ஒரு கலையின் அடையாளமாக, மீட்டுருவாக்கமாக, மரியாதையைத் தேடிக் கொடுத்தவராக, ஆக்க சக்தியாக, ஊக்க சக்தியாகத் திகழ்ந்த அந்த மாபெரும் கலைஞரின் இறுதி ஊர்வலத்தில் மாலைகள் மட்டும் இரண்டு குட்டி யானைகள் நிரம்ப ஏற்றப் பட்டிருந்தது. எவ்வளவு பரந்துபட்ட பாதிப்பை நிகழ்த்தியிருந்தார் என்பதை அறியமுடிந்தது.

மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் இயல்புதான். ஆனால் கலைஞர்கள் தங்கள் கலையைத் தங்கள் பிரதிநிதிகளான சிலரிடம் ஒப்படைத்துவிட்டுப் போவதால் அவர்கள் நிரந்தரமாக வாழ்வார்கள் என்று சொல்வார்கள். இவரோ சிலருக்கு அல்ல பலருக்கு, தன்னை நாடி வந்த அனைவருக்கும் தன் கலையை வழங்கினார். அவரது வாழ்க்கை ஒரு தவம். அதன் பலனான வரத்தை அவர் தனக்கென வைத்துக் கொள்ளவில்லை.. பகிர்ந்தளித்துவிட்டார் என்பதைத்தான் அவரது இறப்பின்போது கூடிய கூட்டம் சொன்னது. ■



# குளம்

• நா.விச்வநாதன்
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

ஊருக்குள் நுழைந்தபோது அவனுக்குத் தென்பட்ட முதல் மாறுதல் அந்தக் குளத்தில்தான். கௌதமன் குளம் என்று அதற்குப் பெயர். அகலிகையைக் கல்லாகும்படிச் சபித்துவிட்டு அந்தச் சாபத்தினால் ஏற்பட்ட பாவத்தைப் போக்கிக்கொள்ள இப்படி ஒரு குளத்தை உண்டாக்கிய முனிவன் இதில் மூழ்கிக் கரையேறியதாகக் கதைகூடச் சொல்வார்கள். தண்ணீரே இருக்காது. மழைக்காலத்தில் கூட சேறும் சகதியுமாய்ச் சுற்றிலும் கோரைப்புற்கள் அசிங்கமாய்க் காட்சியளிக்கும். தூரத்தில் வரும்போதே காற்றுவாக்கில் அங்கிருந்து ஒருவிதத் துர்க்கந்தம் வீசும்.

இப்போது அந்தக் குளம் வெகுசுத்தமாக இருந்தது. தண்ணீர் ததும்பி வழிந்தது. நான்குபக்கமும் படித்துறை வேறு. குளத்தைச் சுற்றிலும் கம்பி வேலி போடப்பட்டு மிக நேர்த்தியாய்ப் பராமரிக்கப்பட்டு இருந்தது. 'அசுத்தம் செய்யாதீர்கள்' என்ற மிரட்டலான அறிவிப்புப் பலகை வேறு.

இவனுக்குச் சந்தோசமாக இருந்தது. இந்தப் பதினைந்து வருஷங்களில் ஊர் வெகுவாக மாறிப்போயிருக்கும் என்பதற்கு முதல் குறியாக இதைக் கொண்டான். இத்தனைக் காலமாய் மனம் முழுவதும் நசநசத்துக்கொண்டிருந்த கசப்பிற்காகச் சற்று நாணம்கூட ஏற்பட்டது.

பிறந்த மண்ணைத்தான் வெறுக்க முடியுமோ? வெறுப்பதற்கு எத்தனைச் சாக்குகளைக் கற்பித்துக்கொண்டாலும் அதெல்லாமும் நிஜமாக இருக்கமுடியுமோ? கையைக் குத்தியதற்காக இதழ்களைப் பிய்த்துப்போடும் ஆவேசம். ஆவேசமென்ன மூர்க்கம். மூர்க்கம் என்ன அநாகரீகம்.

அந்த அக்ரஹாரத்திலே அவன்தான் அழகாக இருப்பான். அழகென்றால் கண், மூக்கு, காது, முகம் என்று அளவாக இருக்கவேண்டிய அளவிற்குச் சற்றும் கூடாமலும் குறையாமலும், சுருள்சுருளான முடியும், பரந்த மார்பும் என்றவாறெல்லாம் இருக்கும் அழகு இல்லை. அது ஒரு மாதிரி. பார்த்தவர்கள் மறுபடியும் மறுபடியும் பார்க்கத் தோன்றுகின்ற வருணிப்புகளுக்குள் அடைக்க முடியாத ஒரு வகையானது. அவன் முதன்முதல் அங்கு கிராப் வைத்துக்கொண்டான். மீசை வைத்துக்கொண்டான். ரயில்வே ஸ்டேஷன் சாயபு ஓட்டலில் கோழி பிரியாணி சாப்பிட்டான்.

எப்படியாவது கெட்டுத்தொலையட்டும் என்று மற்றவர்களால் வெறுமனே இவனை ஒதுக்கிவிட முடியவில்லை. இவனை ஒதுக்கஒதுக்க அவர்களே பாதிக்கப்பட்டார்கள். அவன் தனியனானான். எல்லோரும் நன்றாய்ப் பெரிய வியூகம் வகுத்துக் கொண்டு இவன் மேல் படையெடுத்தார்கள்.

இதோ தெரியும் இந்த ஆலமரத்தடியில்தான் சாமாவையர் அவனைக் கட்டிவைத்து அடித்தது. பாவம் அவரைக் குற்றம் சொல்லமுடியாது. எத்தனை வருடங்களாக அந்த நெருப்பு உள்ளுக்குள்ளேயே கனன்றுகொண்டிருக்கும். இயலாமை, பெண்டாட்டியைக் கண்டிக்கத்தக்க ஆரோக்கியமான துணிவை அவருக்குத் தரவில்லை. ஏதோ ஒரு பொழுதில் ஏதோ ஒரு சாக்கில், ஒருநாள் இவனை வளைத்துவிட்டார். பிள்ளையார் கோயில் மேடையில் ஊர் நியாயஸ்தர்கள் முன்னிலையில் மொத்துமொத்து என்று மொத்தினார்.

"திருட்டுப் படவா... எங்காத்துப் பிள்ளையாட்டமா வந்து போயிட்டிருந்தியேடா. மேஜையிலே வச்சிருந்த வைரமோதிரத்தை நீதானேடா எடுத்தே. நீதானேடா எடுத்தே..

மூவாயிரம் ரூவாடா.. உழைச்சுச் சம்பாரிச்ச சொத்துடா பாவி" என்று ஆக்குரோஷமாகக் கத்தினார். ஆவேசம் வந்தவர்போல் இவனைக் கிழித்துப்போட்டார்.

இவனுக்கும் தெரியும், ஊருக்கும் தெரியும்.. சாமாவையர்க்கும் தெரியும். ரொம்பச் சாமர்த்தியமாக அந்த விஷயத்தைக் கையாண்டார்கள். ஒரு கலாச்சார மரபை மீறினவனுக்குத் தண்டனை ஏற்றி வீழ்த்திவிடத் துடித்து வைர மோதிரம்.. வைர மோதிரம் என்று ஊரே முணுமுணுத்தது.

செடி மறைவிலும், சாக்கடை ஓரத்திலும், இருண்ட கோயில் பிரகாரத்திலும், ஏகாந்தமான தோப்புகளிலும், ஏன் அன்று நாறிக்கொண்டிருந்த கௌதமன் குளத்து மேட்டில் கூட ஒவ்வொரு தடவையும் வியர்வையைத் துடைத்துவிட்டுக் கொண்டும் இவனுடைய தலைமயிரைப் பிய்த்துவிடுபவளைப்போல அளைந்துகொண்டும் துடிப்போடு சொல்லுவாள் கல்யாணி. சொற்களல்ல அவை. அவளுக்கும் அவனுக்கும் கூட அந்தக் கணத்தில் அவைதாம் சத்தியங்கள்.

"ரங்கு இந்தச் சாமாவையனை இரண்டாம் தாரமாக் கட்டிண்டு பதினைஞ்சு வருஷம் ஆச்சுடா. இப்படி ஒரு சுகத்தை இப்படி ஒரு திருப்தியை, இப்படி ஒரு அற்புதத்தை, இப்பதான்டா அனுபவிக்கிறேன்".

கல்யாணி மட்டுமல்ல, ஜெயா, சரோஜா, கோமளவல்லி, உள்ளூர் எலிமெண்டரி ஸ்கூல் வாத்திச்சி ராஜம்மா வயலட் என்று ஒரு நீளமான பட்டியலே இவனைத் தன்னுள் தங்கள் கனவிலாவது பிரவேசிக்க வைத்துவிட வேண்டும் என்று காத்திருந்தது. அதனால்தான் ஆண்கள் பயந்தார்கள். சீட்டு தம் வீட்டிலும் விழுந்துவிடுமோ என்ற பரபரப்பில் அவனை அவசர அவசரமாகப் பிள்ளையார் கோவில் மேடைக்குத் தள்ளிக்கொண்டு வந்து நியாயம் பேசி, இந்தக் கைதானே, இந்தக் கால்தானே, இந்தக் கண்தானே, இந்த உடம்புதானே என்று அடி அடி என்று அடித்துப் பிய்த்துப் போட்டார்கள்.

அன்றைக்கு மறுநாள் இவன் கல்யாணியோடு ஓடிப்போனான். உலகம் தன் வீட்டுக் கொல்லைப் புறம் அளவிற்கும் சின்னதாகத் தோன்றியது. கொஞ்ச நாட்கள்தாம், சாமாவையரைப்போல இவனையும் உணர்ந்தவளைப் போல இன்னொரு ரங்குவைச் சிநேகித்துக்கொண்டு ஒரு ராத்திரி வேளையில் ஓடிப்போனாள் அவள்.

"யாரு... ரங்கசாமியாடா அது.. இப்பத்தான் வரியா?" என்று வில் வண்டியிலிருந்து ஒரு குடுமித் தலை எட்டிப் பார்த்தது. "எலே என்னடாலே இப்படியாயிட்டே... இளைச்சுப்போய்.. கருத்து.. தலையெல்லாம் வெளுத்துப்போய் என்னடா.. கண்முடி இருக்கற எடந் தெரியலே. உனக்குச் சேதி தெரியுமோ... சாமாவையன் செத்துப் போயிட்டான். தலைத்திவசமும் கூட ஆயிட்டது." யாரது? வெறும் வார்த்தைகளை விடுத்து நெஞ்சில் ஆயிரம் அர்த்தங்களை விகசித்துப் பரவும் அம்புகளாய் மாற்றும் இந்தத் தஞ்சாவூர்த்தனம்.. ஓ... ஜோசியர் மாமா.

"எங்கேடா இருக்கே, என்ன பண்ணிட்டு இருக்கே, இப்போ ஊருக்கு நான்தான் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட். நான் வந்துதான் ஊரையே தலைகீழா மாத்தினேன், மழை பேஞ்சா இந்தப் பாதையில் நடக்கமுடியுமா முந்தி, இப்பப் பாரு தாரு போட்டாச்சு. சிவன் கோயில் பாழடைஞ்சுக் கிடந்ததே.. இப்பப் பாரேன் எப்படி இருக்குன்னு. போன வருஷம்தான் கும்பாபிஷேகம் ஆச்சு. முந்தியெல்லாம் செம்பு ஜலத்துக்காக யப்பாடி யம்மாடின்னு மூணு மைலுன்னும், நாலு மைலுன்னும் வேர்க்க விறுவிறுக்க நடப்போமே. இப்போப் பாத்தியாக் கௌதமன் கொளத்தை... ஏகமாகச் செலவு பண்ணித் தூர் எடுத்துப் பளிங்கு மாதிரி ஜலம்... குடிக்க மட்டும்தான்னு ஊர்லே ஸ்ட்ராங்காச் சட்டம் போட்டு, காவலும் போட்டு.. எலே.. நாம் பாட்டுக்குப் பேசிண்டே இருக்கேன். நீ மரமாட்டமா நிக்கறே... ரொம்ப நாள் கழிச்சு வந்திருக்கே. நம்ம மனுஷனாச் சேங்கற விசுவாசத்திலே உன்னை நிறுத்திப் பேசறேன் பாரு, என்னை ஜோட்டாலே அடிக்கணும்... எலே ஓட்றா வண்டியை. மகாராஜா பிரவேசம் பண்ணியிருக்கார். ஊருக்கு இனிமே பிரளயமோ? பூகம்பமோ?"

அடிமனதில் கசப்பு தட்டுவதை உணர்ந்தான். சந்திக்கும், எதிர்ப்படும், எட்டிப்பார்க்கும், கேள்விப்படும், ஒவ்வொரு மனுஷனும் கிழங்கட்டைகளும் கூட பதினைந்து வருஷத்திய நினைவை மாறாமல் வைத்திருந்து துவேஷத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தாற் போல், 'யாரு ரங்கசுவாமியா? யாரு ரங்கசுவாமியா வந்திருக்கான்? சரிதான் ரங்கசுவாமி வந்துட்டானோன்னோ?'

"ரங்கு நாள்முழுக்க இப்படியே இருந்திடு வோம்டா...எந்திரிக்காதேடா... எந்திரிக்காதேடா... மாமா கூட ஆத்திலே இல்லைடா."



உறைபனியின் தன்மையும் ஜன்னல் வழியாகப் பிரவேசிக்கும் காலை வீச்சுக்களின் இதமான சூடும் உடம்புகளில் சங்கமிக்கும்போது எத்தனை சுகம்? இந்தச் சுகத்திற்காகத் தொலைத்த விஷயங்களைக் கணக்குப் பார்க்கும் நேரமா இப்போ?

'அப்படியே போங்கடி உள்ளே வாசலிலே.. என்ன அவுத்துப் போட்டுட்டா ஆடறா? வாசல்லே வாசல்லே வந்து நின்னுண்டு... காலை முறிச்சுப் போட்டா சரியாப்போயிடும்' என்று மனைவிகளை, மகள்களை, தங்கைகளை, அக்காக்களை உள்ளே அவசரஅவசரமாக விரட்டிவிட்டு வாசலுக்கு வந்து கரிசனமாய் விசாரித்தது இவனுடைய காயத்தை மேலும் மேலும் கிளறியது.

"ரங்கஸ்வாமியா.. கல்யாணி கூட உன்னை வுட்டுட்டு ஓடிப்போயிட்டாளாமேடா.. கேள்விப் பட்டேன் நெஜம்தானா?" சந்தோஷப்படும் முறை இப்போது அவர்களுடையது. இவனது காயத்தைக் கிளறிவிட்டுக் குஷிப்பட அவர்களிடம் கைவசம் அம்புகள் நிறைய இருந்தன.

நா வறண்டது. வயிற்றில் லேசாக நெருப்பு புகைந்தது, விடுவிடுவென்று. வேதபாடசாலை வராண்டாவில் ஏழெட்டு இளம் பையன்கள். சின்னக் குடுமியும், அழுக்கு வேஷ்டியுமாக உட்கார்ந்து தொண்டைக் கிழியக் கத்திக் கொண்டிருந்தார்கள்.

பூதம் ஜதிஷ்யே புவனம் வதிஷ்யே தேஜோ வதிஷ்யே தபோ வதிஷ்யே பிரம்ம வதிஷ்யே..............
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

உச்சந்தலை வழுக்கையைத் தடவிக்கொண்டே எந்திரமாய்ச் சொல்லிக்கொண்டிருந்த ராமச்சந்திரசர்மா தெருவோடு போகும் இவனைப் பார்த்துவிட்டு அவசரஅவசரமாக எழுந்து வந்தார்.

"ஏண்டாப்பா... நீ வந்திருக்கேன்னு கேள்விப் பட்டேன். ஏன் இப்படி... கருத்து இளைச்சி மார்கூடெல்லாம் பின்னிப்போய் என்னமோ வியாதியஸ்தன் மாதிரி... போயிட்டே. அந்தக் கல்யாணி முண்டைக்கூட இன்னொருத்தனோட ஓடிப்போயிட்டாளாமே. ம்... நிரந்தரமான சந்தோஷம்னு ஒன்னு இருக்குடா இந்தப் பூமியிலே. அதைப் புரிஞ்சுக்காமத் தாம்தூம்ன்னு குதிச்சா இப்படித்தான்".

அவரை உற்றுப் பார்த்தான். அதே பழைய ராமச்சந்திரசர்மாதான். பழுப்புக்காவி வேஷ்டியும், அசட்டுச் சிரிப்பும், வெற்றிலைக் காவியேறின பற்களும், திறந்தா மூடும்போது எச்சில் நூல்கள் இரண்டு உதடுகளையும் இணைத்து வேடிக்கை காட்டும் அசிங்கமும், இந்தப் பிரதேசத்தின் வழியாகத்தான் வேதங்கள் வெளியே வருகின்றன என்ற விஷயமே இவனுக்குச் சங்கடத்தைத் தந்தது.

யாரோ ஒரு கருணையுள்ள மொட்டைப் பாப்பாத்தி எழுதிவைத்த சொத்தில் இன்னமும் நடந்துகொண்டிருந்த வேதபாடசாலை அது. சோற்றுக்கு அல்லாடும் ஏழைப் பிராமணக் குடும்பத்துப் பையன்கள், அங்கே எல்லோரும் புளித்த பழைய சோற்றைத் தின்றுவிட்டு, சூனா வயிறு தட்டிப்போய்க் குழிவிழுந்த கண்களும் முன் துருத்திய நெஞ்சுமாய்ப் பார்க்கவே பரிதாபமாக இருக்கும். பள்ளிக்கூடம் போகும் இதர பையன்களின் கிராப் தலைகளை ஏக்கத்தோடு பார்ப்பார்கள். அந்தக் கண்களில் சினிமாக் கனவுகள் மண்டிக்கிடக்கும்.

இவன்கூட இரண்டு வருஷங்கள் அங்கே வேதம் படித்தான். அப்போதும் இதே ராமச்சந்திரசர்மாதான் வாத்தியார். படு கண்டிப்பு. பையன்கள் அதிகாலையிலேயே எழுந்து குளித்து வேஷ்டி கட்டிக்கொண்டு விபூதியை அப்பிக்கொண்டு உள்ளே வரும்போதே பின்புறம் கைவைத்துக் கௌபீன முடிச்சைத் தொட்டுப்பார்ப்பார். கௌபீனம் கட்டிக் கொண்டிராத பையன்களுக்கு அன்று சரியான உதை. சோறு போடமாட்டார். இந்தப் பழக்கமே பின்னால் பையன்களை மிரளவைத்திருக்கிறது.

சில பையன்கள் பாதியில் இதன் காரணமாகவே ஓடிப்போகிறதும் உண்டு. பெண்டாட்டி இல்லாத அந்த மனுஷனின் வக்கிரம் இப்போதுகூட இந்த வயசிலும்கூட அவர் கண்களில் குறுகுறுப்பது நன்றாகத் தெரிந்தது.

பையன்கள் இவனை ஆச்சரியத்தோடு பார்க்க ஆரம்பித்தார்கள். இவனுக்கு வருத்தமாக இருந்தது. இங்கு வருவதை விட்டுவிட்டு வேறு எங்காவது நாலு தமிழ் இங்கிலீஷ் எழுத்துக் களைப் படித்துவிட்டு எங்காவது குமாஸ்தா வாகப் போய் அடிபட்டு அல்லாடிக்கொண்டு இருக்கக்கூடாதா என்று நினைத்தான். சோற்றுக்காக எட்டு வருஷம் வேதம் படித்துவிட்டுப் பிரகஸ்பதியாக வந்து உலகத்து அழுக்கையெல்லாம் எரிக்கவோ போகிறார்கள். அமாவாசை தர்ப்பணத்துக்காக ஓடி ஓடி நாலணாவுக்கும் எட்டணாவுக்குமாய்ச் சந்தி சிரித்துப் பறங்கித் துண்டமும், நாலு வாழைக்காய், கால்படி அரிசி என்று ஆயிரம் இளிவரல்களைச் சந்தித்து மூட்டைக்கட்டிக் கல்யாணத்திற்கு நிற்கும் நான்கு பெண்களைப் பார்த்துப் பெருமூச்செறிந்து எதற்காகவோ காரணமின்றி மனைவியை ஜெபித்துக் கூனிக்குறுகி ஆஸ்துமாவில் சுருண்டுபோகும் வாழ்க்கை உங்களுக்காகக் காத்திருக்கிறது என்று சத்தம் போட வேண்டும் போலிருந்தது.

இவன் நடந்தான். சிவன் கோயில் வழியாகத் தாண்டி தெற்குப்புறம் வந்தபோது அதற்குள் எத்தனைப் பேரைச் சந்தித்துவிட்டான். இதெல்லாம் பழிவாங்கல்களா?

கோயில் குருக்கள் வழிமறித்தார். “ரங்கஸ்வாமி சார்…?” என்று நக்கல் தொனிக்கக் கூப்பிட்டார். “ஏன் சார்… கல்யாணி இப்ப உன்னோட இல்லையாமே.. அதான் இப்படித் தேஞ்சுப் போயிட்டேள். எப்படி இருப்பேள் ராஜா வாட்டமா? பிராமணன் சாபம் சும்மா விடுமான்னா?” வைத்தியநாத குருக்கள் உருவத்தில் பிரமாண்டமானவர். மற்ற குருக்கள் மாதிரி நெய்வைத்தியச் சோற்றை மட்டும் நம்பியிருப்ப வரில்லை. கொஞ்சம் நிலபுலன்கள் மாடு கன்றுகள் என்று ஏகமாக வைத்துக்கொண்டிருந்தார். ஊரில் எதற்கெடுத்தாலும் முன்னால் வந்து தாம்தூம் என்று குதிப்பார். கல்யாணி கூட சொல்லுவாள்.. “இது பொல்லாத கிழம் ரங்கு. சன்னதியிலே விபூதி கொடுக்கிற சாக்கிலே ரகசியமாகக் கையைக் கிள்ளும். மாமி ஊருக்குப் போயிருக்கா. ஆத்துப் பக்கம் வந்துட்டுப் போயேன்டி”, என்பாராம்.

காலம் மனுஷ உருவங்களில் செய்த மாற்றத்தைத் தவிர வேறில்லை இங்கே. நெஞ்சின் காயம் அகலமானதுதான் மிச்சம். இனிமேலும் இங்கே அன்னியமாய் நின்றுகொண்டிருப்பது அர்த்தமற்றதாகப்பட்டது. விடுவிடுவென்று நடந்தான். ராகவன் பிள்ளை டீக்கடை தென்பட்டது. டீக்கடைக்காரன் இவனை அடையாளம் கண்டுகொண்டு சிரித்தான்.

“என்ன ஐயரே, எப்ப வந்தே? தளதளன்னு இருப்பியே… ஆளே உருமாறிப் போயிட்டே…. ம்.. டீ சாப்றயா?”

“ம்…”என்று தலையை ஆட்டினான்.

“அந்தப் பாப்பாத்தி உன்ன விட்டுட்டு ஓடிடுச்சாமே. கவலைய விடு சாமி. வளியா வந்த கழுதைகளே தாண்டிப் போவுது. இந்த ரகம் எத்தனை நாளைக்குத் தாக்குப்பிடிக்கும்.. என்னைப் பாரேன். இந்த அம்மணிக் கழுதை எனக்கு அஞ்சாவதோ ஆறாவதோ…?”

“ராகவன் பிள்ளை.. குளிச்சா தேவலாம் போலிருக்கு.”

“கௌதமன் கொளத்திலே இப்பல்லாம் கால்வைக்க முடியாது.. தெரியுமா சாமி. குடிதண்ணிக்காவ மட்டும்தான். அம்மணி, ஐயருக்கு ஒரு பக்கெட் தண்ணி கொண்டா”.

குளித்த பிறகும் உடம்பு எரிச்சல் அடங்கவில்லை. டீக்கடையை விட்டு ரயிலடிப் பக்கமாக நடக்க ஆரம்பித்தான். இன்னும் யாராவது விசாரித்துவிடப் போகிறார்களோ என்று பயந்தான். வயிற்றை லேசாகப் புரட்ட ஆரம்பித்தது. இன்னும் இரண்டொருவர் இவனை உற்றுப் பார்த்துவிட்டுக் கேள்விக் குறிகளோடு தாண்டிப் போனார்கள். வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

திடீரென்று வயிற்றில் சங்கடம் அதிகமானது. பலவிதமான ஓசைகள் வயிற்றிலிருந்து கிளம்பின. சற்று நேரத்திற்கு முன் குடித்த டீயின் வேலையோ இது. மனதின் சங்கடமும் வயிற்றின் சங்கடமும் ஒருசேர அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கிடுகிடுவென்று ஓரமாகப் போய் வேஷ்டியை மடித்துக்கொண்டு உட்கார்ந்தான்.

வயிற்றில் சங்கடம் இறங்கியபிறகு எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் தென் படவில்லை. வேஷ்டியை ஒதுக்கிக்கொண்டு குளத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ■

வாழ்வியல்

தொடர் - 2

• கட்டாரி

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# சிலேட்டுக்குச்சி

அடிக்காம கொள்ளாம சந்தோசமா வச்சிருந்தார்ன்னா அன்னைக்கி அவரு அறிவியல் சாரு. ஏதாவது கோவத்துல பூவரசங்குச்சியால வெளுத்துவிட்டாருன்னா வேட்டமுனி சாரு. இப்பிடித்தா நாங்க அறிவியல் சாருன்னு கூப்புடுற அவரு.. எங்களுக்குள்ள அவரோட பேர வெதச்சிக்கிட்டாரு.

பொன்வண்டப் புடிச்சி... நூலுகட்டிச் சுத்துறது. அதுக்கே முடியலைன்னாலும் கொன்ன எலக் கொழுந்தப் பிச்சி வாயில வச்சி ஊட்டி விடுறம்ன்னு திணிக்கிறது. நாலு நாளு டப்பாக் காவலுக்குப் பொறவு..... வண்டப் பிதுக்கியாவது முட்டைய எடுத்து நல்லெண்ணயத் தடவி நாங்களும் அதோட சேந்து வெயில்ல காயிறது. கொள்ள வெயிலு முதுகச் சுட... "என்னடா இது.... இந்த முட்டையில குஞ்சையே காணும்"ன்னு நசுக்கி ஒடைக்கிறப்பவே.. என்னத்துக்கோ அர்த்தம் வெளங்கி.. கூட்டமாச் சிரிக்கிறது... இப்படித்தாம் எங்களுக்கு வேட்டைப் பழக்கம்.

இம்புட்டுச் சொல்ற நீ.. ஏம்ப்பா ஓணான விட்டுட்டன்னு நீங்க கேட்டியள்ன்னா.... அது நாங்க இப்பத்தான மூணாப்பு.. அந்த வேலையெல்லா எங்க அண்ணம்மாருக பாப்பாய்ங்க.. கொஞ்சம் வளந்தாப்ல அதுக்கும் அப்பறமா. எதுக்கும் ஒரு நேத்தி சாத்தி இருக்குல்ல.



சரி. சம்பவத்துக்கு வருவம். இப்படியா வேட்டைய வெளையாட்டாப் பண்ணிக்கிருந்த பயலுகளப் புடிச்சி "டேய் பயலுகளா.. யாரு யாரெல்லாம் சாரு கூட வாறதுக்கு விருப்பப்படுறீய"ன்னு கேப்பாரு. முந்திக்கிட்டுக் கையத் தூக்குன நாலுபேருதா அந்த வாரத்துக்கு அவருக்குப் பேச்சுத் தொணை. அவரு எப்படா கூப்புடுவாருங்குறத்துக்காகவே கையத் தூக்க ஒரு மாதிரி கையத் தூக்குனாப்புலையே வச்சிக் கிருப்பம். வேட்டைன்னு சொன்னவொடனே புலிவேட்ட சிங்கவேட்டன்னு எல்லாம் பெருசாக் கற்பன பண்ணி வைக்காதிய. கொக்கு.. காட..... நார.. காட்டு மொயலு.. இந்த மாதிரிதா.

எங்க ஊருல ஒரு பெரிய கொளம் இருக்கு. அந்தக் காலத்துல அரசாங்கம் போட்ட ஏதோ ஒரு வளர்ச்சித்(?) திட்டத்துல கொளத்து உள்ளாற இருந்த வெப்பல்ல கருவேல மரமா நட்டுவச்சதுக.. அதுக பாட்டுக்கும் யாரும் வளக்காமலேயே வந்து கருவக்காடா ஆயிருச்சி. கோடையில எங்களுக்கு அது கருவக்காடு. மழை.. குளுரு காலத்துல எங்களுக்கு அது கொளம். ஆடி மாச வாக்குல புதுத்தண்ணி வந்து நெறயிறப்ப.. பரவலா மொழங்காலு அளவுலதா தண்ணி கெடக்கும். எங்க வயசுப் பயலுகளுக்கு அவனவன் வளத்திக்கித் தகுந்தாப்புல இடுப்பளவோ.. தொடையளவோ இருக்கும். அதுதா எங்க வேட்டக்களம். அறிவியல் சாரு ஒரு துப்பாக்கி வச்சிருந்தாரு. வெள்ளக்காரந் துப்பாக்கி. அதுக்கு அவரு பொழங்குற குண்டு என்னன்னா.. நம்ம சைக்கிளு ரிம் பேரிங்குல பால்ரசு குண்டு இருக்குமே அதுதா..! நாங்க புடிக்கப்போற கொக்கு குருவிகளுக்கு அது போதுமே. இடக்கால நாங்களும் ஒரு ஒரச்சாக்க எடுத்துக்கிட்டுப் போயிருவம். புதுத்தண்ணிங்கிறதுனால நத்தை நண்டு எல்லாங் காலளவு தண்ணிக்குள்ள எளைஞ்சிக்கிட்டுக் கெடக்கும்.. அதுகளையும் புடிச்சிப் போட்டுக்கிருவம். எத்தனப் பேருக்குத் தெரிஞ்சிருக்குன்னு தெரியல. நத்தைக்கறி மாதிரி வயித்துப்புண்ணுக்கு ஒரு கைகண்ட மருந்து வராது. அம்புட்டு நல்லது.

இப்பிடியாப் பரிவாரங்களோட கொளத்துக் குள்ள எறங்கி மெதுவா... சளக்..சளக்...ன்னு போறப்ப அறிவியல் சாரப் பாக்கணும்.... கட்டம் போட்ட இந்தோனேசியாக் கயிலி.. ஒடம்ப ஒட்டுனாப்ல ஒரு பனியன்... தலையில ஒரு உருமாக் கட்டு.. தோள்ல நாட்டுத் துப்பாக்கி... கூடவே நாங்க நாலு அஞ்சி பேரு.. சட்டையோடவோ..அது இல்லாமலோ.

இப்ப இருக்குற மாதிரி செல்பில்லாம் எடுத்துருந்தா இப்ப இதச் சொல்லையில இம்புட்டுச் சந்தோசம் இருந்திருக்குமான்னு தெரியலைங்க..

அவருக்குக் கொக்கு குருவி கெடைக்குதோ இல்லையோ... எங்களுக்கு நண்டு நத்தை நெறையாக் கெடைக்கும். புதுத்தண்ணி வேறயா.. சளக்..புளக்ன்னு ஒரே ஆட்டம். கொக்குக்குக் குறிவச்சிக் காத்துக்கிட்டே இருப்பாரு சாரு. அப்பம் பாத்து ஒருத்தம் ‘டேய்ய்ய்.. ஊளக்காதா’ன்னு புதுத்தண்ணிக்கு ஊறுன சாணிய அள்ளி எறிய... ஊளக்காதன்னு சொன்னவம் வெலக.... சாணி சத்துன்னு தண்ணில விழுந்து தெறிக்கும். அப்பயில வந்து உக்காந்த கொக்கு சுருக்குன்னு திரும்பிப் பறந்திரும்.

குறிவச்சிக் காத்துக் கெடந்தவரு திரும்பி மொறப்பாரு பாருங்க... மொறச்ச வாக்குலையே “இவன எந்த ஊருலடா வச்சிப் பெத்தாய்ங்க..” ன்னு சலிச்சிக்கிட்டே அடுத்த குறி வக்க ஆரம்பிச்சிருவாரு. ஒருவழியா... ரெண்டு சாக்கு நண்டு நத்தையும் ரெண்டோ மூணோ குருவி கொக்கும் சேத்துக்கிட்டு வீடு திரும்புவம்.

மய்க்கா நாளு பள்ளிக்கொடம் வந்துட்டாருன்னா... அவ்வளவுதான். மொழங்கையிவரை மடிச்ச முழுக்கையிச்சட்டை... வெள்ளவேட்டி.. சிவாசிகணேசம் மாதிரி நெளிச்சி சுருட்டுன முடின்னு கம்பீரமா இருப்பாரு. மூணாப்பு படிக்கிறப்பதா எங்களுக்கு இங்கிலீசும் அறிவியலும் ஆரம்பிச்சுது. இங்கிலீசு எவ்வளவுக்கு ஏறலயோ.. அதுக்கு எதுத்துக்கிட்டு அறிவியலு எக்குத்தப்பா உள்ள ஏறுனிச்சின்னா அதுக்கு சாருதாங் காரணம். அப்பவே எங்களுக்கு லென்ச வச்சிப் பேப்பர எரிக்கிறது, ட்யூப்ல ஒட்டை போட்டுத் தண்ணி ஒடவிட்டு அழுத்தம் பாக்க வைக்கிறது.. மஞ்சள்ல சோப்புத் தண்ணி கலந்து செகப்பா மாத்திவைக்கிறதுன்னு நெறையா செஞ்சிக் காட்டுவாரு. அது எதுனால அப்படி நடக்குதுன்னு வெளக்கமும் சொல்லிப்புடுவாரு. ஒரு மரத்தடிய ஆராய்ச்சிக்கூடமாவே பாவிச்சவைய்ங்க நாங்க.

ஒரு நா பரிச்சை வச்சாரு. எல்லாஞ் சரியா எழுதி முடிச்சி வேகமா நாந்தாம் பர்ஸ்ட்டுன்னு ஓடிப் போயிப் பேப்பரக் குடுத்தேன். பொளேர்ன்னு ஒரு அறை. எனக்குப் பொறி கலங்கித் தண்ணி பொங்குது. பேப்பரப் புடுங்கி வீசி “இப்பம் போயி எடுத்துக்கிட்டு வா” ன்னாரு. நானும் போயி எடுத்துக்கிட்டு வந்து குடுக்க.. மறுபடியும் பொளேர். காரணம் என்னன்னு புரியாம நா கதறி அழுக ஆரம்பிச்சிட்டேன்.

நா அழுதது அவர ஒடச்சிருச்சோ என்னமோ... “ஏன்டா... உங்கப்பாவும் வாத்தியாருதான? நல்லாப் படிக்கிறம்ங்கிற திமிராடா..? எந்தக் கையில பேப்பரக் குடுக்குற”ன்னு கேக்க... பயலுக எல்லாம் “சார்... அவனுக்கு நொட்டாங்கையி சார்“ ன்னு சிரிச்சாய்ங்க. சாருக்கு ஒருமாதிரி போயிருச்சி. நெஞ்சோட சேத்து அணைச்சிக் கண்ணீரத் தொடச்சிவிட்டு “அப்படியெல்லாம் செய்யக் கூடாது தம்பி”ன்னு தட்டிக்குடுத்து ‘இப்படிச் செய்யணும்’ன்னு சொல்லி அனுப்பி வச்சவரு.... அன்னிக்கிச் சாயங்காலமே வீட்டுக்கு வந்து நின்னாரு.

அப்பாக்கிட்ட “சார் தம்பிக்கி வெள்ளாங்கையிப் பழக்கமுன்னு தெரியாது.... அடிச்சிப்புட்டேன். நல்லாப் படிக்கிற பயல்ல. அதாங் மனசு கரகரன்னு இருக்கு. நீங்க எதுவும் தப்பா எடுக்குறாதீய”ன்னு சொல்லிட்டுப்போக.. அப்பா என்னப் பாத்துச் சிரிச்சதுக்கு அன்னைக்கி எனக்கு அர்த்தம் வெளங்குற வயசு இல்ல.

சாரு ஒரே ஊருங்கிறதுனால... எப்பவும் எதுக்கால வாறப்ப, டீக்கடையில பாக்குறப்ப, நாங்க அம்புட்டுப் பேரும் எந்திரிச்சி நிப்பம். வணக்கம் சொன்னா... பெருமையாத் தலைய ஆட்டிக்கிட்டே போவாரு. சாருக்குச் சமீபமா மனசுல என்ன கவலன்னு தெரியல. ரிடேர்டு ஆனதுக்குப் பொறவு ரொம்பக் குடிக்க ஆரம்பிச்சிட்டாரு. அதனாலயோ என்னமோ ஒருநா மாரடைப்புல செத்தும் போயிட்டாரு. மனுசனோட சாவச் சாதாரணமா எடுத்திக் கிட்டாலும் அவருக்குச் சாவுற வயசு இல்லங்குறதுனால எங்களுக்குச் சாதாரணமா எடுத்துக்குற முடியல. எங்க ஊருல அவருக்கிட்ட படிச்சவைங்க ரெண்டு தலமொற ஆளுகன்னால அன்னைக்குக் கிட்டத்தட்ட ஊரே அழுதிச்சி.

இன்னமும் பள்ளிக்கொடத்தத் தாண்டிப் போகையில மங்களமா நெனப்புல நெறஞ்சி வழியுவாரு.. எங்க அறிவியல் சாரு....!!

- தொடரும் ■

# நின்ற வாகனமும் நிற்காத விரைவும்

• கவி: துரை.நந்தகுமார்
சித்திரம் : கொ.வடிவேல்


காலைநேரப் போக்குவரத்து
பரபரப்பின் உச்சமது.
பள்ளிக்குப் பறப்பவர்கள்
அலுவலக அன்பர்கள்
வியாபார நிமித்தமானவர்களால்
சாலைகள் நூடுல்ஸாய்
நெரிசலில் சிக்கித் தவிக்கிறது.
நாம் இடதுக்குச் சற்றே வந்தால்
நம் இடது அவருக்கு வலதாகிறது
நாம் வலதில் நகர்ந்தால்
இடதாகி இடர்ப்பாடாகிறோம்
இடக்கையாளருக்கு.
காற்புள்ளியளவு  இடைவெளியில்
நேராகவும்
சற்றே  வளைந்தும்
விரைந்தபடி விரைகிறது வாகனங்கள்.
சமிக்கையைக் கடந்துவிட எத்தனிக்கையில்
சிகப்பு விழுந்துவிட
பந்தயத்தில் நூலிழையில் பதக்கம் பறிபோன
சோகம் கவ்வுகிறது ஆழ் மனசுக்குள்.
நொடிகளே நிமிடங்களையும்
நிமிடங்கள் மணித்துளிகளையும்
மணிகள் நாட்களையும்
நாட்கள் வாரங்களையும்
வாரங்கள் மாதங்களையும்
மாதங்கள் ஆண்டையும்
ஆண்டுகளே யுகங்களையும் நிர்மாணிக்க;
காத்திருத்தல் காத்திருத்தலுக்கே
வற்றிப்போன குளமாகப்
பறக்கிறோம் அவரவராய்.
இந்தப் பறத்தலில் பின்தங்குகிறது
பறத்தலான பறவையின் விரைவு.
நீளுமிந்த நுணுக்கமான சிந்தனை
நெசவின் மத்திய நூலொன்று அறுபட்டதிற்கு
ஒப்பாகிறது
பிரதான சாலையோரத்து எழுதுபொருள்
கடையிலிருந்து
எனக்காக 192 பக்க நோட்டோடு
என்முன் அப்பா நிற்பது.
மெல்ல இறங்குகிறேன் நான்
இதுவரை நின்றிருந்த அவரது
இருசக்கர வாகனத்திலிருந்து. ■



நோபல் இலக்கியங்கள் அறிமுகம்

தொடர் - 1

• தா. ஜோ. ஜூலியஸ்




# இலக்கியத்தின் தோரண வாயில்

இலக்கியம் என்றாலே அது ஏதோ மெத்தப் படித்த மேதாவிகளின் சொத்து என்பதுதான் நம்மில் பெரும்பாலானவர்களின் கருத்தாக உள்ளது. உண்மையில் இலக்கியம் என்பது என்னவென்றால் "கலை வடிவம் கொண்டு அறிவு சார்ந்த மற்றும் சாதாரணமாக மக்கள் பயன்பாட்டில் இருக்கும் ஒரு மொழியில் இல்லாமல் வேறுபட்ட மொழியில் காலத்தில் அழியா வகையில் எழுதப்படுவது'' என ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கில அகராதி கூறுகிறது. அகராதிகள் கூறுவது புரியாமல் ஒருபுறம் இருக்க, இலக்கியத்தின் மெய்யான பொருள் என்ன வெனில், அது "வாழ்க்கை இலக்கணப் பிழை" என்று நகைச்சுவையாகக் கூறலாம். எப்படி எனில், "கோடு போட்டு நிற்கச் சொன்னால் சீதை நிற்கவில்லையே.. சீதை அங்கு நின்றிருந்தால் ராமர் கதை இல்லையே'' எனக் கவியரசர் கண்ணதாசன் ஒரு மிகப்பெரிய இலக்கியத்தின் சாரத்தைக் கூறி, அது வாழ்க்கையின் வெற்றி தோல்விகள் மீதான ஒரு விரிவான விமர்சனமே என்பதைச் சொல்லாமல் சொல்லியிருப்பார். அதைப்போலவே மற்றொரு காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் "கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கெனக் கொலைகளப்பட்ட கோவலன் மனைவி" என்பதும் உண்மையாகவே இலக்கணப் பிழையால் நிகழ்ந்த சோகம் எனலாம்.

இவ்வாறு மக்கள் வாழ்வில் ஏற்படும் பிறழ்வு, நெறிப் பிறழ்வு காரணமாகச் செய்யும் பிழையை, சிறந்த படைப்பாளி அதனைத் தான் செய்யும் விமர்சனம் வாயிலாகக் காவியமாகவும், பெரும் இலக்கியமாகவும் மாற்றிவிடுகிறான். அந்த வீழ்ச்சியை, குற்றத்தை அல்லது வெற்றியை நேரிடையாகச் சுட்டாமல், சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் சொல்வதுடன் மறைவாகப் படிமமாக இருப்பதை வாசகர் விளங்கிக்கொள்ள வைப்பதுதான் இலக்கியம் எனலாம்.

இலக்கியங்களில், கதை மாந்தரோடு நம்மை நாமே ஒப்பிட்டுப் புரிந்துகொள்வதும், அவர்களோடு ஒன்றித்து நாம் அவர்கள் வாழ்க்கையோடு பயணிப்பதும் என நம் வாழ்க்கையை வாழும் அதே நேரத்தில் கதாபாத்திரத்தின் இன்ப துன்பங்களையும் நிகர் வாழ்க்கையாக நாமும் வாழ்வது ஒரு அனுபவச் சிலிர்ப்பு ஆகும். இவ்வாறு வாசகரைச் சிலிர்த்திட வைக்கவும், இன்பத்தில் துள்ளிக் குதிக்கவும், சோகத்தில் கண்ணீர் விடவும் மாற்றவல்ல வகையில் படைக்கப்பட்டால் அது அந்தப்



படைப்பாளிக்குக் கிடைக்கும் வெற்றி ஆகும். இத்தகைய படைப்புகள், கதைக்குள் கதையாக, பல கதாபாத்திரங்களின் வாயிலாக வாழுகின்ற வாழ்க்கையைச் சொல்லிப் பல பிற்புலங்களில் நீட்சி பெற்று நிகழும்பொழுது, பேரிலக்கியமாக மிளிர்ந்துவிடுகின்றன.

படைப்பாளிகள் தாங்கள் வரித்துக்கொண்ட கொள்கையினைப் பிறர் மேல் திணிக்க வேண்டும் என்று முடிவு செய்து புனைவாக மற்றும் செயற்கையான கதாபாத்திரங்களை உலவவிடும் போது அந்த எழுத்தில் யதார்த்தபூர்வம் இருப்பினும், நம்பகத்தன்மை அறவே இருக்காது. ஆனால், உண்மைச் சம்பவங்களின் பின்னணியில் உண்மைக் கதாபாத்திரங்களின் பெயர்களை மாற்றித் தாமே அத்தகைய பேரிடரில் பங்குகொண்டு துன்பப்பட்டவர்போல் உணர்ச்சி மேலீட்டில் எழுதப்படும் கதைகள், அந்தப் படைப்பாளியைத் தனியே பிரித்துக் காட்டி இலக்கிய உலகில் தனிக் கிரீடமும் சூடிட வழி கோலும். அத்தகைய படைப்பே படிப்பவரையும் அத்தகைய தனி உலகுக்குக் கூட்டிச் செல்லும். அவ்வாறு எழுதி ஆட்டுவிக்கவல்ல தனித்தன்மை கொண்டவர்களே விருதுகளும் பரிசுகளும் பெறத் தகுதி உடையவர்கள் ஆகின்றனர். இலக்கியத்திற்காகப் பன்னாட்டு அளவில் கொடுக்கப்படும் விருதுகளும் பரிசுகளும் என்ன எனப் பார்ப்போமெனில் அதன் பட்டியல் மிக மிக நீளமாக இருப்பதால் அவற்றின் பெயரை மட்டும் இங்குக் குறிப்பிடுகிறேன்.

**மான் புக்கர் பரிசு, காமன்வெல்த் எழுத்தாளர்கள் பரிசு, கோஸ்டா புத்தகப் பரிசு, கில்லர் பரிசு, கவர்னர் ஜெனரல் பரிசு, கார்டியன் பரிசு, ஹ்யூகோ விருது, டர்னின் விருது, ஜேம்ஸ் பேய்ல்பிளாக் மெமோரியல் பரிசு, ஜான் லலுவெலின் ரைஸ் பரிசு, மைல்ஸ் ஃப்ரான்க்லின் இலக்கிய விருது, தேசியப் புத்தக விருது, தேசியப் புத்தக விமர்சகர் முழுப் பரிசு, நெபுலா விருது, நோபல் விருது, பென் ஃபாக்னர் விருது, புலிட்சர் விருது, பெண்களுக்கான விருது, கனடா நாடு எழுத்தாளர் அறக்கட்டளை விருது** எனப் பன்னாட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. இவற்றுள் **நோபல் பரிசு** என வழங்கப்படும் தொகை பெரியது என்பதாலும் உடன்வரும் உலகப் புகழும் மிகப் பெரியது என்பதாலும் **நோபல் பரிசு** என்றால் என்னவெனக் காண்போம்.

ஆல்ஃப்ரெட் பெர்ஹாண்ட் நோபல் 1833இல் அக்டோபர் 21ஆம் நாள் இம்மானுவெல் நோபல் மற்றும் கரொலினா ஆண்ட்ரியெட்டா ஆகியோர்க்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர். இவரது தந்தை வேதியியல் அறிஞர் மட்டு மல்லாது பொறியியல் அறிஞர், கண்டுபிடிப்பாளர் மற்றும் பெருங்கொடையாளி ஆவார். முதலில் வாழ்க்கை நொடித்துப்போயிருந்த அவரது தந்தை பின்னர் செழித்து வாழ ஆரம்பித்த நிலையில் ஆல்ஃப்ரெட் நோபலை மிக நன்றாகப் படிக்கவைத்தார். நோபலும் வேதியியல் பாடத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டு படித்தார். 1850ஆம் ஆண்டில் தன்னுடன் பயின்ற **நிகோலாய் சினின்** கண்டுபிடித்த **நைட்ரோ க்ளிசரின்** எனும் வெடிமருந்து எவ்வகைக் கட்டுப்பாடும் இன்றி வெடித்ததால் அதனைக் கட்டுக்குள் கொண்டுவர ஆராய்ச்சி மேற்கொண்டு அதற்கு **டைனமைட்** எனப் பெயரிட்டார். நமக்கு இன்று மிக நன்றாக அறிமுகம் ஆகியுள்ள போஃபர்ஸ் பீரங்கிகளையும் வெடிமருந்தாகிய டைனமைட்டையும் மேலும் பூரணத்துவம் அடையச் செய்து, தமது சகோதரர்களின் எண்ணெய் வயல்களில் பெருந்தொகையினை முதலீடு செய்து அதன் மூலம் பெரும் செல்வந்தர் ஆனார்.

இவர் உண்மையில் மரிப்பதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இவரது பெயரைத் தாங்கிய இவரது சகோதரர் மரித்தபோது ஊடகங்கள் இவர்தான் இறந்துவிட்டார் என்பதாகத் தவறாக நினைத்து “சாவு வணிகன் செத்தான்'' என்ற தலைப்பில் இவரைக் கேவலப்படுத்திச் செய்திகள் வெளியிட்டனர். மனிதனை அழிக்கும் வெடிமருந்தும் குண்டுகளும் தான் தனது வாழ்வில் செய்த மிகப்பெரிய தவறு என்பதை உணர்ந்தவர் தனது சொத்து முழுவதையும் மனித குல மேம்பாட்டுக்குச் செலவிடுவதே சிறந்த பரிகாரம் என நினைந்து ஒரு அறக்கட்டளை நிறுவிப் பரிசுகள் வழங்கிடுமாறு உயில் எழுதிவிட்டார். அதன்படியே நோபல் பரிசுகள் வழங்கப் படுகின்றன.

இலக்கியத்தில் படைப்பாளிகளின் அரிய பங்கு மற்றும் மனித குலத்திற்கான தொண்டு குறித்துப்

பாராட்டும்விதமாக இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஸ்வீடிஷ் அகாதமியால் ஆண்டுதோறும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படும் பரிசு ஆகும். 1895இல் **திரு ஆல்ஃப்ரெட் நோபல்** எழுதிய உயிலின்படி வேதியியல், இயற்பியல், இலக்கியம், அமைதி, மருத்துவம் ஆகிய ஐந்து தளங்களில் தங்கள் தனித்துவம் மற்றும் அரிய கண்டுபிடிப்புகளால் சிறந்து விளங்குவோர்க்கு இப்பரிசு வழங்கப்படுகிறது. அந்த உயிலில் சொல்லியுள்ளபடியே நோபல் அறக்கட்டளையால் இவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு சுவீடிஷ் அகாதமி என்ற பெயரில் பன்னாட்டுப் படைப்புகள் ஆய்வு செய்யப்பட்டு ஒருவர் மட்டும் தெரிவு செய்யப்படுவார். இலக்கியத்திற்கான முதல் நோபல் பரிசு ஃப்ரான்ஸ் நாட்டைச் சேர்ந்த **சல்லி ப்ரூதோமெ** என்பவருக்கு 1901இல் வழங்கப்பட்டது. பரிசு பெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு பதக்கம், ஒரு பாராட்டுப் பட்டயம் மற்றும் நிதிக் கொடையாகப் பெருந்தொகை (கோடிக் கணக்கில்) வழங்கப்படுகிறது. ப்ரூதோமெ முதன்முதலில் வாங்கியபொழுது 150,782 ஸ்வீடன் பணம் அதாவது இன்றைய மதிப்பில் 8.82 கோடி ஸ்வீடிஷ் பணம் பெற்றார். **ஆல்ஃப்ரெட் நோபல்** இறந்த தேதி ஆகிய **டிசம்பர் 10**ஆம் நாள் ஆண்டுதோறும் இப்பரிசு **ஸ்டாக் ஹோமில்** வழங்கப்படுகிறது.

2017ஆம் ஆண்டுவரை இலக்கியத்திற்காக இதுவரை 114 இலக்கியப் படைப்பாளிகட்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 14 பெண்கள் இலக்கியத்திற்கான பரிசுகளைப் பெற்றுள்ளனர். 1904, 1917, 1966, 1974 ஆகிய ஆண்டுகளில் ஒருவர்க்கு மட்டுமே அளிக்கப்படும் இப்பரிசு இரண்டு பேர்க்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. இலக்கியத்திற்கான நோபல் பரிசு 1914, 1918, 1935, 1940-1943 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்படவே இல்லை. இலக்கியத்திற்கான பரிசினை அதிக அளவில் பெற்ற நாடுகள் எவை எனப் பார்த்தோமெனில் ஃப்ரான்ஸ் 16 முறைகளும் அமெரிக்க ஐக்கியக் குடியரசு 12 முறைகளும் ஐக்கிய ஆங்கில நாடுகள் 11 முறைகளும் பெற்றுள்ளன.

பரிசு பெறப்போகும் அந்தத் தருணத்தைக் காண உலகமே விழித்துக் காத்துக்கிடக்கிறது. ஸ்டாக்ஹோம் நகர வீதிகள் விழாக்கோலம் பூண்டு பன்னாட்டு மக்கள் திரளால் நிரம்பி வழிகின்றது. மணிமேகலை எனும் காப்பியத்தில் விழாவறை காதையில், ‘மக்கள் வாழுகின்ற பொன்னகரமாகிய அமராபதி நகரத்தை வறிதாக விட்டுவிட்டு இப்புகார் நகரத்திற்கு வந்திருப்பர் என்பதும் இத்திருவிழா காலத்துத் தன்மையைக் கூர்ந்துணர்ந்த சான்றோர்கள் தெளிந்த தோருண்மை ஆகும்’ எனும் பொருள் தொனிக்கும் பாடலில்,

**பொன்நகர் வறிதாப் போதுவர் என்பது**
**தொல்நிலை உணர்ந்தோர் துணிபொருள் ஆதலின்**
**தோரண வீதியும் தோம் அறு கோட்டியும்**
**பூரண கும்பமும் பொலம்பாலிகைகளும்**


என விழாக் கோலக் காட்சி நம் கண்முன் விரிக்கப்படுகிறது. இவ்விழாக்களில் நோபல் பரிசு பெற்ற படைப்பாளிகளையும் அவர்களது படைப்பைப் பற்றியும் காணலாம்.

இவர்கள் படைப்பு பரிசு பெறக் காரணமாய் இருந்தது என்னவென்றால்.. இவர்கள் அனைவருமே தாங்கள் வாழ்ந்த வாழ்க்கைச் சூழலை நோக்கிப் பேசியவர்கள், அதன்மேல் தங்களால் ஆன வலுவான செல்வாக்கை நிகழ்த்த, அதை மாற்றியமைக்க முழுமூச்சாக விழைந்தவர்கள். அவர்களின் படைப்பு வேகம் என்பதை ‘ஆவேசம்’ எனக் கூடச் சொல்லலாம். அது அந்த விழைவிலிருந்து வந்ததுதான் என்றால் மிகையாகாது. ஆகவே முழுமூச்சாகத் தங்கள் படைப்புகளையும் எண்ணங்களையும் தாங்கள் வாழும் உலக மக்களுக்கு அவர்கள் கொண்டு சென்று சேர்க்க முனைந்தனர். அதற்காகவே, தங்களுக்கு இணையான மனங்களின் கூட்டுகளை, அமைப்புகளை உருவாக்க முற்பட்டனர். பலவகை நேர்மறை மற்றும் எதிர்மறை விமர்சனங்களைத் தைரியமாக முன்வைத்தனர். ஆழமான விவாதங்களை எழுப்பினர். தங்கள் தரப்பு ஓங்கி ஒலிக்கச் சாத்தியமான அனைத்து ஊடகங்களையும் கைப்பற்றிச் செயல்பட்டனர். அத்தகையோர் நோபல் பரிசு பெறும் விழாவின் இலக்கிய வாயிலின் தோரண வீதி வழியே நாமும் நுழைந்து நம் நாட்டு இலக்கியப் படைப்புகளை வறிதாக விட்டுவிட்டுப் பன்னாட்டுப் படைப்புகளைப் பற்றி ஒரு தொடராக வாசிப்போம்.

– தொடரும்

• கார்த்திக் திலகன்

# கவிதையின் வடிவம் செங்குத்து




**கவிதைத் தொகுப்பு:**

**ழ என்ற பாதையில் நடப்பவன்**

**ஆசிரியர்:**

**பெரு.விஷ்ணுகுமார்**

அது தீபத்திருநாள். சூரல் நாற்காலியில் அமர்ந்துகொண்டு ஒரு கையில் எனக்குப் பிடித்த அதிரசத்தை வைத்துச் சுவைத்துக் கொண்டிருந்தேன். மறு கையில் பெரு.விஷ்ணு குமாரின் 'ழ என்ற பாதையில் நடப்பவன்' என்ற கவிதைத் தொகுப்பை வைத்து வாசித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு கையில் இருந்து சொரூப சுவை

மறு கையில் இருந்து அரூப சுவை

நண்பா இந்த வாழ்விலும் ஒரு சுகமுண்டு என்று நகுலனுக்கு எதிர்நிலைக் கவிதையை எண்ணத்தோன்றியது எனக்கு.

ஒருதடவை க.நா.சுப்பிரமணியம் ஜெயகாந்தனிடம் கேட்டாராம், "பாரதி பாரதி என்று சொல்லிக்கிட்டிருக்காயே.. பாரதி எழுதலேன்னா என்ன பண்ணியிருப்பே?" என்று. "அதையெல்லாம் நான் எழுதியிருப்பேன்" என்றாராம் ஜெயகாந்தன்.

இப்படியாகப் பலம் மிக்கதொரு நம்பிக்கை யோடு புதிய நீரூற்று ஒன்று புறப்பட்டு வந்துவிடாதா? வறட்டுச் சொற்களின் வாரிசுகளை அது விரட்டி அடித்துவிடாதா? என்று என்னைப் போன்ற கவிதை விரும்பிகள் ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தவேளையில் விஷ்ணுகுமார் போன்ற இளைஞர்களின் வருகை நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது.

*/குருட்டுக்கண்களைத் திறந்துபார்த்தால்/ இருட்டுதான் பிரகாசமாகத் தெரிகிறது/* என்று பிரமிளைப் போலக் கவிதைநேசர்கள் புலம்பிக் கொண்டிருந்த வேளையில் இருட்டின் ஈசல் புற்றுக்குள் வெளிச்சப் பாம்பொன்று நுழைந்ததைப் போல இருக்கிறது இந்தப் புதிய கவிதைத் தொகுப்பின் வருகை.

'ழ என்ற பாதையில் நடப்பவன்' என்ற அவரது முதல் கவிதைத் தொகுப்பு மணல்வீடு பதிப்பாக அழகிய வடிவமைப்பில் வந்திருக்கிறது.

பேராற்றல் ஒன்று வலப்புயத்தில் தலைசாய்த்துப் பாதி உறங்கிக்கொண்டிருக்கும் நிலைதான் கவிதை என்கிறான் ஜான் கீட்ஸ். ஆனால் பேயோனுடைய ஒரு கவிதை இப்படி முடிகிறது..

*/ உணர்ச்சியின் வடிவம் கவிதை/கவிதையின் வடிவம் செங்குத்து /*

விஷ்ணுகுமாரின் எந்தக் கவிதையும் நிழலைப்போலக் காலடியில் கிடையாக வதங்கிக்கிடக்கவில்லை. மின்னல்களைக் குளிர்விக்கும் மந்தகாசத்தை ஏந்திநிற்கும் கூரிய கருவியாக வான்நோக்கி உயர்ந்து நிற்கிறது.

மெலிதானவைகள் என்ற கவிதையில் இப்படி ஒரு பத்தி இடையில் வருகிறது:

*/புரண்டு படுக்கத் தெரியாதவர்களின் கல்லறைகள்/ காற்றில் பறந்துவிடக்கூடாதென/*

*எல்லா மரங்களும் சருகுகளை அதன்மேல் எடை வைக்கத்தான் செய்கின்றன/*

இந்தக் கவிதையில் விஷ்ணு காட்டுகிற கல்லறை சருகைவிட எடையற்றதாக இருக்கிறது.

இன்னொரு கவிதையில் சவப்பட்டி செய்யும் தொழிலாளியின் குழந்தை அவன் செய்து வைத்திருக்கும் எல்லாச் சவப்பெட்டிகளிலும் இறங்கிப் படுத்துப்படுத்து விளையாடுகிறது.

இறுதியாகச் சிறிய பிள்ளைக்கென்று கச்சிதமாகச் செய்யப்பட்ட சிறிய கல்லறைப் பெட்டியில் இறங்கி அந்தக் குழந்தை படுக்கிறது. விஷ்ணு கவிதையை இப்படி முடிக்கிறார்:

*/அவ்வரிசையில்/தனக்கு மிகவும் அளவான/ பொறுத்தமான பெட்டிக்குள் போனவளுக்குப்/ பசீரென்றது/ உண்மையில் இங்கு இருக்க வேண்டிய சிறுமியை/ அப்பெட்டி பொருந்திப் போகவேண்டிய/ அச்சிறுமியை நினைத்துக் கொண்டாள்/*

*/அதற்குள்ளாக அருகில் வந்துவிட்ட/ அவள் அப்பா/ புன்சிரிப்போடு பெட்டியின் கதவை மூடுகிறார்/*

ஒரு சின்னஞ்சிறிய உயிர்க்காற்று அலை மோதும் அந்தச் சவப்பெட்டி எவ்வளவு எடைமிக்கதாக மாறி நம் மனத்தைக் கனமாக்கிவிடுகிறது.

தன் கைகளாலேயே விஷமூட்டப்பட்ட தனது குழந்தையின் கண்களைச் சந்திக்க முடிகிற தாய்மனம் வாழுகிற இந்தப் பூமியில் இந்தக் கவிதை தனது முழு அர்த்தத்தையும் பெற்று விடுகிறது. வெறும் அதிர்ச்சி மதிப்பீட்டிற்கான வரிகள் அவை இல்லை என்பதையும் நாம் விளங்கிக்கொள்ளமுடிகிறது.

ஏற்கெனவே தேய்வழக்காகிப்போன கற்பனைகளையும் சொல்அமைப்புகளையும் கைவிட்டுப் புதிய வீச்சோடு கற்பனைகளைச் சுழட்டியபடி முன்னேறுகிறார் கவிஞர். அதில் பழமையில் ஊறிப்போன பல பத்ம வியூகங்கள் உடைபட்டுச் சிதறுகின்றன.

*/யார் சொன்னது/ என்னிடமும் ஏராளமான வார்த்தைகளுண்டு/*

*என் நாக்கு அதை உறிஞ்சிக்கொள்வதால்/ உனக்குக் கேட்பதில்லை/*

*/நானொன்றும் ஊமையல்ல ராணி/ எனக்கும் சேர்த்து நீயே பேசிக்கொள்கிறாய்/ அவ்வளவுதான்/*

*/பிறகு ஒன்றும் உதவாமல்/ எதற்கந்த நாக்கு/*

*/இல்லை நம்பிக்கை கொண்டிரு/*

*என்றாவது ஒருநாள்/ மேலண்ணத்திற்கும் கீழண்ணத்திற்கும்/ இந்த நாக்கு துள்ளிக்குதிக்கும்/ உடைப்பதற்கு முன்பு/ தேங்காய்க்குள் நீராடுகிறதா வெனக்/ குலுக்கிப் பார்ப்பதைப்போல்/*

*/அப்போது அடக்கிவைத்திருந்த/*

*அத்தனைச் சொற்களும் சேர்த்து/*

*நான் பேசுகையில் பார்/ இரு மூடிகளால் பொத்திவைத்த ஓசைகள்/ சில்லுச்சில்லாய்ச் சிதறுவதை/*

மேற்சொன்ன இந்தக் கவிதையின் கற்பனாவேகத்தையும் சொல்லொழுக்கையும் காணும்போது எனக்குத் தேவதேவனின் கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

*/யார் உண்டாக்கிக் கொண்டிருப்பது/*

*நூறு நூறு மின்னல்களினால் அறியப்படும்/*

*/இவ்வாளின் சுழற்சியை ?*

*எவருடைய சிந்தனைகள் இவை ?/*

உண்மையில் ஆயிரம் ஆயிரம் மின்னல் களினால் அறியப்படும் சிந்தனை வாளின் சுழற்சியோடு முன்நகர்கின்றன இவரது பல கவிதைகள்.

ஒரு கவிஞன் தொடர்ந்து கவிஞனாக இருக்கவேண்டுமென்றால் அவன் தனது குழந்தைமையைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவேண்டும். எப்போது அவன் மனம் முதிர்ச்சியடைந்ததாகத் தன்னை உணருகிறதோ அப்போதே அவனது கவிதை உணர்வும் மரத்துப்போய் விடுகிறது. ஏனென்றால் கவிஞன் காலத்தின் குழந்தை. கண்ணன் கோபியர்களோடு விளையாடியதைப் போல அவன் சொற்களோடு விளையாடுகிறான். இன்னும் மேலே போய் எழுத்துக்களோடு விளையாடுகிறான். எழுத்துக் களைக் கலைத்துப்போட்டு விளையாடுகிற ஆட்டத்தை எனக்குத் தெரிந்து ஆங்கிலத்தில் இ.இ.கம்மிங்ஸ் தொடங்கியிருக்க வேண்டும். தமிழில் எல்.வைத்தீஸ்வரன் தொட்டுப் பலர் அந்த விளையாட்டைத் திறம்பட ஆடி இருக்கிறார்கள்.

கால எந்திரம் என்ற கவிதையில்

*/வெறும் பேச்சுக்குத்தான் கூறினேன்/ காலம் பின்னோக்கி நகருகிறதென்று/*

*அதையும் நம்பி/*

*கொடியிலிருந்து சொட்டிய நீரெல்லாம்/ ஆடைக்கே மீள்கிறது/ மிருகத்தின் வாய்க்குள் சிக்கிவிட்ட காலை/ இரையானது வெகு வேகமாய் இழுத்துக்கொள்கிறது/*

*தலை சுற்றி விழுந்த ஒருவன்/ 'றிற்சுலைத்' எழுகிறான்/*

இதைப் படிக்கிறபோது கண்களும் கைதட்டி ரசிக்கின்றன அல்லவா?

தேவதச்சன் ஒரு கவிதையில் எழுதுகிறார்,

*/ஒரு போதும் / மீன்கள் திரும்புவதில்லை/ கடல்கள் திரும்பிக் கொண்டிருக்கின்றன/*

*மீன் திரும்பினால்/ ன்மீ ஆகிவிடுமே/*

காதலி கடித்த நாவல்பழம் நமக்குக் கற்கண்டாவதைப் போலக் கவிஞன் சிதைத்த சொல் கவிதையை எவ்வளவு ருசிகரமாக மாற்றிவிடுகிறது.

ஒரு கவிஞன் அகவயக் கவிதைகளை (meta-physical poetries) எழுதுகிற அதே வேளை புறவயமான சமூகப் பிரக்ஞையுள்ள கவிதை களையும் படைக்கும்போதுதான் அவனது கலை பூரணத்தன்மை அடைகிறது.

இந்தத் தொகுப்பில் நீச்சல் பயில்வித்தல் என்ற தலைப்பிலான ஒரு கவிதையை இதற்குத் துல்லியமான எடுத்துக்காட்டாக நான் சொல்வேன்.

ஒரு தவளை குளிப்பதற்குப் பயந்து குளக்கரையில் நின்றுகொண்டிருக்கிறது. அப்போது நீச்சல் பயில்விக்கக் குழந்தையோடு குளத்திற்கு வரும் ஒரு யுவதியைக் காண்கிறது.

கவிதை இப்படி நகர்கிறது..

*/துணைக்கு இருவர் கிடைத்த மகிழ்ச்சியில்/ கரையிலிருந்த தவளை/ அவர்களோடே மூழ்குகிறது/ அவர்களோடே எழுகிறது/ அவர்களோடே மூழ்குகிறது/ அவர்களோடே எழுகிறது/*

*இப்போது மூன்றாம்முறை/ மூழ்கியவர்கள்/ இன்னும் எழவில்லை/ ஒருவேளை/ மூச்சடக்கிப் பழகுகிறார்களோவெனக் காத்திருந்து/*

*பாவம்/ குளத்துக்கரையில் நிற்கும் தவளை/ எவ்வளவு நேரம்தான் மூச்சடக்கியிருப்பது/*

தன்னை ஒரு நூதனக்கிறுக்கன் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு கவிஞனால், பெரும்பாலான கவிதைகளில் சொல்லையும் பொருளையும் காலத்தையும் மூன்று பந்துகளாகக் கைமாற்றிப் போட்டு விளையாடும் கோமாளித் தன்மையோடு கவிதைகளைக் கையாளத் தெரிந்த ஒருவனால், உயிரின் சல்லடைத் துளைகளுக்குள் உணர்வுகள் புகுந்து அடைத்துக்கொண்டு நம்மை மூச்சுத்திணற வைத்துவிடுகிற கவிதைகளையும் படைத்துவிட முடிகிறது.. என்கிறபோது சமன் குலையாத கவித்துவத்தின் ஸ்திரத்தன்மையை அவரது கவிதைகளில் காணமுடிகிறது.

வயலினா என்ற தலைப்பில் இசை குறித்த நெடுங்கவிதைகளைக் கடைசி அத்தியாயமாக அமைத்திருக்கிறார் கவிஞர்.

*1) /பியானோவில் கைவைத்துவிட்டு/ எப்படி துவங்குவதென்று தெரியாதவனுக்கு/ அடுத்தடுத்துத் தும்மல் வரத்தொடங்கியது/ மீதியைப் பியானோ பார்த்துக் கொண்டது/*

*2) /தன் மனைவி/ தலைசீவுவதைப் பார்த்த பின்புதான்/ அவருக்கு வயலின் மீதான ஆசை வந்தது/*

என்பன போன்ற நம் நாவின் கூர்முனையை நோக்கிக் குறிபார்த்து வீசப்பட்ட தேன்துளி களைப் போல இந்தக் கவிதைகளில் பல்வேறு இடை வரிகள் உண்டு.


பேராசிரியர் அய்யப்ப பணிக்கர் தற்காலத் தமிழ்க் கவிதைகள் ஆட்டான் புழுக்கை களைப்போலச் சின்னசின்னதாக இருக்கின்றன என்றபோது, கவிஞர் சரவண சுப்பையா மலையாளக் கவிதைகள் காளை மூத்திரத்தைப் போல நீண்டிருக்கின்றன என்றாராம்.

பெருங்கதையாடல்களைக் கவிதைகள் மூலம் நிகழ்த்தி இருக்கிற இலக்கியப் பாரம்பரியம் நம்முடையது என்பதால் இந்த நீள் கவிதைகள் ஆயிரம் கண்கள் கொண்ட மயில் தோகையைப் போல அழகுற அமைந்திருப்பதைப் பாராட்டிச் சொல்லியாக வேண்டும்.

நகுலன் கவிதையை அனுபவப் புணர்சிருஷ்டி என்று சொல்கிறார். விஷ்ணுகுமாரின் கவிதைகள் சொல்லும் மனமும் புணர்ந்து உண்டாகும் பரவச நிலையை நம்முள் உண்டாக்கிவிடுகின்றன.

ஆங்கிலத்தில் Avant - garde என்றொரு சொல் உண்டு. இது இலக்கியச் சொல் என்றாலும் ராணுவ உருவகம் கொண்டது. இதன் அர்த்தம் 'இலக்கிய முன்னணிப்படை'.

தமிழில் முற்றிலும் இளம் படைப்பாளிகளைக் கொண்ட முன்னணிப்படை ஒன்று உருவாகு மானால் அதனை வழிநடத்தும் தளகர்த்தர்களில் ஒருவராகும் தகுதி விஷ்ணுவுக்கு உண்டு என்றே துணிந்து கூறுவேன். ■





• பொன். குமார்

# பல படைப்பாளிகளை உருவாக்கிய படைப்பாளி

சிற்றிதழ் வரலாற்றில் சுகனின் பங்களிப்பு என்பதைத் தவிர்க்க முடியாது. மறுக்கமுடியாது. ஒவ்வொருவரும் தாங்கள் இதழ் தொடங்கும் போது சிற்றிதழுக்கு என்று ஒரு பெயர் வைப்பர். தன் பெயரையே இதழுக்கு வைத்து அழகு பார்த்தவர் சுகன்; பெருமை சேர்த்தவர் சுகன்.

சுகனின் முதல் இதழ் 1987 ஜீனில் வெளிவந்தது. முதல் இதழ் கையெழுத்து இதழாக மலர்ந்திருந்தது. பின்பு உருட்டச்சாகவும் அதன் பின்பு அச்சு இதழாகவும் வந்தது. இறுதி இதழ் எண் 334 ஜூன் 2015இல் வெளியானது. முதலும் முடிவும் ஜூனிலேயே உள்ளது. தொடக்கத்தில் சௌந்தர சுகன்; தொடர்ந்தபின் சுந்தர சுகன். எப்போதும் சுகனே.....

சுகன் என்றதும் சிற்றிதழும் நினைவிற்கு வரும்; சுகனின் சிரித்த முகமும் நினைவிற்கு வரும். இரண்டையும் பிரித்துப் பார்க்கமுடியாது; பார்க்கவும் கூடாது. சுகனைப் பொறுத்தவரை சுகனுக்கு சுவாசம். சுகனின் சுவாசம் நின்று போனதால் சுகனும் நின்றுபோனது.

இறக்கும்வரை இதழ் நடத்திய போராளி சுகன். அவர் இறக்கும்போது தயாரித்த இதழ் எண் 334. ஒரு சிற்றிதழ் ஒரு தனி மனிதரால் ஒரு சாதாரணக் கவிஞரால் ஓர் எளிய மனிதரால் 334 வரை கொண்டு வரப்பட்டிருப்பது ஒரு பெரும்சாதனை. "உயிர் இருக்கும்வரை இதழ் வரும் என்ற லட்சியத்தோடு அவர் உயிர் பிரிந்தபிறகும் இதழ் வெளியிட்ட சாதனையாளர். சௌந்தர சுகனின் இதழாசிரியர் கவிஞர் சுகன் அவர்கள் 05.06.2015 அன்று நம்மை உடலால் பிரிந்தார். அந்தப் போராளிக்கு வீரவணக்கம்.. வீரவணக்கம்" என்று வீரவணக்கம் செலுத்திய அவரின் மாணவர் பொ. முத்துவேல் அவர்களே 'சிற்றிதழ்ப் போராளி' என்னும் ஒரு சிற்றிதழைக் கவிஞர் சுகன் நினைவாகக் கொண்டுவந்தார். மூன்றே இதழுடன் நின்றுபோனது பெரும்சோகம். 'சிற்றிதழ்ப் போராளி சுகன்' என்னும் தலைப்பிலேயே ஒரு கட்டுரையைக் கவிஞர் சக்தி அருளானந்தம் சிற்றிதழ்ப் போராளியில் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர் சுகன் அவர்களை ஒருமுறை திருச்சியில் ஒரு நிகழ்ச்சியில் சந்தித்தேன். அவர் மேடையில் இருந்தார். பார்வையாளர்களில் ஒருவராக இருந்தேன் நான். இடைவெளியில் அறிமுகமானோம். நல விசாரிப்புடன் முடிந்தது அந்தச் சந்திப்பு. அதன் பின் எழுத்தின் மூலமாகவே தொடர்பு. ஒன்றிரண்டு முறை தொலைபேசியில் உரையாடிய நினைவு.

சுகனின் சிறப்பு தலையங்கம். சுகனுக்கும் அதுவே பலம். 'எழுதுகோலால் எண்ணக்கண் திறப்போம்' என எழுதுகோலால் எண்ணங்களை வெளிப்படுத்தியவர். வாசகர்களின் எண்ணங் களையும் திறந்தவர். ஒரு மாத இடைவெளியில் நிகழ்ந்தவை குறித்துத் தன் கருத்தை நேர்மையாகப் பதிவுச் செய்திடுவார். வாசிப்பவரையும் பங்கெடுக்கச் செய்திடுவார். "இன்றைய தலைமுறைக்கு மொழி உணர்வைப் பற்றியோ, நாட்டைப் பற்றியோ அதிக அக்கறை எல்லாம் இல்லை. எப்படியாயினும் கைநிறைய சம்பாதிக்க வேண்டும். தனது வாழ்க்கைக்கான உத்தரவாதத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற முனைப்பிலேயே இருக்கிறார்கள். அது நாட்டின் பாதுகாப்பிற்கே நல்லதில்லை என்பதை ஏதாவது பாதிப்பு வந்தால்தான் உணருவார்கள் போலிருக்கிறது" என்று அதீத அக்கறையுடன் அக்டோபர் 2006இல் எழுதியுள்ளார். "சிற்றிதழ்கள் என்றில்லை. ஓரிரு நல்ல நூல்களைக் கொண்டுவரும் மிகச்சிறிய பதிப்பகங்களின் நூல்களைக் கூட வாங்குவதில்லை. ஆயிரம் படிகள் நூலகத்தில் வாங்கப்படுகிறது என்றால் அது பதிப்பக முதலாளிகளுக்கு இலாபத்தைத் தருகிறது. அதனால் எழுத்தாளனுக்குக் கூடப் பலன் இல்லை" என்று எழுத்தாளர்கள் மீதான அக்கறையுடன் செப்டம்பர் 2008 இதழில்

எழுதியுள்ளார். கவிஞர் சுகனின் மறைவுக்குப்பின் 'எழுதுகோலால் எண்ணக்கண் திறப்போம்' (சுகன் தலையங்கங்கள்) என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பாக வெளியாகியுள்ளது. ஒரு தொகுப்பாக வாசிக்கும்போது அவரின் சமூக, அரசியல், இலக்கியம் குறித்த அறிவை உணர முடிகிறது.

சுகனின் தலையங்கங்கள் எந்தளவிற்குச் சிறப்போ அந்தளவிற்குக் குறிப்பிடத்தக்கது 'கூர்' என்னும் வாசகர் கடிதப் பகுதி. வாசகர்களைக் கூர்ந்து கவனிப்பதில் ஆர்வம் கொண்டவர். கூர் பகுதிக்கு என்று அதிக பக்கங்களை ஒதுக்கியவர் சுகன். அதிக வாசகர்களுக்கு வாய்ப்பளித்தவர் சுகன் என்றால் மிகையில்லை. கூர் பகுதியைப் படித்தாலே முந்தைய இதழ் படித்தது போலிருக்கும். முந்தைய இதழ் எப்படிப்பட்டது எனத் தெரிந்துகொள்ளவும் வாய்ப்பாக இருக்கும். "எ. கோ. எ. க. திறப்போம் 'அதிகாரம் - அதிகாரிகள் - அரசியல்வாதிகள் - மக்கள்' இந்த நான்கு முனை உறவை மிகச் செறிவாகப் படம் பிடித்திருக்கிறது" என்று கவிஞர் வெற்றிப்பேரொளி செப்டம்பர் 2006இல் எழுதியுள்ளது எடுத்துக்காட்டுக்குரியது.

கவிஞர் சுகன் எழுத்தாளர்களுக்காகவும் கவிஞர்களுக்காகவும் படைப்பாளிகளுக்காகவும் ஆதரவு அளித்து வருபவர். இதனை எழுத்தாளர் சுந்தரராமசாமி, எழுத்தாளர் வல்லிக்கண்ணன் ஆகியோரின் மறைவு குறித்து எழுதிய தலையங்கம் மூலம் உணர்த்தியுள்ளார். கவிஞர் சுரதா மறைவின்போது அரசு மரியாதையுடன் அடக்கம் செய்திருக்க வேண்டும் என்று அடக்கமுடியாத ஆதங்கத்தை வெளிப்படுத்தி யிருப்பதைக் காண முடியும்.

சிற்றிதழ் வளர்ச்சிகளுக்கு முக்கியமானது சந்தா. சந்தா செலுத்திவிட்ட காரணத்திற்காகப் படைப்புகளை வெளியிடுவதில்லை சுகன். படைப்பு பிடித்திருந்தால் படைத்தவர் எவராக இருந்தாலும் சந்தா செலுத்தி இருந்தாலும் செலுத்தவில்லை என்றாலும் வெளியிடத் தயங்கியதில்லை சுகன்.

சுகன் மூலம் பல படைப்பாளிகளை உருவாக்கியவர் சுகன். கவிஞர் வெற்றிப்பேரொளி போன்றோரின் வளர்ச்சிக்குக் காரணம் சுகன். எழுத்தாளர் வா. மு. கோமு இன்று ஒரு பெரிய எழுத்தாளராக இருக்கிறார். இவரின் சிறுகதைகளைத் தொடக்கத்தில் சுகனில் வெளியிட்டுக் களம் அமைத்துக் கொடுத்தவர் சுகன். கவிஞர் சுகனால் வளர்க்கப்பட்டவர்கள், உருவாக்கப்பட்டவர்கள் இன்று குறிப்பிடும் படியான எழுத்தாளர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கவிஞர் சுகன் காதல் லிபிகள், காமக்கூத்து, பூஞ்சாலி ஆகிய கவிதைத் தொகுப்புகளையும் ஆழத்திலிருந்து அனலொன்று என்னும் சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். பூஞ்சாலி தொகுப்புடன் ஒரு கடிதமும் 20.07.2014 அன்று எழுதியிருந்தார்.

"வணக்கம்.

கவிதைகள் வந்தன. தங்கள் கவிதைகளில்

'கருத்து, எழுத்து பயன்' என்கிற இரண்டு கவிதைகள்

மட்டும் தேர்வு ஆயின.

படித்துறை இரண்டாவது இதழும் வந்து விட்டதே. முதல் இரண்டு இதழ்களும் வாங்கி வாசித்துவிட்டேன்.

நிரம்ப எழுதுகிறீர்கள்.. நன்கு

நிதானித்து எழுதினால் சிறப்பான 'கவிதைகள்' அதிகம் வரும்.

இத்துடன் எனது 'பூஞ்சாலி' கவிதைத் தொகுப்பு அனுப்பிஇருக்கிறேன்.

சுகன் ஆண்டு சந்தா ரூ. 120/ செலுத்தலாம்.

நன்றி"

எனக் கையொப்பமிட்டுக் கடிதம் அனுப்பி இருந்தார். அத்தொகுப்பிற்கு விமரிசனமும் எழுதி அனுப்பினேன். அந்த விமரிசனம் 'கவிப்பயணம்' என்னும் என் தொகுப்பில் உள்ளது.

சுகன் இதழ் எனக்கு வருவது நின்று போனாலும் கவிஞர் சக்தி அருளானந்தம் மூலம் வாங்கி வாசித்து எழுதிக்கொண்டிருந்தேன். கவிஞர் சக்தி அருளானந்தம் மூலம் அவர் உடல்நலம் குறித்து அறிந்தேன். அதிர்ந்தேன். கவிஞர் வெற்றிப்பேரொளி, கவிஞர் சக்தி அருளானந்தம் ஆகியோரெல்லாம் இணைந்து சுகனின் மருத்துவச் செலவிற்கு உதவினர் என்னும் தகவலும் அறிந்தேன். இறுதிக்காலத்தில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளான செய்தியும் சக்தி வாயிலாகவே அறிய முடிந்தது. பின்னொரு நாளில் சுகன் இறந்த செய்தியும் வந்தது. சோகம் தந்தது.

சுகன் மூச்சும் நின்றுபோனது.

சுகன் வருவதும் நின்றுபோனது.

இரண்டுமே இலக்கியத்திற்கு ஈடுசெய்ய முடியா இழப்பு. ■



சுகன் நினைவுகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

• பொ.முத்துவேல்

# நல்லாசிரியர் சுகன்

நான் ஆறாம் வகுப்பில் படித்தபோது எல்லோரும் உற்சாகமாய் இருந்தோம். தஞ்சாவூருக்கு எங்கள் பள்ளியிலிருந்து சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுகன் சார்தான் மற்ற ஆசிரியர்களை ஒத்துக்கொள்ள வைத்திருந்தார். இளையோர் செஞ்சிலுவைச் சங்கத்தின் மாணவர் தலைவன் என்ற முறையில் மாணவர்களைப் பாதுகாக்கும் வேலையை என்னிடம் சொல்லியிருந்தார். எங்கள் குழுவிற்குச் செயல்படவேண்டிய முறைகளைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். ஜெஆர்சி சீருடையில் நீங்களெல்லாம் காவலர்கள் போலக் கையைக் காட்டினால் எல்லா வண்டியும் நின்றுவிடும் என்று சொன்னதைக் கொண்டு அடிக்கடி மாணவர்கள் சாலையைக் கடக்கக் கைகளைக் கோர்த்துக்கொண்டு வாகனங்களை நிறுத்திப் பார்த்தோம். வரிசையாக மாணவர்களை அழைத்துச்செல்வதிலிருந்து அவர்களின் பாதுகாப்பிற்காக அருகில் நிற்க வேண்டியவர்கள் என்று எல்லாம் திட்டமிடப்பட்டிருந்தது. தஞ்சை வீதியில் நடக்கும்போது சாக்கடையில் விழுந்துவிடாமல் நின்றுகொண்டு பாதுகாப்பது, மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றித் தருவது என்று எங்கள் குழு சிறப்பாகச் செயல்பட்டது. நான் சாருக்குப் பக்கத்தில் இருப்பேன். அவர் சொல்வதை விரைந்து ஓடிப்போய்ச் செய்வதற்காக நான் அவரருகில் இருந்தேன். ஒவ்வொரு இடத்திலும் நின்று கொண்டு எல்லாரையும் கூட்டிக் குட்டிவிளக்கம் ஒன்று சொன்னார். பிறகு தஞ்சை அரண்மனையில் மாணவர்களில் சிலர் கட்டுப் பாட்டை மீறி ஆயுதக்கிடங்கின் மீது ஏறிவிட்டனர். அப்போது மேல்தளம் வரை செல்வதற்கு இப்போது இருப்பதுபோல் தடையில்லை.சாருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த என்னைப் பார்த்து 'ஓடிப்போய் மேலே ஏறியவர்களை எல்லாம் இறங்கிவரச் சொல், ஓடு' என்று விரட்டினார். நான் ஒவ்வொரு தளத்திலும் நின்றவர்களை இறக்கியபடி மேலே சென்றுவிட்டேன். அங்கிருந்தவர்களை இறங்கவைத்துவிட்டுப் பின்னாலேயே நானும் இறங்கிக்கொண்டிருந்தேன். அதற்குள் சாரும் மேலே வந்துவிட்டார். அவர் என்னை அனுப்பியதை மறந்துவிட்டு 'உன்ன எல்லாரையும் கட்டுப்படுத்தச்சொன்னா நீ எல்லாரையும் அழைச்சிக்கிட்டு மேலே வந்திருக்க' என்று முதுகில் ஒன்று வைத்தார். 'நீங்க சொல்லித்தான் சார் வந்தேன்' என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால் அதற்குள் அடுத்த தளத்திற்குச் சென்றுவிட்டார். நான் உம்மென்று இருந்தேன். அவருடன் பேசவில்லை. நான் அருகிலேயே இருந்தேன், மூஞ்சைத் தூக்கிவைத்துக்கொண்டு. 'ஏன் மேலே போன?' என்று என்னிடம் கேட்க நான் நடந்ததைச் சொன்னேன். பிறகு என்னைச் சமாதானப்படுத்தினார்.

களப்பயணமும் அழைத்துச்சென்றார். அவர் சோளகம்பட்டி ரயில் நிலையத்தில் மிதி வண்டியைப் போட்டுவிட்டு ரயிலில் வந்து கொண்டிருந்தார், சென்றுகொண்டிருந்தார். அந்த மிதிவண்டிப் பயணம் அவருக்கு மிகவும் பிடித்தமானது. ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள தாள் உற்பத்தி ஆலையில் பேசிக் களப்பயணத்திற்கு அனுமதி வாங்கிவிட்டார். அதன் உரிமையாளரிடம் பேசி அந்த நிறுவனத்தின் வாகனங்களிலேயே நாங்கள் சென்றுவந்தோம். அந்த இயந்திரங்களில் எதையும் தொடக்கூடாது என்று அவர் எச்சரித்த எச்சரிப்பில் உள்ளே போய்விட்டுப் பயந்து கொண்டே வெளியில் வந்தோம். அந்த ஆண்டுப் பள்ளி ஆண்டுவிழாவில் அந்த நிறுவனத்தின் உரிமையாளர்தான் சிறப்பு அழைப்பாளர். அவர் வாங்கித்தந்த இரும்பு பீரோவில்தான் சார் கொடுத்த நூல்களைக் கொண்டு பாரதிதாசன் நூலகம் இயங்கியது.

விழாவிற்கான கலைநிகழ்ச்சிகள் வித்தியாச மாய்த் தயாராகும். திரைப்பாடல் ஒன்றுகூட அதில் இடம்பெறாது. அருமையான தமிழ்ப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து அதற்கு நடனம் ஆடவைப்பார். பாவலரேறு பாலசுந்தரம் ஐயாவின் 'தமிழ்நாடே செந்தமிழ்நாடு' என்ற பாடல் அப்படித்தான் மாணவர்கள் மத்தியில் அறிமுகம் செய்யப்பட்டது. அவர்தான் நடனப் பயிற்சியாளர். ஆண்கள் சிலரையும் பெண்கள் சிலரையும் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்தார். அவர் வராத அன்று திலகவதி டீச்சர்

குழுவிலிருந்து ஆண்கள் சிலரை நீக்கிவிட நான் மட்டும்தான் நின்றுகொண்டிருந்தேன். நானும் நீங்குகிறேன் என்று சொல்லி வெளியில் வந்துவிட்டேன். மறுநாள் சார் வந்து பார்த்துவிட்டு மறுபடி எல்லோரையும் அழைத்துப் பயிற்சியளித்தார்.

இதில் திலகவதி டீச்சரைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். டீச்சர் கடும் கோபக்காரர். ஆசிரியர்கள் எல்லோரும் பயப்படுவார்கள். பணிக்கு வருவதற்கு முன்பு எம்.பி. தேர்தலில் நின்று தோல்வியடைந்தவர். பட்பட்டென்று கோபம் வந்துவிடும். அவரிடம் அன்பாகப் பேசுபவர் சார் மட்டும்தான். அவரது அற்புதமான குரல்வளத்தைக் கண்டறிந்து 'தமிழ்நாடே செந்தமிழ்நாடு' என்ற பாடலைப் பாட வைத்தார். அவர் குரலில் மாணவர்கள் நடனமாடினோம். தென்னகப் பண்பாட்டு மையத்தில் நடைபெற்ற போட்டியில் நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிகள் கலந்துகொண்டபோதும் எங்கள் பள்ளி தஞ்சாவூர் மாவட்டத்திலேயே இரண்டாம் பரிசு பெற்றது.

அவர் மாறுதலானபோது அவரைத் தடுக்க நாங்கள் போராடினோம். மாணவர்கள் பெரும்பாலானவர்கள் வகுப்பறையை விட்டு வெளியில் வந்து நின்றுகொண்டோம். ஆசிரியர்கள் அழைத்தும் நாங்கள் போகவில்லை. சார் கூப்பிட்டுப் பேச்சுவார்த்தை நடத்தினார். 'நீங்க போகக்கூடாது' என்று அழுதுகொண்டே சொன்னோம். எங்களைச் சமாதானப்படுத்த முடியாமல் 'நான் போகல, எல்லாரும் வகுப்புக்குப் போங்க' என்றார். நாங்கள் நம்பிக்கையோடு வகுப்பறைக்குச் சென்றோம். மறுநாள் செல்வது உறுதி என்று எங்களுக்குத் தகவல் கிடைத்தது. நான், பாரதிமோகன், முருகானந்தம், சக்திவேல் இப்படி இருபதுக்கும் மேற்பட்டவர்கள் பள்ளிக்குத் தொலைவில் இருந்த ஒரு மரத்தில் ஏறிக்கொண்டு இறங்க மறுத்தோம். ஒரு பையனை அனுப்பி எங்களை அழைத்துவரச் சொன்னார்கள். வந்தவனை அருகில் அழைத்து அடித்து விட்டேன். அவன் அழுதுகொண்டே போய்விட்டு மறுபடி வந்தான். இப்போது அருகில் அழைத்த போது வர மறுத்துவிட்டான் பயந்துகொண்டே. நான் அடிக்கமாட்டேன் என்று உறுதி அளித்ததும் அவன் வந்தான். மற்ற மாணவர்கள் அவனை அடித்து விரட்டிவிட்டார்கள்.

இப்போது வேறு ஒருவன் வந்தான். 'முத்துவை மட்டும் சுந்தர் சார் கூப்பிடுறார்' என்று சொன்னான். நான் மட்டும் இறங்கிப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றேன். சார் என்னைக் கூப்பிட்டுத் திட்டினார். 'இதெல்லாம் உன் வேலதான?' என்று. நான் தேம்பிக்கொண்டு நின்றுகொண்டிருந்தேன். முதுகைத் தடவிக் கொடுத்தபடி என்னை அருகில் கிடந்த நாற்காலியில் உட்காரவைத்து 'எல்லாரையும் நீ பள்ளிக்கு வரச்சொல்' என்றார். நான் 'முடியாது' என்றேன். பிறகு பேசிச் சிரித்து எப்படியோ மனத்தை மாற்றிவிட்டார். நான் போய் மற்ற மாணவர்களை அழைத்துவந்தேன்.

ஓட்டுக்கட்டிடத்தில் அனைத்து மாணவர்களும் அமர்ந்திருந்தோம். அங்கிருந்து இரண்டு மூன்றுபேர் மாறுதலானார்கள். அனைவரின் விழிகளும் சாரைத்தான் பார்த்துக் கொண்டிருந்தன. சார் பேச எழுந்தார். 'எல்லாமும் ஒரு கனவு மாதிரி இருக்கிறது. காலையில் கண்விழித்ததும் நமக்கு இன்பம் தருவதுபோல நல்ல கனவு' என்று தொடங்கி அறிவுரைகளைக் கூறினார். இரண்டு மூன்று தடவை கூட்டத்தில் உட்கார்ந்திருந்த என்னையும் பார்த்தார். கொஞ்சநேரம் கழித்து நான் அவரிடம் போனபோது 'நான் சொன்னதெல்லாம் புரிஞ்சதுதான' என்று கேட்டார். நான் தலையாட்டினேன்.

அவர் பள்ளியிலிருந்து புறப்பட்டபோது நானும் முருகானந்தமும் புதுக்குடி பேருந்து நிறுத்தத்தில் அவரை விட்டுவிட்டு அவருடைய மிதிவண்டியைத் திரும்பப் பள்ளிக்கு எடுத்து வருவதற்காகப் போனோம். அவர் ஒரு சைக்கிளிலும் நாங்கள் ஒரு சைக்கிளிலும் சென்றுகொண்டிருந்தோம். திருச்சி தஞ்சை சாலையில் இருந்த புதுக்குடியில்தான் பேருந்துகள் நிற்கும். அவர் ஏதோ சொல்லிக்கொண்டுதான் வந்தார். நாங்களிருந்த மனநிலையில் ஒன்றும் ஏறவில்லை. புதுக்குடி சென்றதும் அங்கே அப்போது கொடிகட்டிப்பறந்த மாஸ்டர் கடையில் நாங்கள் எவ்வளவு மறுத்தபோதும் கேட்காமல் புரோட்டாவும் ஆம்லெட்டும் வாங்கிக்கொடுத்தார். அருகில் உட்கார்ந்து நாங்கள் சாப்பிடுவதையே பார்த்துக்கொண்டிருந்தார்.


அவர் இல்லாத பள்ளி வெறுமையாகத் தோன்றியது. ஆசிரியர் மாணவர் உறவு என்பது வகுப்பறையைக் கடந்து வீடுவரை நீளச்செய்யும் அற்புதம் அவரிடமிருந்தது. மாணவர்களோடு பொங்கல் கொண்டாடுவது அவருக்கு மிகவும் பிடிக்கும். கூலிக்கு மாரடிக்காத நல்லாசிரியர் அவர். என் ஆசிரியரைப்பற்றி ஒரு மாணவனாக மட்டும்தான் சொல்லியிருக்கிறேன். இன்னமும் சொல்லவேண்டியது எவ்வளவோ இருக்கிறது. ■


**அகழ்வும் நிகழ்வும்**

**தொடர் - 7**

• முகம்மது பாட்சா

# பாஷோவின் பழைய குளம்




**க**ல்யாணக் கூட்டம்
முதிர்கன்னியின் தலையில்
கொஞ்சம் அட்சதைகள்

-கவிஞர் மு. முருகேஷ்

இந்த ஹைக்கூ கவிதை நம் மனதைக் கொஞ்சம் அசைத்துப்பார்க்கிறது. இப்படிப்பட்ட சிந்தனைகள்தான், ஹைக்கூவின் தகுதியை மேன்மைப்படுத்துகின்றன. இந்தப் பயிற்சியை ஹைக்கூ ஆர்வலர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

ஓவியக்கவிஞர் அமுத பாரதி அவர்கள் தனது முதல் ஹைக்கூ நூலான புள்ளிப்பூக்கள் கவிதைத் தொகுப்பை 1984இல் வெளியிடும்போது ஹைக்கூ கவிதைகளைப் பற்றிய அத்துணை வெளிப்பாடுகள் எங்கும் கிடையாது. மூன்று வரிகள் மட்டுமே அதன் சாரம் என்று எடுத்துக்கொண்டு அவர் எதையும் எழுதி இதுதான் ஹைக்கூ என்று வெளியிட்டிருக்கலாம். அப்படிச் செய்யாமல் அதன் உண்மைத் தன்மைகள் சிதையாமல் கொடுத்ததால்தான், இன்றும் அந்தக் கவிஞர் நம்மிடையே மிளிர்கிறார். அவரது சில கவிதைகள் இன்றும் நம்மை வியப்பிலேயே வைத்திருக்கின்றன. மிகைக் கொள்ளாமல் இயல்பிலேயே வைத்திருக்கும் அவரது சில ஹைக்கூ கவிதைகள்:

தின்ற பழங்கள்
மிஞ்சிய கொட்டைகள்
ஓ! எத்தனை மரங்கள்!
@
சன்னலைத் திறந்தேன்
செய்தித்தாள்
சட்டசபை அசிங்கம்
@

நீண்ட அலகு நாரை
நீரைக் குத்திக் கிழித்தாலும்
நீங்காதிருக்கும் நிலா
@
கரும்பலகை
துடைக்கிறார் ஆசிரியர்
உதிரும் எழுத்துகள்
@
உடைந்த நாற்காலி
ஓரமாய்ப்போட்டேன்
உட்காருகிறது பட்டாம்பூச்சி

ஒவ்வொரு கவிதையுமே வாழ்வியலின் பல அடுக்குகளோடு இயைந்துபோகும் இயற்கைக் காட்சிகள்தான். இதுதான் ஹைக்கூ கவிதைகளின் தனித்தன்மையென்றே சொல்லலாம்.

ஹைக்கூ கவிதைகளைப் பற்றிப் பேசும்போது அதன் அடுத்தடுத்த பரிமாண வடிவங்களைப் பற்றியும் நாம் பேசாமல் இருக்கமுடியாது. எப்படி, தங்கா கவிதைகள் ஹொக்கூவை மட்டுமே கையில் கொண்டு ஹைக்கூவாக வெளிச்சம் காட்டு கிறதோ, அதைப் போன்றே கால வளர்ச்சியில் சொல்லவேண்டிய காட்சியகங்களுக்குள் நுழைந்து சென்ரியு, ஹைபுன், லிமரைக்கூ மற்றும் பழமொன்றியு எனப் பல வடிவங்களுக்குள் தன்னை நுழைத்துக்கொண்டு தனித்த அடையாளங்களோடு இன்றும் மிளிர்கிறது. இந்த வடிவங்களில் எதைப் பற்றி நாம் பேசினாலும் அங்கே நம் தமிழுக்குப் பெருமை சேர்த்த ஒரு மகாகவிஞன் அரியணைப் போட்டு அமர்ந் திருப்பான். அவர்தான் நம்மோடு வாழும் நம் மகாகவி ஈரோடு தமிழன்பன் ஐயா அவர்கள்.

சென்ரியு என்ற வடிவத்தைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் என்ற பெருமை மட்டுமில்லாமல் ஆங்கிலத்தின் 'லிமரைக்' வடிவத்தின் மாற்றான லிமரைக்கூ மற்றும் தன் புதிய முயற்சியாகப் பழமொன்றியு என்ற புது வடிவத்தையும் தமிழுக்குச் செம்மை செய்தவர் நம் கவிஞர் பெருமகனார்தான்.

சமூகத்தின் அவலங்களை, மாறிவரும் வாழ்வியல் மாற்றங்களை... ஏன், அரசியல் பிழைகளையும்கூட நகைச்சுவையாக ஹைக்கூவின் வடிவத்தில் நச்சென்று சொல்லக்கூடாதா என்று தோன்றிய எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்தவர் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜப்பானைச் சேர்ந்த எடோ காலத்து காறைஹாச்சிமோன் என்ற கவிஞரையே சேரும். அவரது வழக்குப் பெயரான காறைசென்ரியு என்பதே அவர் கொடுத்த இந்தக் கவிதையின் வடிவத்திற்கும் பெயராக வழங்கப்படுகிறது.


இன்று நிறைய ஹைக்கூ கவிஞர்கள் சென்ரியுவை எழுதிவிட்டு, அதனை ஹைக்கூ என்றே சொல்கிறார்கள். இதுவே பெரும் நகைச்சுவைதான். சென்ரியு எழுதுவது மிகவும் சுலபமான விசயமில்லை என்பதை அவர்கள் நிச்சயம் உணரவேண்டும். சென்ரியு எழுது வதற்குக் கவிதை புனையும் ஆற்றலோடு நகைச்சுவை உணர்வுகளும் மிகுந்திருக்க வேண்டும். சொல்லப்போனால் இவர்கள்தான் முதல் மீம்ஸ் கிரியேட்டர்கள் என்றே சொல்லலாம்.

1765இல் ஜப்பானில் வெளியான 'யானாகிதாறு' என்ற நூல்தான் முதன்முதல் வெளியான சென்ரியு கவிதைகளின் தொகுப்பாகும். எல்லோரும் ஹைக்கூவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது இந்த வடிவத்தைத் தமிழுக்களித்த ஈரோடு தமிழன்பன் ஐயா அவர்கள் 2001இல் 'ஒரு வண்டி சென்ரியு' என்ற சென்ரியுவிற்கான தனித் தொகுப்பை நமக்களிக்கிறார். அந்த ஒரு நூலை வாசித்தாலே போதும் அவரவர் வசம் ஒரு வண்டி சென்ரியு கொட்டிக்கிடக்கும் என்பது திண்ணம்.

ஒரு வண்டி சென்ரியுவில் சில கவிதைகள் :

மழை நாள் கவலை
காளான்களை எண்ணுவதா
கட்சிகளை எண்ணுவதா
@
சட்டம் ஒழுங்கைக்
காப்பாற்ற முடியவில்லை
சட்டசபையில்
@
ஆயிரம் பேரோடு
வேட்புமனுத் தாக்கல்
ஐம்பது வாக்குகள்
@
பக்தர்களிடம்
கடவுள் கேட்ட வரம்
அரசியலுக்கு இழுக்காதீர்கள்

ஒரு வண்டி சென்ரியு அளித்த அதே ஆண்டில்தான் ஒரு கூடை பழமொன்ரியு என்ற ஹைக்கூ கவிதையின் புதுவடிவத்தையும் நூலாக்கி நமக்களித்தார் மகாகவி தமிழன்பன் ஐயா






அவர்கள். பழமொழிகளை இதன் மூலம் மீண்டும் புதுப்பித்து நம் வாழ்வில் தக்கவைத்திருக்கிறார் என்று கூடச் சொல்லலாம். இந்த வடிவம் சென்ரியு மற்றும் பழமொழி கலந்த கலவையாகவும் இருக்கிறது. இதன் முதல் வரியைப் பழமொழிகள் நமக்களித்துவிடுகின்றன, அடுத்தடுத்த வரிகளைச் சிந்திப்பதே கவிஞர்களின் திறமையாக இருக்கும். இதிலிருந்து சில கவிதைகள் :

நீர் இடித்து நீர் விலகாது
நீருக்காக இடித்துக் கொண்டால்
மாநிலங்கள் விலகும்

@

கொல்லன் தெருவில் ஊசி
விற்கலாம்; புதிதாய் இருந்தால் கம்பன்
தெருவிலும் கவிதை விற்கலாம்.

@

ஊர் என்றால் சேரி இருக்கும்
சேரி சீறினால் சேரி சீறினால்
அந்த ஊர் எங்கு இருக்கும்?

ஈரோடு தமிழன்பன் ஐயா அவர்களின் 'சென்னிமலை கிளியோபாத்ராக்கள்' என்ற லிமரைக்கூ கவிதை நூல் வந்தபோதுதான் ஆங்கில வடிவமான லிமரைக் பற்றிய தேடலே இங்கு வந்தது என்று சொன்னால் மிகை கிடையாது. லிமரைக் என்பது தாமசுமூர் என்பவரால் வடிவமைக்கப்பட்டது என்று சொன்னாலும், எட்வர்ட் லியர் என்பவரால் எழுதப்பட்டு, 'புக் ஆஃப் நான்சென்ஸ்' என்ற பெயரில் 1846ல் வெளிவந்ததே முதல் நூல் என்று அறியப்படுகிறது. இந்தக் கவிதைகளின் வடிவம்; கிண்டல், பாலுணர்வு நகைச்சுவைகள், விரசங்களைப் பாடுபொருள்களாக்கி ஓசை நயத்துடன் பாடுவதாகவே அமைந்தது.

லிமரைக் ஐந்து வரிகளைக் கொண்ட இந்தக் கவிதை வடிவம், முதல் அடி, இரண்டாம் அடி மற்றும் ஐந்தாம் அடியில் ஒத்த ஓசை கொண்ட இயைபுத் தொடையுடனும் மூன்று மற்றும் நான்கில் வேறு இயைபுத் தொடையுடனும் அமைந்திருக்கும்.

தமிழில் இதனை முதன்முதலில் முயற்சித்தவர், இலங்கையைச் சேர்ந்த மஹாகவி என்பவர்தான் என்றும், அவரது 100 லிமரைக் கவிதைகளை 1966இல் எம்.ஏ.ரஹ்மான் என்பவர் தொகுத்து நூலாக்கியுள்ளார் என்ற தகவலும் நமக்குக் கிடைக்கிறது. மஹாகவியின் லிமரைக் கவிதைகளில் ஒன்றைப் பார்ப்போம்.

'கற்பகத்தின் வெண் கழுத்திற் தாலி
கட்டுவதற்கு முன் நின்றான் வாலி
அற்புதமாய் வாழ்ந்தார்கள்
ஆறு பிள்ளை பெற்றார்கள்
இப்பொழுதோ வேறு சோலி'

இதில் தாலி, வாலி, சோலி என்று ஒத்த இயைபுகளும் 3, 4இல் வாழ்ந்தார்கள், பெற்றார்கள் என்ற இயைபுகளும் ஒத்து வருவதைக் காணலாம். இதனை நான்கு, ஐந்து வரிகளில் பலர் முயற்சித்திருந்தாலும் லிமரைக்

கையும் ஹைக்கூவையும் இணைத்து டெட்பாக்கர் என்ற ஆங்கிலேயரே முதன்முதலில் முயற்சியை மேற்கொண்டார். அஃது அங்கு வெற்றியடைய வில்லை என்றே சொல்லலாம். ஆனால் தமிழன்பன் ஐயாவின் லிமரைக்கூ தொகுப்பிற்குப் பின் இங்குள்ள கவிஞர்கள் அந்த வடிவத்தில் நிறைய எழுதுவதைக் காணமுடிகிறது.

லிமரைக்கூ வடிவத்தில் முதலடியும் ஈற்றடியும் மட்டும் ஒத்த இயைபுடன் அமைந்திருக்கும். மற்றபடி அதன் குணாதிசயங்களான நக்கல் நையாண்டிகளை விட்டுவிடாது என்பதும் இதன் சிறப்பு.

சென்னிமலை கிளியோபாத்ராவிலிருந்து சில லிமரைக்கூ கவிதைகள்:

மணக்கும் மதுரை மல்லி
வாங்கிப் போனான் காதலிக்கு
மனைவி பேரைச் சொல்லி
@
பாடுவது அருட்பா பதிகம்
அன்றாடம் உணவில் ஆடு கோழி
மீன் நண்டு வகையே அதிகம்
@
கவிதை எல்லாம் விற்றான்
கைக்கு வந்த காசைக் கொண்டு
தேமா புளிமா கற்றான்
@
புகை பிடித்தால் இறப்பாய்
மது குடித்தால் இறப்பாய் இரண்டும்
விற்றால் வாழ்வில் சிறப்பாய்
@
பறவையோடு சேர்ந்து பற
சிறகுகள் தேவையில்லை
மனிதன் என்பதை நீ மற

ஹைபுன் கவிதை என்பதும் ஜப்பானியக் கவிதை வடிவம்தான். இதனை முதன்முதலில் முயற்சித்தவர் பாஷோ என்பதும் இதன் சிறப்பாகும். செறிவான உரைநடை ஒன்றை அமைத்து, முரண்களையும் சேர்த்து ஒரே நிகழ்வாக்கி அதனை ஹைக்கூ கவிதையோடு நிறைவு செய்வதே ஹைபுன் வடிவமாகும். தமிழில், 'அறுவடை நாளில் மழை', 'மாய வரம்' மற்றும் 'தலைக்கு மேல் நிழல்' என்ற ஹைபுன் கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன என்றாலும் இதனை முயற்சிப்பவர்கள் இங்கு மிகக் குறைவாகவே இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

உதாரணத்திற்கு, கவியருவி ம.ரமேஷ் அவர்களின் ஒரு ஹைபுன் வடிவத்தைக் காண்போம்.

உரை: வாங்கிக்கொடுத்த பொம்மையை மாலையில் பார்க்கிறேன். கை, கால், தலை, உடல் என்று வேறுவேறு இடத்தில் இரைந்து கிடக்கின்றன... அதட்டினால் குழந்தை கை தட்டிச் சிரிக்கிறது. என்ன இப்படிச் செய்கிறாளே என்று படுக்கையில் சாய்ந்தேன். என்னுடைய கை, கால், தலை, உடல் எல்லாம் தனித்தனியாக இருப்பதைக் கண்டு அலறியடித்துக்கொண்டு எழுந்தேன். அட... கனவுதானா? அப்படிக் கனவு என்று விட்டுவிட முடியாது. சிதறிக்கிடந்த கை, கால், தலை, உடலை எல்லாம் திரும்ப இணைத்து விட்டு நான் விளக்கை அணைத்துவிட்டு உறங்கினேன். குழந்தை சிரித்துக்கொண்டே யிருக்கிறது உறங்காமல்...

கவிதை:

சிரிப்புச் சப்தம்
எட்டிப் பார்த்தேன்
குழந்தையுடன் பொம்மை

இதே உரைக்கு வேறு சில கவிதைகளும் எழுதியிருக்கிறார்.

கடித்த பாம்பை
அடிக்க முடியவில்லை
கனவு

கை கால் தலை
சிதைந்தும் சிரிக்கும்
பொம்மையுடன் குழந்தை

கை கால் இணைகிறது
உயிர் பெறுகிறது
குழந்தையின் மனசு

தமிழில் எண்ணற்ற ஹைக்கூ நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கும் அதே வேளையில் அதனைத் தமிழில் நிலைநிறுத்த அதன் ஆர்வலர்கள் பலரும் கடுமையான உழைப்பையும் இங்குக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அத்தனைப் பேரையும் வாழ்த்தி நிறைவுசெய்கிறது இந்தப் 'பாஷோவின் பழைய குளம்'.

நிறைவாக, கவிஞர் அறிவுமதியின் ஒரு சிறந்த ஹைக்கூ...

பறையர் சுடுகாடு
படையாட்சி சுடுகாடு
தலைமுழுக ஒரே ஆறு. ■

• சக்தி ஜோதி
ஓவியங்கள் : கொ.வடிவேல்

# சங்கப்பாடல்களில் ஆண் பெண் நோக்கு – ஓர் ஒப்பீடு

ஆண் பெண் இருவரும் அவரவர் உடலியல் கூறு சார்ந்தும், அதனால் அமையும் வாழ்வியல் முறை சார்ந்தும், சூழல் சார்ந்தும் வேறுபட்டவர்கள். இருவேறு விதமான தேவைகள், அதனால் விளையும் சிந்தனைகள் என ஒருவரிடமிருந்து மற்றவர் மாறுபட்டவர் களாகவே இருக்கிறார்கள். வாழுகிற சூழலில் காணுகிற பொருட்களின் மீதான இருவரது பார்வைகளும், செயல்பாட்டு முறைகளும் வெவ்வேறானவை. இதன் காரணமாக ஒன்றின் மீதான கருத்துகளும் மாறுபட்டவையாக இருக்கின்றன. ஒரு செயலைச் செயல்படுத்தும் விதத்திலும் ஒரு உணர்வை வெளிப்படுத்தும் விதத்திலும் தங்களுக்குள் வேறுபட்டிருப்பதால் இருவரது சொல்முறையும் ஒன்றாக இருப் பதில்லை. அவரவர்க்கான விருப்பத்தை நிறைவுசெய்யும் விதமாக அவரவர் பார்வையில் தான் அநேகமான சொல்முறை அமைந்திருக்கும். ஆணுக்கான நோக்கம் என்பது பெரும்பாலும் புறவெளி சார்ந்து பரந்துபட்டதாகவும், பெண்ணுக்கான நோக்கம் என்பது அகவெளியில் சுழன்று குவிவதாகவும் இருக்கிறது.

இலக்கண வகைப்பாட்டிலும் “நோக்கு'' என்னும் செய்யுளுறுப்பு மிக முக்கியமானது.

“மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே”
[தொல். பொருள். 413]

மாத்திரை, எழுத்தியல் வகை, அசை வகை, யாத்தசீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடைவகை ஆகிய ஒன்பது உறுப்புகளும் ஒரு நோக்குடையதாக அமையவேண்டும் என்பதே செய்யுளின் அடிப்படை. இவற்றினடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகிற சங்கப்பாடல்களில் ஒரு புலவன் கூற விரும்பியதையும், அது எவ்விதம் கூறப்பட்டுள்ளது என்பதையும் உணர முடியும். “நோக்கு'' எனக் குறிப்பிடுகிற ஒன்பது செய்யுளுறுப்பின் செயல்பாடுகளும் மையப் பொருளின் உணர்வை மிகைப்படுத்தவும் வலியுறுத்திச் சொல்லவும் பயன்படுகின்றன.



சங்ககாலம் என்பது இனக்குழுக்கள் நிலவுடைமைச் சமூகமாக நிலைபெற்றுவிட்ட காலம். நிலத்தின் அடிப்படையில் தொழில் மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளை வகைப்படுத்திக்கொண்டு, அதனடிப்படையிலான அதிகாரத்தைக் கட்டமைத்துக்கொண்ட காலம். நிலத்தின் மீதான ஆணுடைய பற்றும், அதிகாரமும் பெண்ணின் மீதான பற்றும்,

அதிகாரமுமாக நிலைபெற்றுவிட்ட காலம் எனவும் சொல்லலாம். இதற்கு முந்தைய மனிதகுல வளர்ச்சியின் தொடக்கக்காலத்தில் பசியினாலும் காமத்தினாலுமே மனிதன் தூண்டப்பட்டு இயங்கிக்கொண்டிருந்தான். நிலவுடைமைச் சமூகமே பெண்ணுக்குக் கற்பு என்கிற வரையறையைக் கட்டாயப்படுத்தியது. இக்காலக் கட்டத்தில் உருவாகிய இலக்கியங்களில் பெண்ணுடல் பற்றிய திட்டமிடல் இருந்தது. ஒரு பெண்ணுடைய உடலைக் கையகப் படுத்துவதற்காக அவளுடைய மனதைப் பயிற்றுவிக்கும் நோக்கம் ஆணுடைய விருப்பமாக இலக்கியங்களில் வெளிப்பட்டது.

சங்ககாலம் என்பது இயற்கையோடு இயைந்த வாழ்வு என்பதைச் சங்கப் பாடல்களின் வழியாக அறிய இயலுகிறது. முதற்பொருளான நிலமும் காலமும் சங்ககால வாழ்வியலைக் கட்டமைப் பதில் பெரும்பங்கு வகித்திருக்கின்றன. அந்தந்த நிலத்தில் காலத்தால் தோன்றிய கருப்பொருள்களான தெய்வம், மனிதர், பறவை, விலங்கு, ஊர், நீர், மரம், பூ, உணவு, இசை, தொழில் போன்றவை அன்பின் ஐந்திணை எனப்படுகிற அந்தந்த நிலத்தின் அக ஒழுக்கங்களைக் கட்டமைத்திருக்கின்றன.

2381 சங்கப்பாடல்களை 473 புலவர்கள் பாடியுள்ளனர். சங்கப்பாடல்களில் அகப் பாடல்களே காலத்தால் முதன்மையாகத் தோன்றியவையாகவும், எண்ணிக்கையில் அதிகமானவையாகவும் இருக்கின்றன. எனவே சங்க அகப்பாடல்களைப் பாடியவர்களும் புறப்பாடல்களைப் பாடியவர்களை விடவும் அதிகமானவர்கள். மொத்தப் புலவர்களில் பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை குறித்து 23 பேர் முதல் 45 பேர் வரையிலான பலவேறுபட்ட கருத்துகள் உள்ளன. பாடலின் பொருள், உவமைப்படுத்துகிற விதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தாயம்மாள் அறவாணனின் "மகடூ முன்னிலை" என்கிற நூலில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையான 45 என்பதை இப்போதைக்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். அகப்பாடல்களில் களவுப் பாடல்கள் மட்டும் பாடியவர்களும், கற்புப் பாடல்கள் மட்டும் பாடியவர்களும், இரண்டும் பாடியவர்களும் இருக்கிறார்கள். போலவே புறப்பாடல் மட்டும் பாடியவர்களும், அகம் மட்டுமே பாடியவர்களும், இரண்டும் பாடியவர்களும் இருக்கிறார்கள். இந்த வகைப்பாட்டில் ஆண்பாற் புலவர் அல்லது பெண்பாற் புலவர் என்கிற வேறுபாடு இல்லை.

சங்க அகப்பாடல்கள் நாடகப் போக் குடையவை. தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் போன்றவர்கள்தான் அதிகமாகக் காட்டப்படுகின்றனர். தலைவன், தலைவியை மையப்படுத்தியே மற்ற எல்லோரும் இயங்குகிறார்கள். இவர்களில் தோழியின் பங்களிப்பு மிக முக்கியமானது. காதலில் அமிழ்கிற ஒரு பெண்ணுக்கு நேருகிற உடல்மாற்றம், மனமாற்றம் போன்றவற்றை அவளுடன் எப்போதுமிருக்கும் தோழியே நன்கறிவாள். தலைவியின் செயல்பாடுகளுக்குத் துணை நிற்பவளாகவும், அவளை ஆற்றுப்படுத்து கிறவளாகவும் தலைவியின் சுக, துக்கங்களில் நேரடியாகப் பங்கெடுத்துக்கொள்கிறாள்.

செவிலித்தாய்க்குத் தோழி சொல்வதாக அமைந்த போந்தைப் பசலையார் என்னும் பெண்பாற் புலவரின், "அன்னை அறியினும் அறிக; அலர்வாய் அம்மென் சேரி கேட்பினும் கேட்க;" (அகம்:110) என்னும் பாடலில், தோழியர் கூட்டத்தோடு கடலில் ஆடுவது பற்றியும் கடற்கரைச் சோலையில் சிறுவீடு செய்து, சிறு சோறு ஆக்கி விளையாடுவது பற்றியும் குறிப்பிடுகிறார். புதியவர்களுடன் பேசுவதற்கு அஞ்சி விலகுகிற பெண்களுடைய இயல்பைக் குறிப்பிடும் புலவர், அந்தப் புதியவனைக் கண்டதே தலைவியின் பசலைக்குக் காரணமாக இருக்கலாம், இது தவிர வேறு ஒன்றும் நிகழவில்லை எனச் சொல்கிறார். மேலும் சேரியில் உள்ளவர்கள் அலர் பேசுவது பற்றியும் குறிப்பு வருகிறது. பெரும்பாலான பெண்பாற் புலவர்கள் "அலர்" பற்றிக் அச்சப்படுகிற பெண்களைக் குறிப்பிடுகின்றனர்.

சங்க இலக்கியத்தில் தோழி, செவிலித்தாய் என்கிற இரு தலைமுறையைச் சேர்ந்த பெண்கள், தலைவி, நற்றாய் என்பவர்களுடன் எப்போதும் உடன் வருகிறார்கள். நற்றாய், தலைவியாக இருந்த காலத்தில் செவிலி, தோழியாக இருந்திருப்பாள். தலைவி, பெண்குழந்தை ஒன்றைப் பெற்று வளர்க்கும்பொழுது, அவளுக்காகவே செவிலியும் பெண்குழந்தை ஒன்றைப் பெற்றுத் தோழியாக வளர்த்தாளா, செவிலித்தாய் என்பவளுக்குக் கணவனாக இருந்தவன் யார், அவர்களுக்கு எனத் தனியான குடும்பம், வாழ்வு எதுவும் கிடையாதா, நற்றாய், தலைவி என்பவர்களின் நலன் மட்டுமே

அவர்களின் வாழ்வாகிப் போவதன் பின்னணி என்ன, மையச்சமூகத்தில் இயங்குபவர்களாக நற்றாயும் தலைவியும் இருந்தார்களா, செவிலியும் தோழியும் விளிம்பு நிலையில் இருந்தார்களா எனப் பல்வேறு கேள்விகளை இந்த இரண்டு தலைமுறை சங்கப்பெண்கள் திறந்துவைக்கிறார்கள். அல்லது பெண்ணை ஆணுக்குரியவளாக ஆக்குவதற்காக, தோழி, செவிலி என்கிற இரண்டு பெண் பாத்திரங்கள் உருவாக்கப்பட்டார்களா அல்லது இந்த இரண்டு பெண்களுமே தலைவிக்கும் நற்றாய்க்கும் மனசாட்சிகளாக உள்ளிருப்பவர்களா என்கிற உளவியல் ஆய்வினையும் உண்டாக்குகிறார்கள். இவ்வகையில் சங்கப்பாடல்களில் காட்டப்படுகிற மற்ற கதாபாத்திரங்களையும் மறுவாசிப்பு செய்யவேண்டியது அவசியமாகிறது.

ஆண்பாற் புலவர்களின் பாடல்களில், களவு அல்லது கற்பு என இரண்டு நிலைகளிலும் பெண்ணிடம் ஆணுக்கான காத்திருப்பை வலியுறுத்திப் பாடியுள்ளனர். இந்தக் காத்திருப்புக் காலத்தின் உற்றதுணையாக தோழியே இருக்கிறாள். திருமணத்திற்கும், குடும்பவாழ்வின் கற்புநிலைக்கும் தலைவியைத் தோழி, செவிலி ஆகியோர் தயார்படுத்துகிறார்கள். களவு வாழ்வில் ஏற்படுகிற பிரிவில், தலைவியை ஆற்றுபடுத்துகிறவளாக இருக்கிற தோழி, கற்புவாழ்வில் ஏற்படுகிற பரத்தையர் பிரிவில் தலைவனைக் கண்டித்து வாயில் மறுக்கிறாள். தலைவனை ஏற்கும்படித் தலைவியை வழிப் படுத்தவும் செய்கிறாள்.

“நகுகம் வாராய் பாண!” (நற்:250) எனப் பாணனை அழைத்துத் தலைவன் சொல்வதாக ஓலைக்கடையத்தார் நல்வெள்ளியார் என்கிற பெண்பாற்புலவர் நற்றிணையில் ஒரு பாடல் பாடியுள்ளார். இந்தப் பாடலில் பரத்தையர் பிரிவில் சென்றிருந்த தலைவன், தலைவி வசிக்கும் தெருவுக்குள் தற்செயலாக நுழைகிறான். அப்போது தெருவில் விளையாடிக்கொண்டிருந்த மகனைத் தூக்கிக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்து தலைவியுடன் முயங்க முனைகிறான். தலைவியோ “யாரெனக்” கேட்டுத் தலைவனைத் திருப்பி அனுப்புகிறாள். அவ்விதமாக அவனை ஏற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பிய நிலையைத் தலைவனால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. சங்கத்தலைவிகள் தங்களுக்கெனக் குரலற்றுப் போனவர்களாகவே பெரும்பாலும் இருக்கிறார்கள். பரத்தையர் வீடு சென்று திரும்பும் தலைவனிடம் சிறிதுநேரம் ஊடல் கொண்டுவிட்டு மீண்டும் இணைந்து கொள்கிறார்கள். ஆனால் பெண்பாற்புலவரான இவரின் பாடலில் தலைவி தனக்காகப் பேசுபவளாக இருக்கிறாள்.

ஊண்பித்தையார் எனப்படுகிற பெண்பாற் புலவரின்,

**“உள்ளார் கொல்லோ தோழி உள்ளியும்**
**வாய்ப்புணர் வின்மையின் வாரார் கொல்லோ**
**மரற்புகா வருந்திய மாவெருத் திரலை**
**உரற்கா லியானை யொடித்துண் டெஞ்சிய**
**யாஅ வரிநிழல் துஞ்சும்**
**மாயிருஞ் சோலை மலையிறந் தோரே”**

(குறுந்:232)

என்கிற பாடலின் பொருள், “மிகப் பெரிய சோலைகளைக் கடந்து பொருள் தேடிச் சென்றிருக்கும் தலைவன் நம்மை நினைக்காமல் இருப்பானா.. நம்மை நினைத்திருப்பான், என்றபோதும் தாம் மேற்கொண்ட வினை முற்றுப்பெறுவதற்கு வாய்ப்பு இல்லாததால் நம்மைத் தேடி அவன் வரவில்லை. உரல் போன்ற கால்களையுடைய யானை “யா”மரத்தின் கிளைகளை ஒடித்து உண்டுவிட்டுச் சென்றிருக்கிறது. அங்கே மீதமிருக்கும் அடர்வு குறைந்த கிளைகளின் வழியாக வெயில் புள்ளிகளாக விழுகிற அந்த மரத்தின் நிழலில் “மரல்” என்கிற கொடியைத் தேவையான அளவிற்கு உண்ட பிடரையுடைய ஆண்மான் படுத்திருக்கிறது. அந்தக் காட்சியை மலைகளைக் கடந்து செல்லும் தலைவன் பார்க்கிறான். இந்தக் காட்சியைப் பார்க்கும் தலைவன் தலைவியை நினைக்காமல் எப்படி இருக்க முடியும்” எனத் தோழி, தலைவியிடம் சொல்லி அவளைத் தேற்றுகிறாள். இந்தப் பாடலை ஆண்பாற் புலவர்களின் சங்கப் பாடலுடன் ஒப்பீடு செய்வது அவசியமாகிறது.

யானை ஒன்று மரத்தின் கிளையை ஒடித்து உணவு உண்டு செல்லுதல் போன்ற காட்சி, ஆலந்தூர் கிழார் எழுதிய குறுந்தொகைப் பாடலில் (112) வருகிறது.

**“கௌவை யஞ்சிற் காமம் எய்க்கும்**
**எள்ளற விடினே உள்ளது நாணே**
**பெருங்களிறு வாங்க முரிந்துநிலம் படாஅ**
**நாருடை ஒசியல் அற்றே**
**கண்டிசின் தோழியவர் உண்டஎன் நலனே”**



என்கிற வரிகளை இங்கே இணைத்துப் பார்க்கத் தோன்றுகிறது. மரத்தின் கிளையைப் பெரிய யானை வளைத்து முறித்து உண்கிறது. ஒடிந்த கிளையானது முழுமையும் முறிந்து நிலத்தில் விழாமல், நார் மிகுந்து வழியும் நீருடன், மரத்திலிருந்து துண்டிக்கப்படாமல் இருக்கிறது. முற்றிலும் ஒடிந்து வாடி உலராமல், நீர்ப்பற்றுள்ள நாரின் தொடர்பினால் மீண்டும் தழைக்கும் தன்மையுடன் இருக்கிறது. இதைப் போலத் தலைவியின் நலன் தலைவனால் முற்றிலும் உண்ணப்படாமலும் பழைய நிலைக்குத் திரும்ப இயலாமலும் தழைத்துத் துளிர்க்கும் காதலுடன் இருக்கிறாள் என்பதை இந்தப் பாடல் குறிப்புணர்த்துகிறது. ஊராரின் தூற்றுதலுக்கு அஞ்சினால் தலைவன் மேலுள்ள காமத்தை விடவேண்டும். காமத்தை விடவேண்டும் என்றால் தலைவியிடம் எஞ்சியிருக்கும் நாணத்தை விடவேண்டும். நாணத்தையும் விட இயலாமல் காமத்தையும் விட இயலாமல் இருக்கும் தலைவியின் நிலையைச் சொல்கிறது இந்தக் காட்சி.

இந்த இரண்டு பாடல்களிலும் யானையும், அது ஒடித்துப் போடுகிற "யா மரமும்'', மரப்பட்டையில் கசிந்து வழியும் நீரும் வருகிறது. முதல் பாடலில் தலைவி, தலைவன் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையும், இரண்டாம் பாடலில் தலைவியின் உடல் சார்ந்த ஆணின் முழுமையடையாத இச்சையும் வெளிப்படுகிறது. அந்த இச்சைகூட தலைவியின் கூற்றாக வெளிப்படுகிறது. ஒரே ஒரு காட்சி, ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுவேறுவிதமான வெளிப்பாட்டு முறையை நிகழ்த்துகிறது.

சங்க இலக்கியங்களில் சொல்லப்படுகிற உவமைகள் அலங்காரத்திற்கானவை அல்ல. மைய உணர்வை மிகைப்படுத்தவும் வலுப்படுத்தவுமே உருவாகியுள்ளன. உதாரணமாக,

**'ஒன்றே னல்லன் ஒன்றுவென் குன்றத்து**
**பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை**
**குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்,**
**நின்று கொய் மலரும் நாடனொடு**
**ஒன்றேன் தோழி ஒன்றினானே'** [குறுந். 208]

என்கிற கபிலரின் குறுந்தொகைப் பாடலில், யானையால் மிதிபட்ட வேங்கை மரம், தானே தாழ்ந்து குறமகளிர் எட்டிப் பறித்துவிடும்படியாக இருப்பதுபோல "நொதுமலர் வரைவு'' எனப்படுகிற அயலவர் வருகையினால் தலைவனுக்காக ஆற்றியிருக்க இயலாத நிலையில், தான் இருப்பதாகத் தலைவி குறிப்பிடுகிறாள். தலைவியினுடைய துன்பத்தின் மிகுதியைக் காட்டவே நாட்டின் வருணனை அமைந்துள்ளது. இவ்வாறான வருணனையில் ஆண்பாற் புலவர்கள் காட்டுகிற காட்சிகளுக்கும் பெண்பாற் புலவர்களின் காட்சிகளுக்கும் வேறுபாடு உள்ளது.

"தேம்படு சிலம்பில்'' (நற்:243) எனத் தொடங்கும் காமக்கணி பசலையார் என்கிற பெண்பாற்புலவரின் பாடலில், பொருள்வயின் பிரிந்து சென்ற தலைவனின் பாதையில் எதிர்படும் கருங்குயில், "நிலையில்லாத வாழ்வை முன்னிட்டுப் பொருளாசையினால் உங்கள் துணையைப் பிரியாதிருங்கள், அப்படித் துணையைப் பிரியாமல் இணைந்திருப்பவரே அறிவுடையவர்'' எனக் கூறுவதாகப் பாடியுள்ளார். தலைவனுடைய வழித்தடம் பற்றித் தலைவி அறிந்திருக்கும் தகவல்களை வருணனையாகக் குறிப்பிடுகிறார். தலைவனுடன் எப்பொழுதும் உடனிருக்கும் விருப்பத்தில் தலைவியின் மனம் இயங்குகிறது. பெண்பாற்புலவர்களின் வருணனைகள், காட்சிப்படுத்துதல்கள் என அனைத்துமே அனுபவப் பகிர்வானவை. பெண்களின் வாழ்க்கை சார்ந்தும், அச்சூழலில் அவர்கள் உள்வாங்கிக் கொண்ட பொருள்கள் மற்றும் அதன் மீதான மதிப்பீடுகள் சார்ந்தும் வெளிப்படுபவை. மேலும் பெண்பாற்புலவர்களின் குரல் தன்னிரக்கம் நிறைந்தது. சிலசமயம் பெண்ணுடல் சார்ந்தும், மனம் சார்ந்தும் துணிவுடன் வெளிப்படுபவை.

ஔவையாரின் "முட்டுவேன் கொல்" (குறுந்:28), "உள்ளினேன் அல்லெனோ" (குறுந்:99), அள்ளூர் நன்முல்லையாரின் "காலையும் பகலும்" (குறுந்:32), "நல் நலன் தொலைய'' (குறுந்:168), ஆதிமந்தியாரின் "மள்ளர் குழீஇய" (குறுந்:31), ஊண்பித்தையாரின் "உள்ளார் கொல்லோ? தோழி!'' (குறுந்:232), கச்சிப்பேட்டு நன்னாகையாரின் "கேட்டிசின் தோழி" (குறுந்:30) போன்ற பலருடைய பாடல்கள் தன்னிரக்கம் நிறைந்தும், கையறு நிலையிலும், பெண்ணுடலை முன்னிறுத்தியும் பாடப்பட்டவை.

கலித்தொகை, ஆண்களுக்கான வேதப்புத்தகம் போல இன்றளவும் இருக்கிறது. பெருங்கடுங்கோ பாலைக்கலி, கபிலன் குறிஞ்சிக்கலி, மருதன் இளநாகன் மருதக்கலி, அருஞ்சோழன் நல்லுருத்திரன் முல்லைக்கலி, நல்லந்துவன் நெய்தற்கலி எனக் கலித்தொகையின் நூற்றைம்பது

பாடல்களும் முழுமையாகக் கிடைத்துள்ளன. இந்தப் பாடல்களில், சூழலின் அனைத்தும் ஒன்றிணைந்து பெண் மீதான ஒற்றைச் செயலைத் திரும்பத்திரும்ப நிகழ்த்துவதைக் காணமுடிகிறது. வெவ்வேறு செய்கை அமைத்து அல்லது வெவ்வேறு உதாரணங்கள் வழியாகவும் ஒரே உணர்வினை வலியுறுத்த முனைகிற பாடல்கள் அதிகம் இருக்கின்றன. தலைவி ஆயத்தாருடன் விளையாடும்பொழுது தலைவன் வந்தான், அவனுடன் ஏற்பட்ட களவொழுக்கம்பற்றிப் பெற்றோரிடம் கூறித் திருமணத்திற்கு வழிப் படுத்துமாறு தோழியிடம் தலைவி கேட்கிறாள். இந்தப் பாடலில் களிறு, கலைமான், ஆண்புறா என மூன்றின் செயல்பாடுகளைத் 'தீம்பால் கறந்த' (கலி:111) என்னும் கலிப்பாடலில் காணலாம். இவ்விதமாகப் பல்வேறு விதங்களின் மூலமாக ஒற்றைச் செயல் பல்வேறு பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கற்புடை மகளிர் அல்லது பரத்தையர் என யாராகிலும் பெண்ணுடல் சார்ந்த ஆண்களின் விருப்பங்களை வெளிப்படுத்துவதாகக் கலித்தொகைப்பாடல்கள் உள்ளன.

வெள்ளிவீதியாரின் "கன்றும் உண்ணாது" (குறுந்:27) என்கிற பாடலையும் கபிலரின் "மால் வரை" (குறுந்:95) என்கிற பாடலையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பெண்ணின் மனதையும், ஆணின் மனதையும் தெளிவாக அறியமுடிகிறது. வெள்ளிவீதியாரின் பாடலில், தலைவனுக்காகத் தன்னுடைய உடலைக் கட்டமைத்திருக்க, அது அவனால் பயன்படுத்தப்படாமையால் பசலை படர்ந்து தலைவியின் அழகு வீணாகப்போகிறது. கபிலரின் பாடலில் தலைவியின் மீது காமுற்றதால், அவளது நீர்மையில் தலைவனுடைய தீ போன்ற வலிமை அழிந்தது. சங்கப் பெண்பாற் புலவர்கள் அனைவருமே ஆண்பாற் புலவர்களின் குரலுக்கு எதிராகவோ அல்லது முழுமையும் தங்களை வெளிப்படுத்தும் விதமாகவோ எழுதவில்லை. அந்தக் கால கட்டத்தின் மனநிலையின் காரணமாக ஆண்களின் விருப்பத்திற்குள்ளும் பெரும்பாலான பாடல்கள் எழுதப்பட்டன. மேலும் சங்கப் பாடல்கள் தொகுக்கப்பட்ட விதத்திலும் ஆணுக்குச் சார்பான பாடல்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கும்.

**"தன்உறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்**
**எண்ணும்காலை, கிழத்திக்கு இல்லை;**
**பிற நீர் மாக்களின் அறிய, ஆயிடைப்**
**பெய்ந் நீர் போலும் உணர்விற்று என்ப"**


(தொல்.பொருள்:1062). கற்புவாழ்வில் வாழ்கிற தலைவியும் தன்னுடைய பாலியல் விருப்பத்தைப் "புதிய மண்பானையில் ஊற்றிய நீர் கசிந்து வெளிப்படுவது போல" மென்மையாக வெளிப் படுத்தவேண்டும் என்கிறது இந்த நூற்பா. இதன்படியே சங்கப்பாடல்களில் பெண்ணின் மனமானது வெளிப்படுத்தப்பட்டது. சங்கப் பாடல்களில் தலைவனிடம் தன்னுடைய காதலை தலைவி எங்கேயும் நேரடியாகச் சொல்வதில்லை. காமத்தை வெளிப்படுத்தத் தலைவிக்கு அனுமதி இல்லை. பாலியல் விருப்பம் என்பது ஆணுக்கானது எனவும் ஆணுடைய பாடல்களில் பெண்ணுடல் ஆணின் வருணனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் இருந்தது.

அகப்பாடல்களில் தலைவியாக, தலைவனுக்கு ஏங்குபவளாக, பலவீனமானவளாக இருப்பவள், புறப்பாடலில் தாயாக, வீரம் நிறைந்தவளாக, வலிமையானவளாகக் காட்சிப்படுத்தப்படுகிறாள். ஒக்கூர் மாசாத்தியாரின் "கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே" (புறம்:279), காக்கைப் பாடினியாரின் "நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்" (புறம்: 278), காவற்பெண்டுவின் "சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்" (புறம்:86) போன்ற பாடல்களின் வெளிப்பாட்டுமுறையும் கூட நிலவுடைமைச் சமூகத்தில் ஆணுக்கு ஆதரவான குரல்களாக வெளிப்படுபவையே.

நிலவுடைமைச் சமூகத்தில், பெண்ணை அடைவதற்காகவும், அவளைத் தனக்குரியவளாக வைத்துக்கொள்வதற்காகவும், அவன் செய்கிற எந்தச் செயலையும் ஏற்றுக்கொள்வதற்காகவும் பெண்ணுடைய மனதைத் தயாரிப்பது ஆணுடைய தேவையாக இருந்தது. ஆணுக்கென மட்டுமே பெண்ணுடல் படைக்கப்பட்டிருப்பதாக அவளை நம்பச்செய்யும் விதமாகவும் ஆணுடைய மனமானது ஒற்றை நோக்குடன் இயங்கியது. இதனடிப்படையில், இதற்குத் துணைசெய்யும் விதமாகச் சங்கப்பாடல்களில் ஆண்பாற் புலவர்களின் வெளிப்பாட்டு முறை அமைந்திருந்தது. உடலியற்கூறு மற்றும் வாழ்வியல் சூழல் காரணமாகப் பெண்ணும் இதனை ஏற்றுக்கொண்டிருக்கிறாள். என்ற போதிலும் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் ஆணை எதிர்ப்பதும், அவனது செயலைக் கண்டிப்பதும், தன்னுடலைக் கொண்டாடும் மனமும் வெளிப்பட்டிருக்கின்றன. ■



ஓவியங்கள் : கொ.வடிவேல்



இரண்டாவது
படிக்கும்
மகன்களை
இரவு பதினோரு வரை
வீட்டுப்பாடம்
செய்ய வைத்து
நாளைய தேர்வுக்குத்
தயார் செய்து
கொண்டிருக்கிறார்
மனைவி...

இனிதே முடிவடைகிறது
குழந்தைகள் தினம்.

**- பிரபுசங்கர். க**

ஒரே வீட்டில்
ஊடலென நீயும் நானும்
மௌனித்த காலத்தைக்
கலைத்துக்
கூடலின்பொழுது
சொல்வாய்
நதியோரம் கால் நனைக்கப்
போவோமா என்று
மௌனித்த காலத்திலும்
நாம் நதி நடுவேதான்
இருந்தோம் என்பதனை
நீ அறிய வாய்ப்பில்லை
வீடு முழுதும் சுவரென
நிற்பது
நதியின் மணலென..

**- வீ.கதிரவன்**

குழம்பித் தெளிவதின்
பேரமைதி அடர் நிறங்களின் பூச்சுக்களைச்
சுமந்தலைகிறது
அகாலச் சொப்பனங்களைச்
செரித்து விழுங்கும்
அரவத்தின் நடுவயிற்றில் இரையாகி
நிறைநாளில்
பிரசவிக்க முயலும் மூசிகத்தை ஒத்திருப்பதில்
குறையேதுமில்லை
தலைவிரித்தாடும் பிசாசுகள்
திருக்கையின் வீச்சில் கட்டுண்டு
கிடத்தலை யூகித்துச் சல்லாபங்களைக்
குறுக்கிக் கொக்கரித்து நிற்கிறது நீள் வானம்.

**- ரா.த.ஜீவித்தா**

ஓவியங்கள் : கொ.வடிவேல்

## அந்திம இன்பம்!

நாளொரு துன்பமும்
பொழுதொரு வலியுமாக
உழன்று வந்த
உடலும் மனமும்
வறுமையின் கூர்மையில்
பரிபூரணமாக வளர்ந்து
விதியின் சுழலில்
அன்று சீற்றமடைந்தது.
அந்திம தசைகளில்
அஸ்தமனக் கிரணங்கள் விழுவது
உடலதிர்ச்சிகளாகி இன்பம் தர
பூர்வஜன்மப் பிழை மறந்து
மறுபிறவிக்கு வாய்ப்பிருப்பதுபோல்
ஜீவன் துறக்கத் துடிக்கிறது
ஒரு துளி உயிர்!

**– மனோ ரெட்**

இறந்துபோன ஏழையின்
கண்தானம் ஏற்று
விழித்துக்கொண்டன விழிகள்
கண்மூடிப் போகிறது
தீண்டாமை.

**– க. மகுடபதி**

## புயலும்...புயல் சார்ந்த இடமும்

விடிந்ததும்
கூரையில் காய்ந்த
தென்னங்குலைகள்..

ஒடிந்த வேப்பங்கிளை
தப்பிய இலைகள் வீட்டுக் கதவு தொட்டபடி
வீழ்ந்து கிடந்தது..

கூடிழந்த
பறவைகளின் சப்தம்
நிற்கவே இல்லை..

மின்சாரக் கம்பிகளில் காயத்தொடங்கிவிட்டது
புடவையும்
சட்டையும்..!

வெள்ளை வேஷ்டிகளின்
ஆலோசனைக்கூட்டம் முடிந்தபிறகும்
தொடர்பு எல்லைக்கு வெளியில் இருக்கிறோம்..

வழியற்றுப் போனதாகச் சொல்கிறார்கள்
மேலே உயரத்தில் சப்தம் ஒன்று கேட்கிறது...

பசி மறந்த குழந்தைகள்
வானத்தைப் பார்க்கத்தொடங்கிவிட்டார்கள்..

**– க.ராஜகுமாரன்** ■



• கல்வெட்டு சொர்ணபாரதி

# சிறுவர் இலக்கியம் – ஒரு பார்வை



நிலாவில் பாட்டி வடை சுடுகின்றதைக் காட்டிக் குழந்தைக்குச் சோறு ஊட்டுவதிலிருந்து குழந்தை இலக்கியம் தொடங்கியிருக்கலாம். குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம் எனச் சொல்லப்பட்டாலும் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக் கானது குழந்தை இலக்கியம் எனவும், ஒன்பது முதல் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர் களுக்கானது சிறுவர் இலக்கியம் எனவும் வகைப்படுத்தலாம்.

குழந்தை இலக்கியம் என்பது எளிமையாகக் குழந்தைகளுக்குப் புரியுமாறு சொல்லப்படுகின்ற பாடல், கதை, செய்திகள் முதலியன. அவற்றைக் கேட்டு அவர்கள் உணர்ந்துகொள்ளுமாறு அமையும். சிறுவர் இலக்கியம் என்பது அவர்களுக்காக அவர்கள் படித்துப் புரிந்து கொள்ளுகின்ற வகையிலே அமைவதாகும்.

முதல் குழந்தை, சிறுவர் இலக்கியத்தை உருவாக்கியவர்கள் நம் குடும்பத்தில் உள்ள பாட்டிமார்களாகத்தான் இருக்கமுடியும். குழந்தைகளுக்கு அவர்கள் சொன்ன ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தாராம்.... எனத் தொடங்கிய கற்பனைக் கதைகளே முதலாவதாகும். குழந்தைகளுக்குத் தாலாட்டுப் பாடிய ஆராரோ ஆரிராரோ... பாடல்கள் முதல் பாடல்களாகும். 'மாமன் அடிச்சானோ மல்லிகைப்பூ செண்டாலே, அத்தை அடிச்சாளோ அரளிப்பூ செண்டாலே' என்ற பாடலில் குழந்தையைச் சமாதானம் செய்ய முயற்சிக்கும் நோக்கில் உறவுகளையும், மலர்களின் பெயர்களையும் விவரித்தனர். முதல் பதிவாக.. அகநானூற்றில் கொற்றங் கொற்றனாரிடம் ஒரு தாலாட்டுப் பாடல் பதிவாகியுள்ளது. தாயோ, செவிலித்தாயோ நிலவினைக் காட்டிச் சோறு ஊட்டலைச் சொல்லும் பாடல்.

தொல்காப்பியத்தில் பிசி எனப்படும் விடுகதைவழிப் பாடல் இடம்பெற்றுள்ளது. ஔவை எழுதிய ஆத்திச்சூடி சிறுவர்களுக்கான அறிவுரை வடிவில் இடம்பெற்றது. சிறுவர் எழுத்துக்களான அதிவீரராமபாண்டியரின் வெற்றிவேற்கை, உலகநாதர் எழுதிய உலகநீதி ஆகியவற்றில் அறநெறிகள் இடம்பெற்றன.

சிறுவர் இலக்கியத்தின் முதல் பதிவு பெற்ற பாடலாகக் கருதப்படுவது.. கிருஷ்ணபிள்ளை எழுதிய 'இரட்சண்ய மனோகரம்'. தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தம்பி முத்துப்பிள்ளை எழுதிய 'பாலியக்கும்மி'. அதன்பின் அய்யாசாமி எழுதிய பாலராமாயணப் பாடல் வடிவம். பாரதியாரின் பாப்பா பாட்டு, கவிமணி, பாரதிதாசன், சுத்தானந்த பாரதி, வாணிதாசன், தமிழ்ஒளி ஆகியோர் தொடர்ந்தனர். மயிலை சிவமுத்து, கா.நமச்சிவாயம் முதலியார், மனை திருநாவுக்கரசு போன்றோர் சிறந்த சிறுவர் பாடல்களை இயற்றினர். பின்னர் அழ.வள்ளியப்பா, எ.ந.கணபதி, திருச்சி பாரதம், தமிழ்முடி, பெ.தூரன், பூவண்ணன், புவனை கலைச்செழியன் ஆகியோர் எழுதினர். அழ.வள்ளியப்பா சிறுவர் பாடல் கவிஞர் துறைக்காகவே சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார்.




ஏராளமான கற்பனைக் கதைகள், சித்திரக் கதைகள், விடுகதைப் பாடல், கும்மிப் பாடல், விளையாட்டுப் பாடல்கள் எனச் சிறுவர் இலக்கியம் பெருவெளியைத் தொட்டது. சிறுவர்களுக்கான இதழ்கள் நிறைய வெளிவந்தன. ரஷ்யக் கதைகளும், பிற நாட்டுக் கதைகளும், பாடல்களும் மொழிபெயர்க்கப்பட்டுச் சிறுவர்களின் மத்தியில் வரவேற்பைப் பெற்றன. கோகுலம், சுட்டி, பூந்தளிர், ராணி காமிக்ஸ், லயன் காமிக்ஸ், சிறுவர் மலர் எனப் பல இதழ்கள் வந்தன.

1975களில் 400 சிறுவர் எழுத்தாளர்கள் இருந்த பட்டியல் வெளியாகியுள்ளது. 50க்கும் மேற்பட்ட சிறுவர் இதழ்கள் வந்துள்ளன. முனைவர் பூவண்ணன் தொகுத்த குழந்தை இலக்கிய வரலாறு சிறந்த ஆவணமாகும்.

தற்போது மீண்டும் சிறுவர் இலக்கியம் எழுச்சிப்பெற்றுவருகிறது. மு.முருகேஷ், கன்னிக் கோவில் ராஜா, செந்தில் பாலா ஆகியோருடன் பலர் எழுதிவருகின்றனர்.

பெரியவர்கள் அறிவுரையாகப் பாடியதன் பிறகு சிறுவர்களின் கவனம் ஈர்க்குமாறு பல வடிவங்களில் எழுதினர். சிறுவர்கள் புரிந்துகொள்ளவும், ஆர்வம்காட்டவும் ஏற்ற வகையில் நூல்கள் வந்தன.

தற்போது குழந்தைகளுக்காகவே பல தொலைக்காட்சிகள் ஒளிபரப்பை நடத்துகின்றன. சமூக அறிவியல், அறிவுத்திறன் மேம்பாடு போன்றவற்றை முன்னிறுத்தி ஒளிபரப்பு செய்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன் வியாசர்பாடியில் சகோ.சிவா அமைப்பினர் சிறுவர்களையே கதை சொல்லச்சொல்லி அதையே நூலாக்கி வெளியிட்டனர்.

புத்தகச்சுமை, இடைவிடாத படிப்பு நெருக்கடி, டியூஷன், ரிவிஷன் என்ற மன அழுத்தல்களை மீறிச் சிறுவர்களுக்குச் சிறுவர் இலக்கியப் படிப்பையும், ஆரோக்கியமான விளையாட்டுகளின் மீது ஆர்வத்தையும் உருவாக்கவேண்டியது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் தலையாயக் கடமையாகும். ■

• முனைவர் ஹாஜாகனி

# உயர்த்தியது தமிழ்! – 3

கணினிக்கல்வியும், வணிகக்கல்வியும் இடமும், வலமுமாய் என்னை ஈர்க்க, நேராக இருந்து என் நெஞ்சை இழுத்தது தமிழ்க்கல்வி. எம்.சி.ஏ., எம்.பி.ஏ. படிப்புகள் என் இதயத்திற்கும், இயல்பிற்கும் ஏற்றதாக இல்லாத நிலையில், ஏற்றமிகு தமிழே, என்னை வானில் ஏற்றிவிடும் ஏணி எனத் தோற்றம் காட்டியது.

சென்னை புதுக்கல்லூரியில் முதுகலைத் தமிழ் சேர்வதற்கான விண்ணப்பத்தை வாங்கி அனுப்பினார் கவிஞர் அண்ணாகண்ணன். அதை நிரப்பி புதுக்கல்லூரிக்கு எடுத்துச் சென்றபோது, விண்ணப்பங்களுக்கான இறுதிநாள் கடந்து விட்டது என்றனர். கல்லூரி அலுவலகத்தில் பணியாற்றிய அதிராம்பட்டினம் ஃபாரூக், எனது விண்ணப்பத்தை வாங்கித் தாமதப்பட்டியலில் இணைத்துக்கொண்டார். இளம்வணிக ஆட்சியியல் பயின்ற எனக்கு, முதுகலைத் தமிழில் இடம் கிடைக்குமா என்ற அய்யம் இருந்தது.

சில நாட்களுக்குப் பின் எனது விண்ணப் பத்தின் நிலையை விசாரித்தறிய புதுக்கல்லூரிக்கு வந்தேன். அப்போது எனக்கான அழைப்புமடல் திருவாரூருக்குச் சென்றிருந்தது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு முஸ்லீம் மாணவர் முதுகலைத் தமிழ் படிக்க வந்ததில் அப்போதைய துறைத்தலைவர் பேரா. ஒ.அ.காஜாமைதினுக்கும், ஏனைய பேராசிரியப் பெருமக்களுக்கும் பெருமகிழ்ச்சி. வாங்கிக் குவித்திருந்த சான்றிதழ்களைக் கட்டாகக் கட்டி நேர்காணலுக்கு எடுத்துப்போனேன்.

புதுக்கல்லூரியை நான் தேர்வு செய்ததற்கு முக்கியக் காரணம் தமிழ்க் கவிதை உலகின் மாபெரும் ஆளுமைகளான கவிஞர் இன்குலாப்பும் கவிஞர் ஈரோடு தமிழன்பனும் அங்கு பணியாற்றியதே. இருவர்மீதும் எனக்கு மிகுந்த மதிப்புண்டு. தமிழ் படிக்க முடி வெடுத்ததைத் தற்கொலை முடிவெடுத்து விட்டதைப் போல விமர்சித்த சிலரால் ஏற்பட்ட மனக்காயங்களுக்குக் கவிப்பேரரசு வைரமுத்து, அண்ணன் அறிவுமதி ஆகியோரின் காந்தச் சொற்கள் களிம்பு தடவின.



“புதியவன், தமிழை நீங்கள் படிக்காமல் வேறு யார் படிப்பது?” என்று அழுத்தமாகக் கேட்டார் வைரமுத்து. 73, அபிபுல்லா சாலை என்ற முகவரி கொண்ட தனது அலுவலகத்தை இளம் இலக்கியப் பறவைகளின் வேடந்தாங்கலாய் வைத்திருந்தார் அண்ணன் அறிவுமதி. அவரது அன்புச்சொற்கள் எனக்கு ஒரு இராணுவ பலத்தை அளித்தன.

நேர்காணல் முடித்து, கட்டணம் கட்ட அலுவலகத்திற்குச் சென்றபோது நான் தொடுத்த வெள்ளந்தி வினாக்களை இப்போதும் சொல்லிச் சிரிப்பார், அப்போதைய புதுக்கல்லூரி அலுவலக ஊழியராக இருந்து, முனைவர் பட்டம் முடித்து, இப்பொழுது நந்தனம் அரசுக் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையில் பணியாற்றிவரும் உ. சையத் அஜீஸ்மீரான்.

கல்லூரி மற்றும் விடுதிக்கட்டணத்தை மொத்தமாகச் செலுத்த அப்போது வசதியில்லை. நான் பயின்ற காதிர் முகைதீன் கல்லூரி முதல்வர் நற்றமிழ் நாவலர் பேரா.எம்.ஏ.அப்துல்காதர் ‘காதிர் முகைதீன் கல்லூரியின் சொத்தைப் புதுக்கல்லூரிக்குத் தருகிறோம்’ என அன்பின் மிகுதியால் என்னைப் பற்றிய ஓர் அறிமுகக் கடிதத்தைப் புதுக்கல்லூரிக்கு அனுப்பியிருந்தார்.

புதுக்கல்லூரியின் முதல்வராகவும் உயர் கல்வியில் உன்னதக் கதாநாயகராகவும் திகழ்ந்த பேரா. மேஜர்.மு.ஜெய்லானி அவர்களிடம் கட்டணம் செலுத்த வசதியின்மையால் அஞ்சல்வழியில் தமிழ் பயில்கிறேன், விடை கொடுங்கள் என்றேன். அவருக்கோ என்னை அனுப்ப மனமில்லை. கட்டணம்தான் பிரச்சினை என்றால், கட்டணத்தை நானே கட்டிவிடுகிறேன் என்று என் சம்மதத்தை எதிர்பாராமல் தனது சொந்தப் பணத்தை உதவியாளரிடம் தந்து எனக்கான கட்டணங்களைக் கட்டச்செய்தார்.

மேஜர்.மு.ஜெய்லானி கல்வித்துறையில் ஓர் அதிசயம். அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலான கல்வி அனுபவம் கொண்டவர். தற்போது, சென்னை முஹம்மது சதக் கல்லூரியின் முதன்மையராகப் பணியாற்றிவருகிறார்.

அதிராம்பட்டினத்தில் எனக்குக் கிடைத்திராத, பல உயர்ந்த அனுபவங்கள் சென்னைப் புதுக்கல்லூரியில் கிடைத்தன. அதில் ஒன்று, மேஜர்.மு.ஜெய்லானி என்னை உட்காரவைத்துப் பேசுவது. அதிராம்பட்டினம் கல்லூரி முதல்வர் என்மீது தந்தையன்பைப் பொழிந்தவர்தான். ஆயினும், நான் வீட்டுக்குச் சென்றால் கூட, உட்காரவைத்துப் பேசமாட்டார். மாநகரத்தில் நான் கண்ட மதிப்பீடு மாற்றங்களில் அதுவும் ஒன்று. எனது மாணவர்களை நான் அமரவைத்துப் பேசுவதற்கு அந்த உணர்வே காரணமானது.

புதுக்கல்லூரியில் இணைந்த ஓரிருநாளில், உணர்வு வார இதழில் உதவி ஆசிரியராகப் பணியில் இணைந்தேன். தமுமுகவின் மாணவரணியைக் கட்டமைக்கும் பணி, இதழியல் பணி, இலக்கியக் கூட்டங்கள் என வேகம்பிடித்தது சென்னை வாழ்வு.

அனைத்துக் கல்லூரிப் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டிகளில் புதுக்கல்லூரியின் புகழ்க்கொடியை ஓங்கிப் பறக்கச்செய்தேன். செல்லுமிடமெல்லாம் வெல்லுமிடமாக, உற்சாகமும் உத்வேகமும் ஊற்றெடுத்தன. ஏக இறைவனின் பேரருளால் இதயம் நிறைந்ததால், அடக்கமும் அறமும் இயல்பில் கலந்தன.

தமிழாய்ந்த சான்றோர்களின் கவனம் என்மீது குவிந்தது. வலம்புரிஜான், பிரபஞ்சன், ஈரோடு தமிழன்பன் உள்ளிட்டோரின் பேரன்பு பெரும்பலம் சேர்த்தது.

புதுக்கல்லூரி விடுதியின் உணர்வு, உணவு, இதழியல் பணிகளால் எப்போதும் கையில் இருக்கும் கணிசமான தொகை, வாழ்க்கை முறையில் சிறுமாற்றம் எல்லாவற்றிற்கும் தமிழே மையப்புள்ளியாக இருந்தது.

விடுதியில் எனது அறையில் எல்லா மாத, வார இதழ்களும் நிறைந்திருக்கும். தின்பண்டங் களுக்குப் பஞ்சமே இல்லை. எனவே எனது அறையில் எப்போதும் ஒரு கூட்டம் இருக்கும்.

உணர்வு இதழில் நான் எழுதிய காரசாரமான கட்டுரைகள், காவல்துறையின் கோபப்பார்வையை என்மீது திருப்பின. அதன் உச்சகட்டமாக, 1998 நவம்பர் கடைசிவாரத்தில், காவல்துறையால் இரவில் கடத்திச் செல்லப்பட்டேன். நெடுநேரம் ஓர் அம்பாசிடர் காரில் வைத்து என்னை இம்சித்துவிட்டு மேடவாக்கம் அருகே இப்போது குளோபல் மருத்துவமனை இருக்குமிடத்தில் இருந்த இருட்புதரில் என்னை வீசிவிட்டுச் சென்றுவிட்டார்கள். அது ஒரு கொடிய அனுபவம்.

ஆளரவமற்ற அக்கானகத்தில் ஓர் ஆட்டோ ஓட்டுநரின் மனிதநேயம், என்னை விடுதிக்கு மீட்டுவந்தது. அந்த நள்ளிரவிலும் பேரா. இன்குலாப்பிற்குத் தகவல் சொல்கிறோம். மறுநாள் வெடித்த மாணவர் போராட்டம் வீதிகளில் விரிவடைய, வாகனங்கள் சேதமுற, திறக்கும் தேதி அறிவிக்கப்படாமல் கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டது. அந்தச் சம்பவம், செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சியிலும் பரபரப்புச் செய்தியாக, நடந்த சம்பவம் குறித்து அப்போதைய முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர், சட்டமன்றத்தில் பதிலுரைத்ததும் என்னை மாணவர்களுக்கு மிக நெருக்கமாக்கியது.

அந்த ஆண்டு மாணவர் பேரவைத் தேர்தலில் உமறுப்புலவர் பேரவையின் செயலாளர் பொறுப்புக்கு என்னை வற்புறுத்திப் போட்டியிட வைத்து, வெற்றி பெறவும் வைத்தனர். இக்காலகட்டத்தில் (பிப்.2000) கோவை வேளாண் கல்லூரி மாணவிகள் தர்மபுரி அருகே பேருந்தோடு தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவத்தில் கோகிலவாணி, காயத்ரி, ஹேமலதா ஆகிய மாணவிகள் உயிரிழந்தனர். அந்த நெருப்பு எங்கள் உள்ளங்களையும் சுட்டது.

உடனடியாக, பல்வேறு கல்லூரிகளின் மாணவர் பேரவையைத் தொடர்புகொண்டு, ஃபாதர் ஹென்றி ஜெரோம் (AICUE) நெறிப்படுத்தலில், அனைத்துக் கல்லூரி மாணவர் கூட்டமைப்பு (AKMK) என்ற அமைப்பை உருவாக்கினோம்.

சட்டக்கல்லூரியில் தொடங்கிக் கோட்டை நோக்கி மாபெரும் மாணவர் பேரணி நடத்தினோம். மன்றோ சிலையருகே காவல் துறையால் பேரணி தடுக்கப்பட்டது. பிரதிநிதிகள் ஐந்து பேரை முதலமைச்சர் அறைக்கு அழைத்துச் சென்றனர். நானும் அதில் இடம்பெற்றேன்.

கலைஞரோடு நிகழ்ந்த முதலும் கடைசியுமான சந்திப்பு அதுவாகவே இருந்தது. உங்கள் குரலில் தங்கமோகனின் குரல் கேட்கிறது என்றார். (தங்கமோகன் யார் என இப்போதுவரை தெரியவில்லை).

பொதுவாழ்வும் சமூக அக்கறையும் பிறர் நலனுக்காக முன்நிற்பதும் கல்விக்கு எதிரானது என்ற தவறான கற்பிதம் இப்போது வலுப்பட்டுவருகிறது. மதிப்பெண் வேட்கையை மட்டுமே மையமாகக் கொண்ட, கண்பார்வையற்ற கார்ப்பரேட் கல்விமுறை, பொதுநல உணர்வைப் போக்கி, தன்னலத்தையே வாழ்வின் தடமாகக் காட்டுகிறது. அதனால் தமிழ் உள்ளிட்ட கலை மற்றும் மானுடவியல் படிப்புகளுக்கு மதிப்பில்லாத மனநிலை நிலவிவருகிறது. பள்ளிப்பருவம் தொடங்கி, முதுகலைப் படிப்பு, முனைவர்பட்ட ஆய்வு வரை,பொதுவாழ்விலும் போராட்டங்களிலும் ஈடுபட்டமைக்காக எனது கல்வி வெற்றி கடுகளவும் பாதிக்கப்படவில்லை. பொதுவாழ்வுப் பங்களிப்போடு தனிவாழ்விலும் வெற்றிபெறலாம் என்பதற்கு நானும் ஒரு சான்று என்பதைப் பணிவோடு பதிவுசெய்கிறேன்.

பொதுவாழ்விலும் போராட்டங்களிலும் புதுப்புது இலக்கிய முயற்சிகளிலும் மூழ்கியிருந்த என்னை, தேர்வில் தோற்று தெருதோறும் அலையப் போகிறவனாய்ப் பலரும் கருதினர். சிலர் நேரடியாகவே இதைக் கூறினர். தேர்வுகளின் போது திட்டமிடலோடு கூடிய கடுமையான கூர்மையான உழைப்பை வெளிப்படுத்தினேன். மொத்த விடுதியும் உறங்கும் நள்ளிரவில், ஒற்றை மாணவனாய், மாணவர்ப் படிப்பறையில் படித்துக்கொண்டிருப்பேன்.

பயணங்களின்போதும், இடையறாது படித்தேன். இன்குலாப், கம்பம் சாகுல்ஹமீது, அ.காதர்பாட்சா, ஹ.மு.நத்தர்ஷா, பேரா. கலீல்அஹமது, செய்யது அப்துல் காதிர், பொன்.கௌதுமீரான், இசாத் அகமது மரைக்காயர், முரளி அருவன், ராஜா எனப் பேராசிரியப் பெருமக்கள் பொழிந்த அன்பும் என்னை வெற்றியை நோக்கி விரைவுபடுத்தின. முதுகலைத் தேர்வு முடிவுகள் வெளிவந்தபோது நான் மட்டும் தோற்பேன் என்ற நிலை தலைகீழாகி, நான் மட்டும்தான் வென்றிருந்தேன்.

வெற்றிமிக்க தேர்வு முடிவைப் பார்த்தவுடனேயே வேலை வேண்டுமென்றேன். புதுக் கல்லூரியில் வாய்ப்பு வர, சில மாதமாகுமென்று மேடவாக்கம் காயிதே மில்லத் கல்லூரிக்கு ஆற்றுப்படுத்தினார், தமிழ்த்துறைத் தலைவர் ஒ.அ.காஜாமைதீன்.

அது ஒரு வெள்ளிக்கிழமை. இராயப்பேட்டையிலிருந்து மேடவாக்கம் செல்ல நீண்டநேரம் ஆகும். ஏ51 பேருந்தில் ஏறினேன். மேடவாக்கம் கல்லூரிக்கு ஏற்கெனவே ஒருவரை அனுப்பியிருப்பதாகவும், அவர் வேலையில் இணையவில்லை என்றால் உனக்கு வாய்ப்பு கிடைக்குமென்றும் ஒ.அ.கா. சொல்லியிருந்தார்.

மாலைக் கல்லூரி ஒருங்கிணைப்பாளர் பேரா.செய்யதலி அப்பாசைச் சந்தித்தேன். ஜும்மாத் தொழுகைக்குப் பிறகு, வகுப்பெடுங்கள் என்று பாடத்திட்டத்தைத் தந்தார். ஏற்கெனவே அங்கு பணியாற்றிய பேராசிரிய நண்பர்கள் யாக்கூப், முஸ்தபா ஆகியோர் தாங்கள் கொண்டுவந்திருந்த உணவை எனக்குப் பகிர்ந்தளித்தனர்.

வகுப்பில் நுழைந்தேன். கம்பராமாயணத்தின் வாலிவதைப் படலம். நான் நடத்திய முதற்பாடம். சிறகுகள் விரிந்தன. மாணவமனங்கள் என்னோடு இணைந்துபறந்தன. பணியில் இணைந்தபோது நான் வாங்கிய மாதஊதியம்,இன்றைய எனது ஒருநாள் ஊதியத்தைவிடக் குறைவானதுதான். ஆனால் எனது பணிதந்த மகிழ்ச்சி, கல்லூரித் தாளாளர் கண்ணியமிகு காயிதேமில்லத்தின் பேரன் அல்ஹாஜ் எம்.ஜி. தாவூத் மியாகான் எனக்களித்த சுதந்திரம் என்றும் மறக்க முடியாததே.. செந்தமிழில் விழுந்தேன்.. சிகரங்களில் எழுந்தேன்.. எல்லாப் புகழும் இறைவனுக்கே.

– நிறைந்தது ■

• பிரேமபிரபா

# தாஜ் மஹால்




"காலத்தின் கன்னங்களில் ஒரு கண்ணீர்த் துளி"
– ரபீந்தரநாத் தாகூர்

மாலை நேரத் தொழுகைக்குப் பள்ளிவாசலை நோக்கி மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். மசூதிக் கோபுரங்களிலிருந்து ஏராளமான புறாக்கள் பறந்து அருகே உள்ள குளக்கரைப் படிக்கட்டுகளில் வந்தமர்ந்தன. தொழுகைக்கு வருபவர்கள் மீன்களுக்காகப் போட்ட பொரிகள் படிக்கட்டில் சிதறிவிழும் என்ற நம்பிக்கையுடன் புறாக்கள் இங்கும் அங்கும் பறந்துகொண்டிருந்தன. அருகில் இருக்கும் மீனா பஜாரில் மக்கள் கூட்டம் அலைமோதியது. பூக்கள், கண்ணாடி வளையல்கள், வாசனைத் திரவியங்கள், முத்துக்கள், மஸ்லீன் துணிகளென வியாபாரம் மிகவும் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

இருபதே வயதான இளவரசர் குர்ராம் அந்த வயதிற்கேற்ற ஆர்ப்பாட்டத்துடன் கேலியும் கிண்டலுமாக உரக்கப் பேசிக்கொண்டு நண்பர்கள் படை சூழ பஜாருக்கு வந்துகொண்டிருந்தார். ஒவ்வொரு கடையாக வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தவர், வண்ண மணிகள் விற்கும் கடையின் அருகில் நின்றுகொண்டு அந்தப் பெண்ணையே உற்றுப்பார்த்தார். உலகப் பேரழகுடன் இருந்தவளின் கண்களில் தெரிந்த மிரட்சியை ரகசியமாக ரசித்தவாறு இளவரசர் குர்ராம் அவளின் பெயரைக் கேட்க "அஞ்சிமண்ட் பானு பேகம்" என்று தன் விழிகளை உயர்த்தாமலேயே தடுமாறியபடி கூறினாள்.

இளவரசர் மிகச் சமீபத்தில் வருவதை உணர்ந்தவள் தாம்பாளத்திலிருக்கும்



பளிங்குக் கற்களைக் கைகளால் அளைந்தவாறு மேலும் குழப்பத்திற்குள்ளானாள். சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு தன் தலைப்பாகையைக் கழற்றித் தலைமுடியை விரல்களால் கோதியவாறு அவளைக் கண் இமைக்காமல் பார்த்த இளவரசர் “எனக்குத் தெரிந்த ஒரு பெண் தோழியின் பிறந்த நாளிற்குப் பரிசளிக்க பவழங்கள் வேண்டும். உன்னிடம் அவைகள் இருக்குமெனில் எனக்குக் காட்டுவாயா?” என்று கேட்டார்.

தானும் அவரைப் போல வேடிக்கை பார்க்க வந்தவள்தான் என்பதையும் இந்தக் கடையின் சொந்தக்காரியான தன் தோழிக்காகக் காத்திருப்பதையும் மறைத்துச் சிறுசிறு பேழை களைத் திறந்து மாதிரிக்கு உள்ளங்கையளவு பவழங்களைத் தேர்ந்தெடுத்து அனைத்தையும் வேறொரு சிறிய அலங்காரத் தட்டில் பரப்பி “உங்களுக்குப் பிடித்ததைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்” என்றாள் மிகப் பணிவுடன். “எனக்குப் பிடித்ததை நான் எப்போதோ தேர்ந்தெடுத்துவிட்டேன்” என்ற இளவரசர் குர்ராம், சப்தமாகச் சிரிக்க ஆரம்பித்தார். இருவரும் ஒருவருக்கொருவர் தெரியாமல் மற்றொருவரைப் பார்ப்பதும், ஒருவர் பார்த்தவுடன் மற்றொருவர் பார்க்காதது போல அபிநயித்தவாறும் இருந்தார்கள்.

தொழுகைக்கான நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது. குளக்கரைப் படிக்கட்டுகளில் அமர்ந்திருந்த புறாக்கள் அத்தனையும் ஒருசேரப் பறக்க அதன் இரைச்சலால் மீண்டும் இருவரும் சகஜ நிலைக்குத் திரும்பினார்கள். ஒருநாள் சரித்திரப் பதிவு பெறப்போகும் அவர்களின் உன்னதமான காதலின் முன்னுரைதான் இந்த முதல் சந்திப்பென்று இருவருக்கும் அப்போது தெரியாது.

ரத்தக் களறியான பதவிப் போட்டியில் ஆட்சியை வென்று சிம்மாசனத்தைக் கைப்பற்றிய மன்னர் ஷாஜஹான்தான் அந்த இளவரசர் குர்ராம். அவர் காதல் புரிந்து திருமணம் செய்து கொண்ட அஞ்சிமண்ட் பானு பேகம்தான் பிற்காலத்தில் நமக்கு மிகவும் பரிச்சயமான பெயரில் அறியப்பெற்ற மும்தாஜ்மெஹெல்.

ஷாஜஹான், மும்தாஜ் என்றவுடன் நம் அனைவரின் மனக்கண்ணில் முதலில் தெரிவது உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலும் யமுனை ஆற்றங்கரையும்தான்.

ஏராளமான மர்ம முடிச்சுகள் தாஜ்மஹாலில் இருப்பது போல உலகில் வேறெந்த அதிசயங்களிலும் கிடையாது. அவைகளுள் முக்கியமானது மூன்றாவது கல்லறை. மொகலாய மன்னர்களின் சமாதியில் மூன்று நினைவுச் சின்னங்கள் இருக்கும் என்பது ஒரு வழமையான கலாச்சாரம். ஒன்று மன்னருடையது. மற்றொன்று பட்டத்தரசிக்கானது. அதற்கு மேலும் ஒன்றென மூன்றிருக்கும். ஆனால் தாஜ்மஹாலில் இருக்கும் ஷாஜஹான் மும்தாஜ் மெஹெலின் நினைவுப் பீடத்தைத் தவிர மற்றுமொன்று எங்கோ கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும். வடக்குப் பகுதி வழியாக நிலவறைக்குச் செல்லும் வழியில் யமுனை ஆற்றங்கரையில் நிரந்தரமாக மூடப்பட்டிருக்கும் 22 அறைகள் ஒன்றினில் கூட அந்தச் சமாதி இருக்க வாய்ப்புண்டு.

தாஜ்மஹாலின் அஸ்திவாரத்தைப் பலப்படுத்த 1652ஆம் ஆண்டு நிலவறைகளையும் அவைகளை இணைக்கும் ரகசிய வழிகளையும் ஔரங்கசீப் நிரந்தரமாக மூடியது கூட அந்த மூன்றாம் சமாதி சரித்திரத்தில் மறைந்துபோக ஒரு காரணமாக இருக்கலாம். இப்படியான அனுமானங்கள் வளர்ந்துகொண்டே போகத் தீர்வான பதில் இதுவரை எவருக்கும் கிடைக்கவே இல்லை.

உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மஹால் யமுனை ஆற்றங்கரை பக்கம் சரிந்துகொண்டே போகிறதா? மும்தாஜிற்காக வெள்ளைப் பளிங்கினால் ஆன தாஜ் மஹாலை நிர்மானம் செய்த ஷாஜஹான் தனக்கெனத் தன் கடைசி காலத்தில் கட்ட எத்தனித்த கருப்பு தாஜ்மஹால் உண்மைதானா? சர்ச்சைக்குரிய மூன்றாவது கல்லறை தாஜ்மஹாலில் எங்கு இருக்கிறது? நிலவறையில் இன்றளவும் நிரந்தரமாக மூடப்பட்ட 22 அறைகளில் அப்படி என்ன இருக்கிறது?

அனைத்துக் கேள்விகளையும் தனி மனித யூகங்களையும் கடந்து பௌர்ணமி நிலவில் ஒளிரும் தாஜ்மஹாலைக் காதலின் சின்னமாக ஒப்புக்கொள்வதில் மட்டும் யாருக்கும் மாற்றுக் கருத்து நிச்சயம் இருக்காது.

ஆக்ரா கோட்டையின் அகன்ற தோற்றம். அதன் விசாலமான விதானங்கள். அலங்காரத் தூண்கள். வளமான கற்பனைத் திறனால் எழும்பிய அந்தக் கோட்டையின் ஒருபுறம் சிறை வைக்கப்பட்டிருக்கிறார் வயதான பேரரசர் ஷாஜஹான். அவர் தன் உள்ளங்கைகளை முகர்ந்து பார்க்க வழக்கமான ஆப்பிள் மணம் இல்லாததால் மிகவும் துணுக்குற்றார். பீஜப்பூரில் இருக்கும் ஒரு பக்கிரி தன்னிடம் வந்து கைகளைப்

பிடித்துக் கூறியது அவரின் நினைவிற்கு வந்தது. “ஷஹென்ஷா, தங்களின் உள்ளங்கைகளில் என்றைக்கு ஆப்பிளின் மணம் இல்லாமல் போகிறதோ அந்த நாள்தான் தங்களின் கடைசி நாளாக இருக்குமென்பது சத்திய வாக்கு” என்றான்.

பனி மூட்டத்திடையே தோன்றும் பேரழகான தாஜ்மஹாலில் பார்வையைப் பதித்தவாறு அவரின் மூத்த மகள் ஜஹனாராவை மெல்லிய குரலில் அழைத்தார். நோயின் கடுமையால் உலர்ந்துபோன தொண்டை. அவரால் மீண்டும் குரல் எழுப்பி யாரையும் அழைக்க முடியவில்லை. அவருக்கு மிகவும் பிடித்த ரோஜா இதழ்கள் தூவிக் குடிக்கும் சர்பத்தைக் கூட குடிக்க முடியாத துர்பாக்கிய நிலை. சுவாசத் திணறலால் தடுமாறியவர் அருகில் இருக்கும் தண்ணீர் ஜாடியைக் கைகளால் தட்டிவிட, ஒலி கேட்டுப் பதறியபடி ஓடிவந்த மகள் ஜஹனாராவிடம் தன்னைச் சாய்வாகக் கட்டிலில் உட்காரவைக்க வேண்டினார். தாஜ்மஹாலினை மறைத்த காலைப் பனிமூட்டம் விலகி, முழுஎழிலுடன் கம்பீரமாகத் தோன்றியது. தன் அன்பு மனைவி மும்தாஜை அன்று அதிகமாக நினைவுகூர்ந்தார் மன்னர் ஷாஜஹான்.

பர்ஹான்பூரில் நடந்த கலவரத்தை அடக்க அவருடன் சென்ற மும்தாஜ் மெஹல் தன் பதினான்காவது குழந்தைப் பேறில் இறந்தது; ஒரு வருடம் கழித்து அவளின் நினைவாக இருபதாயிரம் கட்டிடக் கலைஞர்களைக் கொண்டு ஆயிரம் யானைகளின் உதவியுடன் இருபத்தி இரண்டு வருடங்களாக, மூன்று கோடியே இருபது லட்சம் பொருட்செலவில் தாஜ்மஹால் கட்டப்பட்டது; தன் மகன் ஔரங்கசீப்பால் ஆக்ரா கோட்டையில் அரண்மனைக் காவலில் சிறை வைக்கப்பட்டது வரை மடல்மடலாக அவருடைய வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு நிகழ்வும் அன்றைய தினம் மனதில் விரிந்து மறைந்தது. ஷாஜஹானின் விழிகளின் ஓரத்தில் வழிந்த கண்ணீர்த் துளியில் பிரதிபலித்த தாஜ்மஹால் அவரின் கன்னத்தில் கடைசியாகப் பட்டுச் சிதறியது ஜனவரி 31ஆம் தேதி 1666ஆம் ஆண்டு.

ஷாஜஹானுடன் சிறை வைக்கப்பட்ட அவருடைய மகள் ஜஹனாரா, தன் தந்தையாரின் ஈமக் கிரியைகளை மிகவும் விமரிசையாக நடத்த ஆசைப்பட்டாள். ஆனால் நடந்ததோ வேறு.



அரண்மனையில் வேலை பார்க்கும் ஒரு சிலரால் இரவோடு இரவாக, பேரரசர் அக்பரின் அன்புப் பேரனும், ஜஹாங்கீரின் அருமைப் புதல்வருமாகிய ஷாஜஹானின் சடலம் எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் ஒரு சராசரி குடிமகனிற்கான குறைந்தபட்ச மரியாதையுடன் யமுனை ஆற்றங்கரையைத் தாண்டி எடுத்துச் செல்லப்பட்டது.

பொழுதும் விடிந்தது. விடியலின் ஒளிக்கீற்று மெல்ல இறங்கும் குளிர்க் காலையில் தாஜ்மஹாலின் நிலவறையில் உள்ள மும்தாஜ் நினைவுப் பீடத்திற்கருகில் ஷாஜஹானை நல்லடக்கம் செய்தார்கள். ஒரு மாபெரும் மன்னரின் அந்திமக் காலம் இந்த அளவிற்கு வேதனையாக மாறியது நிச்சயம் ஒரு சரித்திர சோகம்தான். இந்தச் சோகத்தைக் காணச் சகியாது அவரின் அன்பிற்குப் பாத்திரமான பட்டத்து யானை கலிக்டாட்டும் அன்றே இறந்துபோனது.

எத்தனையோ அவிழ்க்கப்படாத சம்பவங்களின் வெற்று உட்தொகுப்பாக மட்டும் சரித்திரங்கள் அமைவதில்லை. சர்ச்சைகளாலும், மாற்றுக் கருத்தை முன் வைப்பதாலும், நிரூபிக்க முடியாத ஜனரஞ்சகமான யூகங்களாலும், சரித்திரப் பதிவுகள் எப்போதும் குழப்பத்திற்குள்ளாகும். எனினும் அதன் மூலத்தை அழிக்கவும், மாற்றி எழுதவும், பல ஊடகங்கள் தன்னாலியன்ற மறைமுகப் பணிகளில் ஈடுபட்டாலும், உண்மைகளின் வெளிப்பாடு ஒருநாள், திரித்து எழுதப்பட்ட நிகழ்வுகளை நிச்சயம் இனம் காட்டிவிடும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சரித்திர உண்மை. ■

கஸல் தொடர்

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் – 2

• ஜின்னா அஸ்மி
ஓவியம் : கொ.வடிவேல்



**வா**...
பாவங்கள் செய்யப்
பழகிக்கொள்வோம்...
....................
வருத்தங்களை வரங்களாகத்
தருகிறாய்...
சந்தோஷம் சாபமாகி விடுகிறது...
....................
என்னை உனக்குள்
புதைத்துக்கொள்
ஒரு மண்புழுவாக...
....................
அழித்தாய் அடையாளமானேன்
நான் இருள்
நீ வெளிச்சம்
....................
மொத்த அமைதியையும்
நீ வைத்துக்கொண்டு
கோபத்தை மட்டும்
எனக்குப் பரிசளித்து
இருக்கிறாய்....
....................
உன் மௌனத்தால்
என்னைப் பேசவிடு...
....................
என் மீன்களுக்குக்
கண்ணீர்த் தொட்டியே
கடல்...
....................
என் இறகுகளைக் கொய்து
கூடு கட்டுகிறேன்...
இப்பொழுது
வானத்தைக் காட்டி
வேடிக்கை காட்டுகிறாய்...
....................
தண்டவாளமாக இருக்கிறோம்
நாம்
ரயிலாய் வருகிறது காதல்...
....................
நீ அக்கரை
நான் இக்கரை
ஏதோஒரு கரையில்
பச்சையாக இருக்கிறது காதல்...
....................

இலக்கிய விழா

# இளநீரும் இலக்கியமும் – பொள்ளாச்சியில் ஒரு இலக்கியக் கொண்டாட்டம்



• கோ.லீலா

தலை குளித்த பெண்ணாக அடர்வனப் பச்சையில் நீலவானக் கரை கொண்ட உடையோடு பொழில் கூடிய பொள்ளாச்சி எழில் கூடி நிற்க தமிழ் இசை பாடியது. இயற்கையின் இலக்கும் இலக்கியமானது. இளநீர்க் குலைகளெல்லாம் இலக்கியம் கேட்க மழையில் குளித்துநின்றன. அன்று 21.10.18. தமிழகக் கவிஞர்கள் வந்திறங்கினர், கவிப்பூக்களைக் கைகளில் ஏந்தியபடி. தமிழ் மணம் வீசும் அத்தங்கப்பூக்களைத் தலைப்புவாரியாகப் பிரித்தடுக்கி விற்பனைக்கு வைத்தனர் கவிஞர்கள்.

பொள்ளாச்சியின் 66வது இலக்கிய வட்ட விழா இனிதே தொடங்கியது. தன் வீட்டில் தான் நுழைய வரவேற்புரை நிகழ்த்திக் கொள்வதில்லை நாம். தத்தம் வீடாகவே விரிந்தது பொள்ளாச்சி இலக்கிய வட்டம். அதன் தலைவர் கவிஞர் அம்சப்ரியா மற்றும் செயலாளர் கவிஞர் இரா.பூபாலன் அவர்களின் பேரன்பால். கைநிறைய கவிப்பூக்களுடன் சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்தனர் படைப்புக் குழுமத் தோழமைகள் கஸல்கவிஞர் ஜின்னா அஸ்மி, பெண்ணியக் கவிதாயினி அகதா செந்தில்குமார், மண்வாசனைக் கவிஞர் கட்டாரி, தூரிகைக் கவிஞர் குறிஞ்சிநாடன், கவிஞர் கவி விஜய் ஆகியோரும் பொள்ளாச்சி இலக்கிய வட்டத்திலிருந்து கவிஞர் திருவேங்கடம் அவர்களும்.

படைப்புக் குழுமத்திலிருந்து கவிதைக் கணைகளை ஏந்திக் கவிஞர் சலீம்கான் (பொருளாளர்), திரு. இப்ராஹிம் (சந்தைப்படுத்தும் பிரிவின் மேலாளர்), ஒலியும் ஒளியும் கவிதைத் துளியும் புகழ் காந்தக்குரலோன் ரூஃபஸ்.வி. ஆண்டனி, கவிஞர் மதுபதி, கவிஞர் பொள்ளாச்சிமுருகானந்தம், கவிஞர் சசிக்குமார், கவிதாயினி கலைவாணி இன்னும் பலர் படைப்பின் சிறகு விரித்துப் பறந்து வந்திருந்தனர். அண்டை மாநிலமான கேரளாவிலிருந்து கவிஞர் பேராசிரியர் கதிரவன் கணேசன், அவர்தம் மாணாக்கர் தீபக், பொள்ளாச்சி வட்டத் தமிழ் ஆர்வலர்கள், கவிப்புனையும் மாணவர்களென இலக்கிய இல்லம் தமிழால் நிறைந்தது.

இல்லத்தில் பிடித்ததைக் கேட்க விழா தொடங்கியது. படித்ததில் பிடித்தது பகுதியில் கதைப்பேச்சு தொடங்கிற்று. உருமாற்றம், சாகாவரமெனக் கதைப்பேச்சு நீள இதயமெங்கும் இனிய தமிழ் பரவியது. தமிழ் நடனமிட விரும்பக் கவிதை அரங்கேறியது. கவிதாயினி கயல்.S மற்றும் கள்ளிக்குருவி அவர்களின் கவிதையின் வாசிப்போடு படித்ததில் பிடித்தது பகுதி நிறைவு பெற, கவிப்பூக்களின் அணிவகுப்பு அமர்வு கண்டது பொள்ளாச்சி இலக்கிய வட்ட விழா.

கவிஞர் திருவேங்கடம் அவர்களின் “வரம் கேட்கும் கடவுள்” நூலைக் கவிஞர் இரா.பூபாலன் வெளியிட, நல்லாசிரியர் விருதுபெற்ற ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் இரா.குழந்தைவேலு அய்யா பெற்றுக்கொண்டு, நூல் அறிமுக உரையாற்றினார்.

அடுத்ததாக, படைப்புப் பதிப்பகத்தின் நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

“கை நழுவும் கண்ணாடிக் குடுவை” என்ற நிலவின் ஒளிக்கிரணங்களைக் கையிலேந்தி அறிமுகம் செய்ய வந்தார் தோழர் கவிஞர் ஜி.சிவக்குமார். கவிப்பூவின் மணம் பரவ, அசோகவனம் செல்லக் கடைசி ரயிலில் ஏறும் பெண்மையின் சோகங்களை எரித்துவிட எழுந்தது சுடர்விழி. கவிஞர் முகமது பாட்சா இக்கவிதைத் தொகுப்பு நூலில், 130 கவிதைகளில் 75 சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்ததோடு, மற்ற கவிதைகள் ஏன் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற காரணத்தையும் கூறினார். அதனால்தான் கவிதைத் தொகுப்பு சிறந்ததாக அமைய வாய்ப்பானது எனக் கூறினார்.

அஞ்சல அம்மாளின் பேரன்பைப் போற்றி, மகனின் உணர்வுகளை உணர்ந்து ‘அஞ்சல மவன்’ புத்தக அறிமுகவுரை நிகழ்த்தினார் கவிதாயினி சூர்யா ஈஸ்வரன். தொடர்ந்து மகிழ்ச்சியைப் பரவவிட, கஸல் கவிஞர் ஜின்னா அஸ்மியின் “கடவுள் மறந்த கடவுச் சொல்” என்ற கஸலை இசைத்து அறிமுகம் செய்ய வந்தார் கவிஞர் இரா.பூபாலன். கஸலைத் தொடர்ந்து சிண்ட்ரெல்லாவின் தூரிகை எடுத்துக்கொண்டு வரைய வந்தார் புன்னகைப்பூ ஜெயக்குமார். கவிஞர்கள் ஏற்புரை வழங்கினர்.

கவியரங்கப் பகுதியில் தத்தம் கவிதைகளை மாணவர்களும் மற்ற படைப்பாளிகளும் வாசிக்க... மாணவர்களை ஊக்குவிக்கும்பொருட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. வந்திருந்தோர் அனைவருக்கும் 'பெண் ஏன் அடிமையானாள்' என்ற புத்தகம் பரிசளிக்கப்பட்டது. காந்தியின் 150வது பிறந்தநாளை யொட்டிச் சத்தியசோதனை புத்தகம் குறைந்த விலைக்கு விற்பனைக்கு வைக்கப்பட்டது. ■

மாணவர் பக்கம்

பயணக் கட்டுரை

தொடர் - 7

• தமிழ்பாரதன்
ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி

# ஈரிருநாள் இலங்கை

விடிந்தும் விடியாத காலைப்பொழுதில், “எல்லாரும் கிளம்பிட்டாங்க, நீங்க இன்னும் எழுந்திருக்கவே இல்லையா?” எனும் கூக்குரலைக் (அப்புறம் எப்படியா இந்தியா முன்னேறும்? எனும் மனக்குரல்) கேட்டு, ஒட்டிக் கொண்டிருந்த இமைகள் பிரியத் தொடங்கின. சற்று நேரத்தில் ஆயத்தமாவது எப்படி எனச் சொல்லிக்கொடுத்த கடந்த காலங்களின் பிரதிபலனாக விரைவாகவே எல்லாரும் கிளம்பியிருந்தோம். காலை உணவுகளை வட்டியும் முதலுமாக உண்டு முடித்து, பிறநாடுகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் உடைமைகளோடு விடுதியின் முகப்பில் முகாமை முடித்துக்கொள்ள முனைந்திருந்தனர். இந்திய உணவுகளின் நீட்சியோடு கிடைத்தவற்றை உண்டு, இந்தியத் தோழர்களும் அவர்களோடு தயாராக இருந்தனர்.

நிகழ்வை ஒருங்கமைத்த வணக்கம் மலேசியா, சிறு கூடுகை நடத்தியது. அனைவரும் கூடிய பிறகு, அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும், பல நாடுகளில் வாழும் மாணவர்களிடையே இந்நிகழ்ச்சி விரிவடைதல் குறித்தும் அதற்கான தேவை குறித்தும் கலந்தாலோசனை நடத்தப் பெற்றது. பெருகிவரும் தொழில்நுட்ப உலகில், மொழி விழி(உயிர்)ப்புணர்வு அருகிவருகிறது.

இந்தியா(தமிழ்நாடு), இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழர்கள் எண்ணிக்கையளவில்(!) அதிகம் வசிப்பதால், தமிழ்ப்பண்பாடும் பயன்பாடும் அதன் உள்ளீட்டுத் தொடர்பும் இருந்துகொண்டே இருக்கின்றன. ஆனால், பிறநாடுகளில் எண்ணிக்கையளவில் அதிகம் இல்லாதபோது, அவர்களுக்கான உரிமைகள் அவர்களுக்கானதாக இல்லாமல் இருக்கின்றன.

சான்றாக, எங்களோடு மியான்மரிலிருந்து போட்டியிட்டவர்களின் பெயர்கள் தங்களுக்குத் தாங்களே வைத்துக்கொண்டது. மியான்மர் தேசத்தில் பிறக்கும் குழந்தைகளின் பெயர்கள் மியான்மர் மொழியில்தான் சூட்டப்பட வேண்டும் என்பதால், தமிழ்ப் பெயர்கள் என்பவை வீட்டோடு முடங்கிப் போய்விட்டன. சான்றாக, ஆங் ஆங் போன்றவையே தமிழர்தம் அதிகாரப்பூர்வப் பெயர்களாக அங்கிருக்கிறது.

பெயரில் தொடங்கி யாவற்றிலும் தமிழை அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்த முடியாத சூழலில் வாழும் மக்களிடையே, தமிழ்ப் பயன்பாடு குறைந்தே காணப்படுகிறது. இதனால் மொழிப்பயன்பாடும் குறைந்து, பேச்சுத் தமிழின் நிலை நாட்டிற்கு நாடு மாறுபடுகிறது. இச்சூழலில் தமிழ்நாடுஇலங்கை நாட்டில் வாழும் மாணவரின் பேச்சுத் தமிழ்த்திறனுக்கும், நியுசிலாந்து சுவிட்சர்லாந்து மியான்மர் நாடுகளில் வாழும் மாணவரின் பேச்சுத் தமிழ்த்





திறனுக்கும் ஒரே மதிப்பெண் அடிப்படை என்பது நடுநிலையானதன்று.

எனவே, உலகத் தமிழ் மாணவர்களை ஒரே குடையின்கீழ்க் கொண்டுவர, பல்வேறு முன்னெடுப்புகளை எடுக்கவேண்டியுள்ளது. ஆக, இவற்றை அடுத்தடுத்த ஆண்டுகளில் நடைமுறைப் படுத்தல் தேவை என்பது பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

மெரைன் ட்ரைவ் வீதியில் இனிதே விடைபெற்று, இலங்கையின் புறநகரைச் சுற்றிப் பார்ப்பதற்கான நாளாக அந்த நாள் இருந்தது. பண்டாரநாயக்க விமான நிலையத்தில் அன்றிரவு பலரும் விமானம் ஏறயிருப்பதால், கொழும்பு நகரத்தின் 200 நிமிட பயணப் பரப்பிற்குட் பட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்திருந்தனர்.

அதோ, அந்த வாகனம் விடுதி முகப்பில் தயாராக இருந்தது. முழுவதும் குளிரூட்டப்பட்ட வண்டி, ஒளி புகும் காற்றுபுகாச் சாளரத்தை உடைய வண்டி, உடைமைகளை ஏற்றியபின், உடைமைகளுக்குரியவர்கள் ஏறிடவே தலை நகரின் தலைமைச் சாலைகளில் 'தவழ' ஆரம்பித்தது. முதன்மைச் சாலைகளைக் கடக்கும் வரையிலும் தவழ்ந்தே சென்றது.

அலை வந்து மோதிக்கொண்டிருக்கும் கடலொட்டிய சாலையினூடே பயணிக்கையில், கடற்கரையை நோக்கி வீற்றிருக்கிறது இலங்கை நாடாளுமன்ற முந்தையவளாகம். அதைத் தாண்டிச் செல்கையில் சீனா தத்தெடுத்துத் துத்தெடுத்துக் கொண்டிருக்கும் கடற்கரை 'நில'ப்பரப்பு இருந்தது. துறைமுக நகரமாக அப்பரப்பை உருவாக்கிக்கொண்டிருக்கிறது சீனா.

புறநகர்ச் சாலையில் சீறிய வாகனம் கங்கா ராம விகாரையில் நின்றது. புறத்திருந்து சற்றே சுற்றிப்பார்க்க அங்கே புத்தர் சிலை ஓவியங்கள் இருந்தன. இசைக்கையில் துளிர்க்கும் உயிர்ப்பென மீண்டும் பயணம் தொடர்ந்தது. யாதொரு இடத்தையும் தீரச் சுற்றிப்பார்க்க வாய்ப்பற்ற நிலையில், வாகனத்திலிருந்தே வசப்பட்டன காட்சிகள்.

'ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே'வில் உள்ள இலங்கை நாடாளுமன்றத்தின் புதிய வளாகத்தினைக் கண்ணுற முடிந்தது. இலங்கைத் தீவின் தற்போதைய நாடாளுமன்றம், நீரால் சூழப்பட்டிருந்தது. வாகனங்கள் சென்று வருவதற்கான ஒரு பாதை மட்டுமே அதற்கு உண்டு (எளிதில் வெளிநடப்புசெய்திட, தப்பித்திடக் கூடாது என்பதற்கான வடிவமைப்பு போலும்). பின், அங்கிருந்து அகல, நீளும் சாலைகளில் செல்லும் வாகனத்தின் நிழல் அதன் சக்கரங்களுக்குக் கீழே புதையுண்டு கொண்டிருந்தது.

உடன்வந்தவர்களின் எண்ணம் தமிழர்கள் அதிகம் வாழும் தமிழீழ நிலப்பரப்பிற்குச் செல்லவேண்டும் என்பதே. ஆனால், வடக்கு கிழக்கு மாகாணங்கள் கொழும்பிலிருந்து தொலைவு. இரவிற்குள் மீண்டும் திரும்புதல் சாத்தியமற்றது. தென்மேற்கு இலங்கை நோக்கி நகர ஆரம்பித்தோம். பசுமைபோர்த்திய நிலப்பரப்பில் வகிடெடுத்தாற்போல் கருஞ்சாலை நீண்டது.

இடையே, தியம் உயன பகுதியில் மதிய உணவுக்காக ஓய்வு தரப்பட்டது. ஏற்கெனவே வெட்டப்பட்டுச் சுவைகூட்டப்பட்ட ஊன்உணவு களை எல்லாரும் வெட்டு வெட்டினார்கள். அங்கெங்கிலும் ஊன் தவிர்த்த மதிய உணவு இல்லை என்பதால், தோசை மட்டும் போதுமானதாக இருந்தது. இலங்கை ரூபாயில் அதன் மதிப்பு 300. இயல்பு கொள்ளளவிற்கு அதிகமாயிருந்த உணவுகளைச் சிலர் என்ன செய்வதென்று அறியாது தவித்தனர். அங்கு வந்த பணியாள் ஒருவர் மூன்று தொட்டிகளைக் காட்டினார். மூன்று குரங்குகள் போல, முக்கியத்துவமானது இந்த மூன்று தொட்டிகளும்.

1. உணவுக் கழிவு
2. பிளாஸ்டிக் கழிவு
3. காகிதக் கழிவு

என அடையாளப்படுத்தப்பட்டு அடுத்தடுத்து இருந்தன. இன்றைய சூழலில் திடக்கழிவு மேலாண்மையின் மிகப்பெரிய சிக்கலை இது தீர்க்கும். இந்தியாவில் பின்பற்றப்படும் மக்கும் குப்பை, மக்காத குப்பை முறைக்கு மாற்றாக இதை நோக்கலாம். கழிவுகளை அடுத்தகட்டம் நோக்கி மாற்றுதலுக்கான எளிய பகுப்பாக இம்மூன்று தொட்டிகளையும் கொள்ளலாம்.

உணவுக்குப் பின்னிணைப்பாக, பனிக்கூழ், இன்னபிற தீனிகள் என வாங்க, அரைலிட்டர் தண்ணீரை 60 இலங்கை ரூபாய் கொடுத்து வாங்கிய முதல்நாள் அன்று. நேரத்திற்கு உள்ளேறிய உணவுகளைப்போல, நேரத்திற்கு வெளியேறக் கழிவுகளும் தயாராக இருந்தன. அருகே பொதுமலசலக் கூடம் இருந்தது. இந்தியாவில் அரசு மருத்துவமனைக் கழிவறை, பேருந்துநிலையக் கட்டணக் கழிப்பறை, தொடரிக் கழிவறை போன்ற பொதுக்கழிவறைகளுக்கு எதிர்நிலையில் இருந்தது அதன் தரம். அவ்வளவு தூய்மைப் பராமரிப்பு. இந்தியாவின் பொதுக்

கழிவறைகள் எப்படி இருக்க, பராமரிக்க, பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை அந்நாட்டிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

பின்னங்கிருந்து, யாவரும் ஒருங்கமைய இலங்கையின் தென்மேற்கு எல்லை நோக்கிச் செல்லத் தொடங்குகையில் வாகனம் நட்பு எல்லைக்குள் வந்துவிட்டது. எல்லாரும் வெகுவாக நட்பு பாராட்டத் தொடங்கி யிருந்தோம். போட்டி முடிந்து, பயணத்தில் இரண்டறக் கலந்து, உணவு பரிமாறி, நினைவுகளை நிகழ்வுகளை இறந்தகாலத்தை நிகழிருப்பை நனவாக்கவேண்டிய கனவுகளை என யாவற்றையும் இறக்குமதி ஏற்றுமதி செய்ய, மொழி பிணைப்பை ஏற்படுத்தியிருந்தது. ஒவ்வொரு நாட்டின் உணவுத் தயாரிப்பு முறைகள், சொற்பயன்பாடுகள், சொலவடைகள் எனப் பலவற்றைப் பகிர்ந்தோம்.

வாகனம் பயணித்த நெடுந்தூர நிறைவில் இரவு சூரியனைக் களவாடும் மாலை நேரம் காத்திருந்தது. கடற்கரையை ஒட்டிய அந்த இடம் கோட்டை போன்ற கட்டமைப்பில் இருந்தது, பெயர் காலி. போர்த்துக்கீசியரால் கட்டப்பட்ட காலிக் கோட்டை பின் ஒல்லாந்தர்களால் (டச்சுக்காரர்) கைப்பற்றப்பட்டுத் தற்போது இலங்கை அரசால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது யுனெஸ்கோ 1988இல் அறிவித்த மரபார்ந்த இடங்களுள் ஒன்று.

கோட்டைமதிலுள் நுழைந்ததும், அதன் கடற்கரை வரை, மரபு+மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனைக்கு இருந்தன. பார்த்தே கடந்த பல கடைகளுக்கிடையில் ஒன்றில் சிலவற்றைக் குறைத்துப் பேசி வாங்கினோம். உரச் சாக்கெல்லாம் பையாக்கப்பட்டிருந்தது. சுற்றுலா வந்த வெள்ளைத்தோல் போர்த்தியவர்கள் அதிகமிருந்த அந்நேரத்தில் நாங்கள் எண்ணிக்கையில் குறைவுதான். பன்னாட்டுப் பொருளாதாரத்தில் டாலரில் முன்வைத்த பணப்பரிமாற்றம் வர்த்தகத்தில் இலகுவாக இருக்கிறது. எல்லாக் கடைகளிலும் உணவகங் களிலும் அவர்கள் இருந்தனர்.

கடைகள் முடிந்த தெருக்களின் இணைவில் கடற்கரை இருந்தது. அக்கடல்நீர் மட்டத்தி லிருந்து இருபதடி உயரத்தில் மதில்மேல் பூனையாக நாங்கள் இருந்தோம். கன்னியாகுமரி யில் காலை மாலையில் சூரியனின் பயணத்தைக் காண்பது போல், இந்தியப் பெருங்கடலில் சூரியன் மறைந்துபோவதை இலங்கையில் காலிக் கோட்டை மதிலிலிருந்து காணத்தயாரா யிருந்தோம்.

எங்கள் நிழலை மஞ்சள் குளித்த நிலத்தில் படரவிட்ட சூரிய ஒளி, தன் ஆயுளை அன்றைய தினம் இழந்துகொண்டிருந்தது. சில படங்களும் சில கவிதைகளும் சில பரிமாற்றங்களும் மனதை நிரப்பியிருந்தன. அன்பும் ஆரவாரமும் இயற்கையும் ஒருங்கமைந்த அந்தவிடத்தில் மகிழ்ச்சியன்றி வேறென்ன சூழ்ந்திருக்க இயலும்!

சூரியன் தன் கூடடைந்த பின், தாங்களும் கூடடைய வேண்டியதைப் போட்டியாளர்கள் உணர்ந்தே இருந்தனர். நேரம் கருதி விறுவிறுப்பாக வாகனத்தைத் திரும்ப அடைந்ததில் சிலர் விடுபட, காணாமல் போனவர்களைத் தேடி மேலும் சிலர் காணாமல் போக, கதிகலங்கிப்போயிருந்தது சிலர் மனது. இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் தவிர பிறர் பேசியில் டவர் இல்லை. இதனால் உடனடியாகக் காணாமல் போனவர்களை அடையாளப் படுத்தாத சூழல் நிலவியது. அவர்களாக வந்தால் உண்டு! அடையாளங் கண்டுகொண்டால் உண்டு எனும் நிலையில் தேடியவர்களும் தேடப் பட்டவர்களும் ஒருங்கே வந்துசேர்ந்ததில் விளக்கு போடப்படாத வாகனத்தின் உட்புறம் ஒளி நிறைந்திருந்தது.

ஆடிய ஓடிய பாடிய சுற்றிய களைப்பில், விமான நிலையம் வரும்வரை ஓய்ந்தனர் பலரும். இருள் சூடிய வானுக்கும் புவிக்குமிடையே சென்றுகொண்டிருந்த வாகனம் அடைந்த நிலையம் விமானக் கூடு. நிலைய முற்றத்தில் இலங்கைக் கூட்டிலிருந்து தாய்வீடு திரும்பும் பறவைகளுக்கு இன்னொருமுறை இப்படியொரு கூடுகை சாத்தியமற்றதென்பதால் பிரியா விடைகொடுத்தோம்.

எனக்கு விமானம் அடுத்தநாளென்பதால் (நவ.14) இலங்கைப் போட்டியாளர்களுடன் மீண்டும் விடுதி நோக்கிப் புறப்பட்டேன். கொழும்பு வந்ததும் தயாளினியும் அவர்தம் தாயும் யாழ்ப்பாணம் செல்லும் பேருந்தில் ஏற, சஜீவனும் சாருஜனும் கொழும்பின் பிறிதொரு இடத்தில் இறங்கிக்கொள்ள, கூட்டத்தை ஏற்றிச்சென்ற வாகனத்தில் தனிஒருவனாக, விடுதியடைந்தேன்.

இலங்கையின் வீதிகளும் கடற்கரையும் இப்போது குடிபுகுந்த வீட்டின் பழகிய அறைகளாக இருந்தன. நிகழ்விற்கு வந்த எல்லாரும் சென்றதால், தன்னந்தனியாகப் புதிய அறை தரப்பட்டது. கடலலை அறையின் புறக்கதவைத் தட்டிக்கொண்டிருந்தது. கதவைத்

திறந்தால் இந்தியப்பெருங்கடல். உயிரற்றுப்போன பேசிக்கு மின்தானம் கொடுத்தபின் கொஞ்சம் தெளிவுற்றேன். பேசி பழுதாகிவிட்டது! கொஞ்சம் வேலைசெய்தாலும் டவர் இல்லாததால் அழைக்க முடியாது. விடுதி வந்ததும் இணைய இணைப்பில் தான் என் இருப்பை வீட்டிற்கு உறுதிசெய்து கொண்டேன்.

இந்த இரவைத் தனியே நிறைவுசெய்ய வேண்டும்! காலை யார் வருவார் அழைக்க! எப்படி விமான நிலையம் செல்வதெனப் புரியாத சிந்தனையிலே கண்ணயர்ந்தபோது, நடுநிசி இருக்கும். காலை எட்டு மணிக்குள் எழுந்து அடிக்கவிருந்த அலாரங்களை அணைத்து, குளித்து முடித்து, களிக்க வேண்டி அறையை மூடச்செய்து அழைத்துச்சென்றது கடற்கரை. குப்பைக்கூளமற்ற இடம், தூயதாக இருந்தது. ஆளரவமற்று நீண்ட கடற்கரைப்பரப்பில் இந்தியப் பெருங்கடல் பரந்துவிரிந்திருந்தது. கட்புலனாகும் இடமுட்டும் நீரே. சில நாழிகை இந்துமாக்கடலில் புனலாடித் திரும்பினேன். கடலில் மீண்டு அறையில் புதுப்பித்து உடைமைகளுடன் தயாராக, சஜீவனும் சாருஜனும் அறைவாசம் செய்திருந்தனர்.

விடுதியின் வாகனம் காத்திருப்பதாய்த் தகவல் வர, மூவரும் கீழே வந்தோம். அவர்களுக்கு நான் விடைகொடுப்பதா எனக்கு அவர்கள் விடை கொடுப்பதா என நினைத்துக் கொண்டிருக்கையில் ஓட்டுநர் விடுதிக்கு விடைகொடுத்து மகிழுந்தை இயக்கினார். அவர் தமிழரென்பதால் அருகில் உள்ள தமிழ்க்கோயில் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். பின், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் இலங்கைப் பெட்ரோல் நிலையத்தில் எரிபொருள் நிரப்பி, தமிழகத்திற்குப் பொருட்கள் வாங்க ஒரு கடையில் நிறுத்த, நிறைவில் விமான நிலையத்தில் இறக்கிவிட்டார்.

இரவு அறையும், இந்த வாகனமும் போட்டி ஏற்பாட்டாளர்களே ஏற்பாடு செய்திருந்தனர். பண்டார நாயக்க விமானநிலையத்தில் உள்நுழைந்து கடவுச்சீட்டில் முத்திரை பதிய அதிகாரப்பூர்வமாக அங்கிருந்து பிரிந்தாயிற்று. வானூரும் வாகனத்தில் ஆயு போவன் என விளித்த பேரிளம்பெண்ணை வணங்கி ஈற்றிருக்கையில் அமர சில விடயங்கள் முன் வந்தன.

கண்ணுற்ற பெரும்பான்மையான பொது இடங்களில் மும்மொழிக்கொள்கையே நடைமுறையில் உள்ளது. முதலில் சிங்களம் பின்னர் தமிழ், இறுதியாக ஆங்கிலம் எனும் கட்டமைப்பில் பெயர்ப்பலகைகள் இருந்தன. நான்கு நாட்கள் இலங்கைத் தமிழர்களிடம் பேசியதில் அடிப்படையான சிலசொற்பயன்பாடு மாற்றமுற்றிருந்தது.

தமிழ்நாட்டு வழக்குச்சொற்கள் - இலங்கைத்தமிழ் வழக்குச்சொற்கள்

ஆம் - ஓம்
அப்படியா? - அப்படியோ?
போயிட்டு வரேன் - போட்டு வாரேன்
எப்படி - எப்பிடி
காதல் - விரும்புனம்
தவறு - பிழை
பேசுவது - கதைப்பது
உட்காருங்கள் - இருங்கள்
பட்டமிளகாய் - செத்த மிளகாய்
ஆப்பிள் சீமை - இளந்தைப் பழம்
அன்னாசி - முகுழம்

இவை தாண்டி ஒன்று இருந்தது, ஒருவேளை ஆபத்தில் மாட்டிக்கொண்டால் "மம சிங்கள" என்பதைச் சொல்ல அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கான தேவை அன்றைக்கு ஏற்படவில்லை.

வானூர்தி வான் ஏற, மேகங்கள் மேலும் கடல்வெளி கீழும் இருந்தது. பின் மேகங்களுக்கு மேலும் செல்ல, வானம் எப்போது வசப்படும் என்பதாய் உணர்வு! ஏதொன்றும் நிதானமாய்ச் சிந்தித்து யாசித்திட முடியா அளவுக்கு வான்வெளி அதிசயங்களைச் செய்து கொண்டிருந்தது. இலங்கை நினைவுகளைச் சுமந்தவாறே இந்தியா வந்ததை உறுதிசெய்தது, கடல்தாண்டிக் கண்ணுற்ற பச்சை நிலப்பரப்பு.

திருச்சி விமானநிலையத்தில் இந்தியாவில் குடியேற்றம் செய்ய, தலைகீழாக வந்தது உடைமை. இவர்களின் பொறுப்பின்மையால் பையினுள் வைத்திருந்த பாராட்டுச் சான்று உடைந்திருந்தது அறியாது எடுத்துச்சென்றேன் சராசரி இந்தியக் குடிமகனாய். வீட்டிற்கு வருகையை உறுதிசெய்ய நான்கு நாள் கழித்து, பேசியில் உயிர்த்திருந்தது டவர். திருச்சிப் புறநகரில் திருவாரூர்ப் பேருந்து ஏறிட, மாலை தோய்ந்த இரவில் கூடடைந்தேன். ஆரத்தி எடுத்த அந்த இரவில் அடுத்த நாள் பல்கலைக்கழக மொழியியல் தேர்வுக்காக விழிக்கவேண்டியிருந்தது.

இவ்வாறு 2017ஆம் ஆண்டின் 365 நாட்களில் ஈரிருநாள் இலங்கையில் நிறைந்தது! இன்னும் எத்தனைக் கடல்கடந்த பயணங்கள் (பேசச்)சென்றாலும், முதல்பயணம் என்பதே முழுமையும் வழிநடத்தும்.

– தொடர் முற்றும், பயணம் தொடரும் ■

• புதுமைப்பித்தன்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# பொன்னகரம்

புதுமைப்பித்தன் எள்ளல்தொனியுடன் சமூகத்தை விமர்சனம் செய்யும் படைப்புகளை உருவாக்கியவர். சொ.விருத்தாசலம் என்பது இவரது இயற்பெயர். கடலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தவர். திருநெல்வேலி மற்றும் சென்னையில் வாழ்ந்தவர். 1933இல் காந்தி இதழில் இவரது முதல் படைப்பு 'குலோப்ஜாமூன் காதல்' வெளிவந்தது. பத்திரிக்கை மற்றும் திரைப்படத் துறைகளில் பணி புரிந்திருக்கிறார். நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், பதினைந்து கவிதைகள் ஆகியவற்றுடன் நாடகங்கள், மொழிபெயர்ப்புகள், நூல் விமர்சனங்கள், கட்டுரைகள் என எழுதிக்குவித்தார். நவீனத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி எனக் கருதப்படுகிறார். தன் படைப்புகள் குறித்து அவர் கொண்டிருந்த கருத்து: "வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்துவிட்டவைகளும். அவை உங்கள் அளவுகோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியல்ல, நான் பிறப்பித்து விளையாடவிட்ட ஜீவராசிகளும் பொறுப்பாளிகளல்ல; உங்கள் அளவுகோல்களைத்தான் என் கதைகளின் அருகில் வைத்து அளந்து பார்த்துக்கொள்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன்."

பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல் அங்கு ஒன்றுமில்லை. பூர்வபுண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதனப்படவேண்டிய விதிதான். ஒரு சில 'மகாராஜர்களுக்காக' இம்மையின் பயனைத் தேடிக்கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அதுதான் அங்கு 'மெயின்' ராஸ்தா. கைகோர்த்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம்.. எதிரே வண்டிகள் வராவிட்டால். இதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு. முயல் வளைகள் போல்.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால்... சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக்கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக 'முனிசிபல் கங்கை' அல்ல, யமுனைதானே கறுப்பாக இருக்கும்? அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி, அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக் கூடுகள் - ஆமாம், வசிப்பதற்குத்தான்!

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை. சாதாரண எண்ணெய் விளக்கு, அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றி வைத்தால் போதாதா?



பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன் பிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம், ஊசிய வடை, இத்யாதி உருண்டு வரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக்கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? 'போனால்' பெற்றோருக்குத்தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள்தான் என்ன, 'கிளாக்ஸோ' 'மெல்லின்ஸ் பூட்' குழந்தைகளா, கம்பி இடையில் போக முடியாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று "குட்மார்னிங் சார்!" என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கலகல வென்று உயிர் பெற்று இருக்கும். அப்பொழு திருந்துதான் அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்கவரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்.

இள வயதில் நரைத்தது போல் பஞ்சு படிந்த தலை, மாசடைந்த கண்கள். விடிய விடிய மின்சார 'ஸ்பின்டிலை'ப் (கதிர்) பார்த்துக் கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள்தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா, விஷக் கிருமிகள், காலரா இத்யாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன! எப்படியாவது உயிர் வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன், புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்துவந்தான்; அவைகளும் அவனைக் கொன்றன; அவனும் அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமையற்று, வம்சத்தை விருத்திசெய்யாமல் செத்தொழிந்தாப் போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை, அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கருப்புக் கயிறு வாழ்க்கைத் தொழுவின் அறிகுறி. அதைப் பற்றி அங்கு அதிகக் கவலையில்லை. அது வேறு உலகம் ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது இருபது அல்லது இருபத்திரண்டிற்கு மேல் போகாது. புருஷன் 'ஜட்கா' வைத்திருக்கிறான்; சொந்த வண்டிதான். அம்மாளு, முருகேசன் (அவள் புருஷன்), அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை ஆக நபர் ஐந்து சேர்ந்தது அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு (குதிரை உள்பட), வீட்டு வாடகை, போலீஸ் 'மாமூல்', முருகேசன் தம்பி திருட்டுத்தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு - எல்லாம் இதற்குள்தான். எல்லாரும் ஏகதேசக் குடியர்கள்தான். 'டல் ஸீஸ'னில் பசியை மறக்க வேறு வழி? பசி, ஐயா, பசி! 'பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒருநாள் இருந்தால் உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி. அவனும், அவன் குதிரையும் 'தண்ணி போட்டு' விட்டு ரேஸ்விட்டார்கள். வண்டி 'டோக்கர்' அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்குப் பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டு வந்து போடும்பொழுது பேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுதுதான் சற்று பேசினான். அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுவுக்குக் கூலிபோட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?

அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

'கும்'மிருட்டு. பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வரவேண்டும். ஆனால் அது மேகத்தில் மறைந்துகொண்டால் முனிசிபாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது. திரும்பி வருகிறாள்.

சந்தின் பக்கத்தில் ஒருவன் - அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவன்.

இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்துவிட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்! ■

• கவி: ஹரணி
சித்திரம் : அழ.ரஜினிகாந்தன்

# வாழ்ந்து கெட்ட வீடு

வாழ்ந்து கெட்ட வீடு என்றார்கள்
வாழ்ந்ததும் கெட்டதும்
இடிந்துகொண்டிருக்கிறது..

விழாநாட்களில் அந்த வீடுமட்டுமே
பெருங்கூட்டத்தில் கொண்டாடும்
எனச் சொல்லாதவர்கள் பிறந்திருக்கவில்லை..

மரமும் செங்கல்லும் ஜன்னலும் இன்னபிறவும்
ஒவ்வொரு வண்டியிலேற்றி ஒவ்வொரு
திசையாய்ப் பகிர்ந்து பயணப்படுகிறது...
வாழ்ந்து புதைந்தவர்களின் மூச்சுக்காற்றில்
பறப்பதுபோல மேலெழும்பியடங்குகின்றன
புழுதித்துகள்..

புழுதியில்தான் எல்லாத் தொடக்கமும்
எல்லா முடிவுகளும் என்பதை ஏனோ
இடிவதற்கு முன்பு இங்கிருந்த வீடு
சொல்லியிருக்கலாம் யாரிடமேனும்
எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது

எதிர்பாராத் தாக்குதலில் கரப்புகளும்
பூச்சிகளும் பாச்சைகளும் வண்டுகளும்
நிரந்தர இருப்பின்மைச்சிதைவில்
தடுமாறியலைகின்றன புழுதிகளின்மீதாக
போவோர் வருவோரின் பார்வையில்
தடுமாறும் இந்த வீட்டின் நினைவைப்போல..



நாடக வடிவில்
சங்க இலக்கியம்

• வடிவம் : பழநியப்பன் கிருஷ்ணமூர்த்தி



# உள்ளதைச் சொல்! உண்மையைச் சொல்!

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே

**– இறையனார் (குறுந்.2)**

தலைவனும் தலைவியும் அருகருகே அமர்ந்திருக்கின்றனர். தலைவி, தலை கவிழ்ந்த வாறு எங்கோ எதையோ பார்த்தவாறு இருக்கிறாள். தலைவன் தலைவியின் கவனத்தைத் தன்னை நோக்கித் திருப்பவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடுகிறான்.

**தலைவன் :** அங்கே என்னத்தைப் பார்க்கிறாய்? என்னைப் பாரேன்!

**தலைவி :** (மறுக்கும்விதமாகத் தலையசைத்து அவளுக்கே கேட்காமல் சொல்கிறாள்) மாட்டேன்!

**தலைவன் :** (என்ன செய்வதென்று யோசித்து, அவளுடைய தலையை மென்மையாகத் தடவியவாறு, அவள் தலையிலிருந்து ஒரு வண்டை எடுத்து அதனிடம் பேசுகிறான்) ம்.. வா இங்கே.. வெகுநாட்களாக உன்னைக் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன். இன்றுதான் என் கையில் வசமாக மாட்டிக் கொண்டாய்!

**தலைவி :** இதென்ன விளையாட்டு? அதை விடுங்கள்!

**தலைவன் :** விளையாட்டெல்லாம் ஒன்று மில்லை. இன்று அதனிடம் ஒரு கேள்வி கேட்கப்போகிறேன். அது நமக்கு விருப்பமான ஒன்றைச் சொல்லாமல் உண்மை என்ன என்பதைக் கூறவேண்டும்.

**தலைவி :** உங்களுக்கென்ன பைத்தியமா பிடித்துவிட்டது? வண்டு எப்படிப் பேசும்? ஐயோ! (தலையில் அடித்துக்கொள்கிறாள்).

**தலைவன் :** சும்மா இரு! உனக்கு ஒன்றும் தெரியாது. காதல் வந்துவிட்டால் வண்டும் பேசும்! நண்டும் பேசும்!

**தலைவி :** எங்கே.. பேசச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

**தலைவன் :**இங்கே பார்! வண்டே உன்னைப் போல, காற்று கூட பூக்களிடம் பழகியிருக்காது என்பதால் உன்னிடம் இதைக் கேட்கிறேன். பூக்களின் மேல் படிந்து அதனோடு உறவாடியிருப்பதால் உன்னால்தான் இந்தக் கேள்விக்குச் சரியான பதிலைக் கூறமுடியும். அதோடு என் தலைவியின்..

**தலைவி :** ஐயோ! ஏன் இப்படி வண்டைப் போலச் சுற்றிவளைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? கேள்வியை முதலில் கேளுங்களேன்.

**தலைவன் :** நீ பழகிய பூக்களுடன் என் தலைவியின் கூந்தல் நறுமணத்தையும் நுகர்ந்திருக்கிறாய் அல்லவா? இப்போது சொல்! என் தலைவியின் கூந்தலைவிட எந்தப் பூவில் நறுமணம் மிகுந்து இருக்கிறது?

தலைவி மீண்டும் தலைகவிழ்கிறாள். ■

**படைப்பு அறக்கட்டளை | படைப்பு கவிதை மின்னிதழ் | படைப்பு பதிப்பகம் | படைப்பு 'தகவு' - கலை இலக்கிய திங்களிதழ் | படைப்பு இணையதளம் வரிசையில் இப்போது படைப்பு வலையொலி வாசல் திறக்கிறது உங்களுக்காக...**




ஒருகாலத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் ஒளிபரப்பாகும் 'ஒலியும் ஒளியும்' நிகழ்ச்சி எப்படி நம்மையெல்லாம் மகிழ்வித்ததோ அதே போல இனி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நமது 'படைப்பு – ஒலியும் ஒளியும் கவிதைத் துளியும்' கவிதை கீதம் படைப்பு வலையொலி (யூடுப்) மூலம் தொடர்ந்து வெளிவர இருக்கிறது என்பதை மகிழ்வுடனும் பெருமையுடனும் அறிவிக்கிறோம்.

இதுவரை எழுத்து வடிவில் மட்டுமே உறவாடிக் கொண்டிருந்த படைப்பாளிகள் இனி ஒலியும் ஒளியுமாக கவிதைத் துளியுமாக உலகெங்கிலும் உங்கள் படைப்புகளை காற்றில் ஆடும் கீதமாக கொண்டு செல்ல இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

உங்களுடைய ஆதரவை லைக்கும் சப்ஸ்க்ரைப் பட்டன்கள் அழுத்துவதன் மூலம் அறிய தருகிறோம்.

• www.padaippu.com •


# படைப்புப் பதிப்பகம் வெளியீடுகள்

நூல்களைப் பெற - 97908 21981




• www.padaippu.com •